
செங்குந்தமித்திரன்
தென்னிந்திய
செங்குந்த மகாஜன சங்கத்தின்
மாதவெளியீடு
காரியாலயம்:—
பவழக்காரத்தெரு, சென்னை.

எங்கள் மருந்துச்சாலை கடந்த 25 நடகாலமாய் உள்ளூரிலும், வெளியூரிலும அநேக
ப நோயாளிகளுக்கும் மருந்துகள் செய்து அனுப்பி அவர்களுடைய நன்மதிப்பை
றது. அநேக நண்பர்கள் இவ்வளவு சிறந்த மருந்துகள் வெளியூர்களிலுள்ள நண்பர்களு
காமல் போய்விடுகிறதென்பதை உணர்ந்து வற்புறுத்திச் சொன்னதின்மேல்விளம்பரம் (
ளோம். நண்பர்கள் பலரும் எங்களுடைய மருந்துகளை யாதொரு பயமுமில்லாமல்
நலன்மைந்து எங்களை மேன்மேலும் ஊக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

முதலாவதாக நாட்டுமக்கள் ஒவ்வொருவரும் திடகாத்திர முள்ளவர்களாக விளங்
அவசியம். தற்கால இளைஞர்கள் பாலிய சேஷ்டையாலும் மிதமிஞ்சிய போகத்தாலும் உட
டுச் செல்லெரித்த மூங்கில்போல் மேலே மனிதராகவும் உள்ளே ஆண்மை இழந்த நிர்ப்பா
யிலும் இருக்கிறார்கள் ; இவர்களுக்கும், ஜுரம் முதலியவைகளால் பீடிக்கப்பட்டு ரத்தம் ெ
குன்றி இருப்பவர்களும், சாதாரணமாய் பல முள்ளவர்களாய், வீரிய முள்ளவர்களாய் இருக
ஒவ்வொரு ஆண் பெண் இருபாலர்க்கும், உலகவாழ்க்கையின் இன்பத்துக்கும், ஆண் சிங்கம் போ
தருவதற்கும், ன்ற ப

# நாராயணசஞ்சீவி லேகியமும் அயத்தங்கச்செந்தூரமும்

மிக்கச் சிறந்தவை என்று உறுதி கூறுகிறோம்.

இந்த லேகியம் செந்தூரம் சித்த வைத்திய முறைப்படி மிக ஜாக்கிரதையாயும் முறைதவறாமலு
முடிக்கப்பட்டது. வைத்திய முறைப்படி இதைக்காட்டிலும் சிறந்த பலம் தரும் மருந்து வேறொன்றும் செய்
றில்லை.

## இந்த லேகிய செந்தூரங்களால் தீரும் முக்கிய வியாதிகள்.

தற்காலம் மானிட வர்க்கத்தை நிழல்போல் தொடர்ந்து அரிக்கும் 20 வகை மேக
குன்மம், பித்த பாண்டு, சூலை, ஓடு வாய்வு, கை கால் முடக்கு, நெஞ்சு தொண்டை எரிச்சல், ரோகங்கள்
அஜீர்ணம், வயிற்றுப்பிசம், பசியின்மை, சோம்பல், நித்திரை வாராமை, நீர் இறங்கும்போது எரித்த எப்பம்
யாத பாதையைத் தரும் தந்திமேகம், தாது நஷ்டம், தேக உளைச்சல், கண்களில் நீர் வடிதல் முதலிய விய
திகள் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். பயங்கரமான மேகவியாதிகளைப் போக்கி தேகத்தைப் புஷ்டி
யாக்கிச் சப்த நரம்புகளும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியை உண்டாக்கும்.

மனக் கவலையினாலாவது துர் அப்பியாசத்தாலாவது அடிக்கடிவரும் நோயினாலாவது மற்றெந்தக்
காரனத்திலாவது பலம் கெட்டவர்கள் நமது லேகிய செந்தூரங்களைச் சாப்பிடுவார்களானால் அழகு தேக
ரோக்கியம், தேக வலிவு முதலியவற்றைக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யும். நோயுள்ளவ
கள் தான் இவற்றைச் சாப்பிடவேண்டுமென்பதில்லை. நோயிலாதவர்களும் இவற்றை ஆரோக்கியத்திற்
காகச் சாப்பிடலாம். இதற்கு பத்தியமே கிடையாது. காலதேச வர்த்தமானமில்லாமல் எல்லா கால
களிலும் சாப்பிடலாம். பசிஅதிகமாய் எடுக்குமாகையால் ஜீரணிக்கக்கூடியதும் கொழுமையுள்ளதுமா
ஆகாரங்களை வேளை தவறாமல் சாப்பிடவேண்டும். இச்சிறந்த லேகிய செந்தூரங்களை டைரெக்ஷன
சொல்லியபடி 48 நாள் சாப்பிடுவார்களானால் அவை தேகத்தில் ஊறி மேகங்களை நெருப்புப்பொறி ப
பஞ்சுப் பொறியென நாசம் செய்து, புதிய ரத்தத்தை உற்பத்தி செய்து தேகத்தை இளைக்காமலிரு
செய்யும். இவற்றை ஒற்றுமையாய் மனைவியும், கணவனும் ஏககாலத்தில் சாப்பிட்டால் அவர்களு
உற்பத்தியாகும் குழந்தைகள் மிக அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும்.

24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் ஒரு புட்டி செந்தூரமும் ரூ. 2-4-0. தபால்செலவு அலு
48-நாள் மருந்து தபால் சார்ஜ் உள்பட ரூ. 4-12-0,

பினங்கு, சிங்கப்பூர், செட்டால் முதலியவெளிநாடுகளுக்கு24-நாள் மருந்து தபால்சார்ஜ் உள்பட
ரூ. 3-8-0. 48-நாள்மருந்து ரூ.6-4-0. வெளிநாட்டு அன்பர்கள் பூராவும் முன்பணமாகவே அனுப்பவேண்டும்.
**நாராயண சஞ்சீவித்தைலம்:**—பச்சிலை, மூலிகைகளாலும் பசும்பால் முதலிய பரிசுத்த வஸ்துக்களாலும்
மிகச் சுத்தமாக செய்யப்பட்டது. தேகவரட்ச்சியைப் போக்கி மூளையைக் குளிரச்செய்து புத்தி கூர்மை
யையும் ஆரோக்கியத்தையும் உண்டாக்கும். கடந்த 25-வருடகாலமாய் இதை ஆயிரக்கணக்கானவர்கள்
வாடிக்கையாய் வாங்கி ஸ்நானம் செய்து தேகாரோக்கியத்தோடு வாழ்ந்து வருகிறார்கள்.

5 பல டின் 1-க்கு விலை ரூ. 1-0-0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

**நாராயண தீராட்சைபழ லேகியம்:**—மலச்சிக்கலே எல்லா வியாதிகளுக்கும் காரணம். இதனால் நமது நாட்
டில் கோடிக்கணக்கானவர்கள் அவஸ்தைப்பட்டு அதைச் சரியாய் கவனிக்காமையினால் அநேகவித நோய்
களுக்கு ஆளாவதை நாம் நேரில் பார்த்திருக்கிறோம். அதற்கு இது திவ்வியமான மருந்து. சாப்பிடுவதற்கு
மிக ருசியாய் இருக்கும். இரவில் படுத்துக்கொள்ளும்போது ஒரு கெச்சக்காய் பிரமாணம் சாப்பிட்டு படுத்
துக் கொண்டால் காலையில் மலம் தாராளமாய்ப் போய்விடும். யாதொரு கெடுதலுமில்லை. தேகம் ஆரோக்
கியமாய் இருக்கும். டப்பி 1–க்கு விலை ரூ. 1-0-0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

ஒரு ரூபாய்க்குக் குறைந்த தொகைக்கு V. P. அனுப்பமுடியாது.



## ஸ்ரீ நாராயண மெடிகல் ஹால், காசீபுர

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| கடவுள் வணக்கம் பாமாலைப் பகுதி | **150** |
| பத்திரிகாசிரியர் முன்னுரை | 151 |
| கல்வி நிதிச் சீட்டு | 152 |
| சமயப் பகுதி:—இந்துதெய்வ தத்துவார்த்த விளக்கம் | 153 |
| இளைஞர் பக்கம்:—ஒரு சம்பாஷணை | 155 |
| சித்தாந்தப் பகுதி:—சமய நுண் பொருள்கள் | 159 |
| மாதர் பகுதி:—உணவியல் | 161 |
| நாவல் பகுதி:—சிந்தாமணி யெழுதிய சித்திரம் | 164 |
| ஆராய்ச்சிப் பகுதி:—முருகன் | 167 |
| தமிழ் மொழியும் தற்கால நிலைமையும் | 169 |
| சுகாதாரப் பகுதி:—காற்று | 170 |
| செங்குந்த யாத்திரைவாசி | 173 |
| வர்த்தமானம் | 175 |
| விகடத் துணுக்குகள் | 178 |
| ஆன்றோர் அமுத மொழி | 179 |
| நிருபங்கள் | 180 |
| செங்குந்தர் கிளர்ச்சி | 183 |
| பஞ்சாங்கம் | 188 |


## புவனகிரி யூனியன் போர்டு தலைவர் தேர்தல்

புவனகிரி யூனியன் போர்டு தலைவர் தேர்தலுக்காக (6-5-30) காலை 9-மணிக்கு டெம்பொரி தலை . ஸ்ரீமான். S. ராமஸ்வாமி அய்யங்கார் தலைமையில் ஷை யூனியன் போர்டு ஸ்பெஷல் மீட்டிங் நடை ற்றது. அதில் மாஜி தலைவர் ஸ்ரீமான் தெ. வி. ஆறுமுக முதலியார் அவர்களை தலைவராக. ஏகமன த் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். தலைச்சங்கத்திற்கு நன்கொடை ரூ. 1-0-0 வழங்கியுள்ளார்

## கடவுள் வணக்கம்

நின்னாவார் பிறரன்றி நீயே யானாய்
நினைப்பார்கண் மனத்தாக்கோர் வித்துமானாய்
மன்னானாய் மன்னவர்க்கோ ரமுத மானாய்
மறைநான்கு மானாயா றங்க மானாய்
பொன்னானாய் மணியானாய் போக மானாய்
பூமிமேற்புகழ்தக்க பொருளே யுன்னை
என்னானா யென்னானா யென்னினல்லா
லேழையேனென் சொல்லி ஏத்துகேனே. (ஸ்ரீ அப்பர் சுவாமிகள்

## கல்வி (கும்மி)

1. பரந்த உலகினில் நிறைந்த கல்வியொன்ற
பெருந்தனம் ஏதடி சொல்லுவாயே?
சிறந்தகல்விச் செல்வம் இல்லாது செகமதில்
திரவியம் சத்தியம் இல்லை இல்லை.

2. சிறந்தபொருட் செல்வம் இம்மைக்கு ஆமன்றி
சேயிழையே மோக்ஷ லோகத்திற்குத்
திடம்படக் கூறினேன் வாராது வாராது
தெளிந்திடு வாயிதை மிக்க நன்றாய்.

3. நல்லகல்விச் செல்வம் இம்மைக்கும் மறுமைக்
நல்கிடுமே நலன் நன்மையதாய் [கும்
தொல்லுல கினிலிதைக் கல்லாதுவிட்டிடில்
தோஷமன்றோ அடி சுந்தரியே.

4. பார்புகழ் அமெரிக்கா பிரான்ஸிங்கி லாந்தினில்
பரந்திடும் கல்வியால் தானே இன்று
நேர்புகழ் பல்வேறு காட்சிகள் நடப்பதை
நேர்மையாய்ப் பார்த்துநா மறிந்திலமே?

5. இன்னிசையாகவே இன்பமாய்ப் பாடிடும்
எழிலுறு போனோகிராப் புடனே
நன்மைபல்லாயிர மைலப்பால் நிகழ்ச் சேதி
நவின்றிடும் ஆகாயத் தந்தியோடு

6. மலைவனமாதிய வழிகள் கடந்துமே
விரைந்துசெல் மோட்டார் ரெயில்வண்டியும்
அலைகடலில் கொடிப் போதில் செலுங்கப்பல்
அருமையைக் கண்டும் நாம்துயில்வ தேனோ?

7. ஒருமணிநேரத்தில் மூன்னூறு மைல் முதல்
ஓடிடுதே வானத்தில் வண்டி இன்று
அருமையாய்க் கண்டு திகைக்கின்றோ மல்லா
அந்த முறைகளைக் கற்றதுண்டோ?

8. பார்த்தோர் மயங்கவே கலியுகப் பிரமனே
படைத்திட்ட இஞ்சின் மனிதனையும்
நேர்த்தியாய்ப் பார்த்துமே நித்திரை செய்வது
நேரிழையே இது ஞாயமோடி?

9. வல்லானைக் கொன்றோம்நாம் வான்குடியேற்றி
வன்மைநமக் கதிகமேயென்று [றோம்
பல்விதத்தாலுமே பெருமையைக் கொள்வதால்
பயனென் றுண்டோ அடிசுந்தரியே?

10. சண்முகசுந்தர னார்முத்தையா போன்ற
தருமகுலத் தொண்டு புரிந்து வரும்
புண்ணியர் முன்வந்த இந்நாளிலேயுமோ
போவது துயிலினி கல்லாதந்தோ!

11. செங்குந்த மக்களே கல்வியின் முன்படி
சேரா திருந்திடில் ஒட்டக்கூத்த
புங்கவர்முதலாய அனைவர்க்கு மவமானம்
பெருகிடச் செய்தவ ராவீர் ஆவீர்.

12. தோகைமா மயிலான் சோதரர் நாமென்றால்
தோன்றிடும் எண்ணமும் வீண் போமோ?
ஆகையால் குலமக்காள்! நாமினி அஞ்சாது
அடைவோமே முன்னேற்றம் கல்வியிலே.

சுபம்! வேலும் மயிலுந் துணை.

மு. க. வேலாயுதம்
சொக்கநாதன் பேட்டை, புதுவை.

# செங்குந்தமித்திரன்


தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

பத்திரிகாசிரியர் :—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

துணையாசிரியர் :—பண்டிதர் பி. செ. மாணிக்கவாசக முதலியார்.

தொகுதி—ச ] பிரமோதூத வருஷம் வைகாசி மாதம் [ பகுதி—ரு


## பத்திரிகாசிரியர் முன்னுரை

### இரண்டாவது மகாநாடு

நமது இரண்டாவது மகாநாடு காஞ்சியில் நிகழும் வைகாசி முடிவிலாவது ஆனி முதலிலாவது கூடவேண்டுமென்று பெருமுயற்சிகள் செய்து கொண்டு வந்தோம். இடையில் நாடெங்கும் சட்டமறுப்பு ஆரவாரங்களும் அது சம்பந்தமான குழப்பங்களும் பரவிக் கொண்டு வந்தன. இந்நிலையில் பல அறிஞர்கள் நமது மகாநாட்டினைச் சிறிது அமைதியும் தணிக்கையும் சமாதானமும் ஏற்பட்ட பிறகு கூட்டுதல் சிறந்ததென அபிப்பிராயப் படுகின்றனர். அதோடு, அரசாங்க அமைப்பின் சீர்திருத்தங்களைப்பற்றி ஆலோசிக்க நேரும் சமயத்தில் நம்மவர் மகாநாடு கூடி ஒரு அபிப்பிராயஞ் சொல்லுதலும் உசிதமெனக் கூறுகின்றனர். அவ்வபிப்பிராயங்களைத் தலைச்சங்க நிருவாகிகளும் மகாநாட்டு வரவேற்புச் சபையினரும் கவனித்து ஒரு முடிவுக்கு வருதல் அவசியமெனத் தோன்றுகின்றது. எனினும், இரண்டொரு விஷயங்களில் மட்டும் நாம் முன் செய்துள்ள தீர்மானத்தை மாற்ற வேண்டிய நிமித்தமில்லை. முதலாவது, இரண்டாவது மகா நாடு கூட வேண்டிய இடம் காஞ்சிபுரம் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. இரண்டாவது, மகா நாட்டுச் செலவுக்கு வசூலாகும் தரிவரி நன்கொடை முதலியன யாதொரு தாமதமுமின்றி வசூலாகிக் கொண்டே வர வேண்டியதுதான். சமூக மகாநாட்டுக் கூட்டங்கள் கூடுவது அரசியல் சம்பந்தமான விஷயங்களைப் பற்றி ஆலோசிப்பதற்கு மட்டுமல்ல; கூடும் சமூகத்தின் கல்வி பொருளாதார விருத்திகளுக்கான சீர் திருத்தங்களைத் தேடுவதற்கும், பரஸ்பர அந்நியோந்நிய விஸ்வாசம் அச்சமூகத்தினரிடையே பரவுதற்கான முறைகளை நாடுவதற்கும் இன்னோரன்ன நன்மைகளை அடைவதற்கும் என்பதையும் நண்பர்கள் உணரல் வேண்டும். அரசியல் சம்பந்தமான விஷயங்களைப்பற்றி மன்றாடுவதற்குப் பல வகுப்பினர்களும் சேர்ந்துள்ள அரசியல் சபைகளை நாம் நாடெங்கும் கூடக் காண்கிறோம். நம்மவர் மகாநாடு அவற்றின் நோக்கங்களை ஆக்கிரமித்துக் கொள்ள வேண்டிய அவசரம் ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை. எனினும், இரண்டொரு மாதந் தள்ளிக் கூடுவதிலும் யாதொரு குற்றமுமில்லை.

ம. ச.

## கல்வி நிதி

கல்வி நிதிச் சீட்டில் பரிசுகள் பெற்றவர்கள் தங்கள் சீட்டுக்களை அனுப்பிப் பரிசுப் பணங்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கான கடைசி தேதி மேமீ 30ௗ. அதற்கப்புறம் அனுப்பப் பெறும் சீட்டுக்களுக்குக் கண்டிப்பாய்ப் பணம் கொடுக்க இயலாது. பரிசு பெற்றவர்களின் அசிரத்தையாலும் தாமதத்தாலும் சீட்டுச் சம்பந்தமான கணக்குகளை முடிவாக்கித் தணிக்கை செய்வதற்கு இடைஞ்சலுண்டாகின்றது.

ம. ச.

---


(3) F

# திருக்குறள்

மூலமும்யும் பொழிப்புரைம்.

பொருளீட்டும்
கருத்தின்றி
தமிழ் நாகரீகத்தின்
புகழ்நாட்டும்
கருத்தோடு
நல்ல
கிளேஸ் காகிதத்தில்
பாக்கட் அளவில்
அச்சிடப்பட்டுள்ளது.

300 பக்கங்கள் உள்ள

பெரிய புத்தகம்

**விலை அணா எட்டு.**

இதுவரை இத்தகைய

உரை வெளிவந்ததில்லை.

சமத்துவம்
சகோதரத்துவம்
பெண்ணுரிமை முதலிய
தமிழ்நெறிபற்றி
எழுதப்பட்ட புத்துரை

தமிழர் அனைவரும்
ஓதி ஒழுகவேண்டிய
முக்கியமான நூல்.

"நவசக்தி" ஆசிரியர், திரு. வி. கலியாணசுந்தர முதலியார்
முதலியோரால் நன்கு மதிக்கப் பெற்றது.

**சோற்ப காப்பிகளே உள்ளன !**

**இன்றே ஆர்டர் செய்யுங்கள் ! !**

ஒரு புத்தகம் வேண்டுவோர் தபால் செலவு சேர்த்துப் பத்தணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். 2 அல்லது 3 புத்தகங்கட்கு வி. பி. உள்பட தபால் செலவு அணா 7. ஆறு புத்தகங்கட்கு அணா. 10.

செங்குந்த மித்திரன் புத்தகசாலை, பவழக்காரத் தெரு, சென்னை.


---

நீங்கள் உங்கள் கடமையைச் செய்து விட்டீர்களா ? இல்லையாயின் உடனே உங்கள் சந்தாவை அனுப்பி விட்டு ஒவ்வொருவரும் இயன்ற அளவு புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புங்கள்.



## சமயப் பகுதி

## இந்து தெய்வ தத்துவார்த்த விளக்கம்

(தொகுதி 4, 111-ம் பக்கத் தொடர்ச்சி)

### சண்முக மூர்த்தம்

[திருவாளர் வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள்]

இதுகாறுங் கூறியவாற்றால் சண்முக மூர்த்தியின் தத்துவார்த்தத்தைப்பற்றி யொரு சிறிதுணர்ந்தவர்களானோம். இனி இப்பெருமான் எல்லாம் வல்ல இறைவனாஞ் சிவனது நெற்றி விழியினின்று திருவவதாரஞ்செய்த வரலாற்றைப்பற்றி மீண்டொரு சிறிதறைவாம். முன்னொரு காலத்தில் தேவர் குலம் மேலிட்டு அசுரர் குலம் கலீணித்திருந்தது. அப்போது தேவர்கள் அசுரர்களை யிம்சித்திடுக்கண் செய்தார்கள். சிலகாலஞ் சென்ற பிறகு அவ்வரக்கர் குலத்தில் அசுரேந்திர னென்பானுக்கும் மங்களகேசினிக்கும் மகளாகச் சுரசையென்னும் ஒரு பெண் தோன்றினள். அசுரர் குல விருத்தியைக் கருதிய சுக்கிராச்சாரியர் அவளுக்குச் சகல மாயாவிஞ்சைகளையும் போதித்து, மாயையெனும் பெயரீந்து, பிரமபுத்திரனாகிய காசிபருடன் கலக்கச்செய்து, சூரபதுமன், சிங்கமுகன், தாருகன் முதலிய கொடிய அசுரக்கூட்டங்களைத் தோற்றுவித்தனர். அவர்கள் சிவபெருமானை நோக்கி அரிதாகிய தவத்தைச் செய்து அவரது வரப்பிரசாதத்தால் ஆயிரத்தெட் டண்டங்கட்கு மிறையாய்த் தலைமை யெய்தி யரசாளுரிமை பெற்று நூற்றெட்டுச் சதுர்யுகமாகத் தேவர்களைச் சிறைபுகுத்தி மிகவும் இம்சித்து வந்தார்கள். அதனால் மெலிவடைந்த தேவர்கள் பலகாலுஞ் சிவபெருமானை யடைந்து தங்குறைகூறித் துதித்து வருவாராயினர். கால அளவைக்குறித்துப் பெருமான் காலந்தாழ்த்துவந்தனர். பர்வதராஜ புத்திரியாராகிய உமாதேவியாரை மணந்து, திருக்கைலாயத்தின்கண் அம்மை சமேதராய் சிவபெருமான் வீற்றிருந்தருளுஞ் சமையத்தொரு பகல் சூரபதுமனுடைய கொடுமைக் காற்றாத தேவர்கள் அவனது கொடுமைகளைக்கூறி முறையிட்டார்கள். சர்வஜீவ தயாபர மூர்த்தியாகிய பெருமான், அவர்களுக் கபயம் நல்கித் தேவர்களிடுக்க ணீங்கவும், தயித்தியர் குலம் வேரோடொழியவும் கருதித் தமது பழமையாகிய ஆறு திருமுகங்களையுங் கொண்டு அவைகளின் நெற்றிக் கண்களினின்றும் அக்கினிப் பொறிகளைத் தோற்றுவித்தனர். அவ்வாறு பொறிகளும் ஒருவரும் அணுகலாற்றா வெம்மைத்தாகி புலகெங்கும் பறந்தன. அப்போது வாயுக்கள் உலைந்து ஓய்ந்தன. கடல்நீர் வற்றிற்று. வடவாமுகாக்கினியுந் தன் செருக்கு நீங்கிற்று. பூமி பிளந்தது. மலைகள் நெகிழ்ந்தன. அட்டமா நாகங்களும் நெளிந்து வாடின. திருமால் முதலிய தேவர்கள் திகைத்தோடினர். பார்வதியாரும் தனது பாதச் சிலம்பு குலுங்க மணிகள் சிதறப் பயந்தோடி நீங்கினர். ஆனால் அவைகள் உலகுயிரைப் புரத்தற்குத் தோன்றியவை யாதலின் எதையும் நாசஞ் செய்தில. தேவர்கள் நடுநடுங்கிப் பயந்து ஓலமிட்டனர். அதற்குக் கருணாநிதியாகிய பெருமான் "அமரர்களே அஞ்சன்மின் !" என்று கூறி அவ்வாறு பொறிகளையும் தன்முன் வருமாறு கருதினர். உடனே அவைகள் முன்போல் சுருங்கி வந்து நின்றன. அக்கினி தேவனையும் வாயுதேவனையு மழைத்து, அப்பொறிகளைக் கங்கையாற்றில் விடுவித்தனர். கங்கையுமாற்றாது வறண்டது. சிவபெருமான் திருவருளை யறிந்து கங்கையானது அப்பொறிகளைச் சரவணப்பொய்கையில் விடுத்தது. பொய்கையோ வறத்தலின்றிப் பண்டுபோல் பொலிவுற் றிருந்தது. அப்போது அருவமும் உருவுமாகி யநாதியாய்ப் பலவாயொன்றாய்ப் பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பே, ஆன்மாக்கள் அறிந்துய்யும்பொருட்டு ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு கரங்களுங்கொண்டு சண்முகக் கடவுளா யவதாரஞ் செய்தது. ஆகாயத்தில் துந்துபி யொலித்தது. வேதங்க ளாரவாரித்தன. பிரமவிட்டுணு முதலிய தேவர்கள் பூமாரிபெய்து "அடியேங்கட் கருள் செய்க" என்று துதித்துச் சூழ்ந்தார்கள். உலகிலுள்ள சராசர தோற்றங்கள் யாவற்றிற்கு முவகைக்குறிக ளுண்டாயின. சூரபதுமன் முதலிய அசுரக்கூட்டங்களுக்குத் தீய நிமித்தங்கள் காணப்பட்டன. மனோவாக்கினுக்கெட்டா பரிபூரணராகிய முழுமுதற்கடவுள், ஆறுமுக முடையராய்த் தோன்றி ஆன்மாக்களிடத்துள்ள மிக்க பேரருளுடன் செந்தாமரை மலரில் வீற்றிருந்தருளினர். பின்னர் சரவணத்திடை கார்த்திகைமாத ரறுவரால் வளர்க்கப்பெற்று, உமாதேவியாரால் கைலாயங் கொணரப்பெற்று, மேடமூர்தல், அயனைச் சிறைபுரிதல், விடுத்தல், பிதாவுக்குப் பிரணவோபதேசஞ் செய்தல் முதலிய பல இலீலா விநோதங்களைச்செய்து சத்திவேற் பெற்றுச் சிவபெருமானுக்ஞையின்படி வீரவாகாதி செங்குந்தத் தலைவர்களைத் தமக்குப் படைத்துணையாகப்பெற்றுச் சூரபதுமன் முதலிய அசுரக்கூட்டங்களை யெல்லாம்

வென்று தேவர் சிறை மீட்டுத் தேவசேனையைத் திருக்கலியாணஞ்செய்து, வள்ளியம்மையாரைக் களவியலில் மணம்புணர்ந்து, மயிலை வாகனமாகவுங் கோழியைக் கொடியாகவுங் கொண்டு விளங்கினர். இருமாதர்களும் புடைவிளங்க மயிற்பரியிவர்ந்து, பதினொரு படைகளும் வேலும் பன்னிரு கரத்திலங்க, ஆறு திருமுகங்களும் பொலிய, வீற்றிருந்தருளுங் கோலமே சண்முக மூர்த்தமெனப்படும்.

இம்மூர்த்தி சரவணப்பொய்கையி லுதித்தமையால் "சரவணபவன்" என்றும்; விசாக நட்சத்திரத்தில் திருவவதாரஞ் செய்தமையால் "விசாகன்" என்றும்; கங்கையிடைத் தவழ்ந்து விளையாடி, அப்பெருந்தாயின் மடிமிசை வளர்ந்தமையால் "காங்கேயன்" என்றும்; கார்த்திகை மாதர்களின் றிருமுலைப்பாலுண்டு போஷிக்கப்பட்டமையின் "கார்த்திகேயன்" என்றும்; உமாதேவியாரால் ஆறு திருவுருவங்களும் ஒருங்கு சேர்ந் தமைக்கப்பட்டமையின் "கந்தன்" என்றும்; ஆறு திருமுகங்களோடுளலான் "ஆறுமுகன்" என்றும்; கடப்பமாலை யணிதலால் "கடம்பன்" என்றும்; தந்தைக்குப் பிரணவோபதேசம் புரிதலால் "தகப்பன்சாமி அல்லது சாமிநாதன்" என்றும்; கடைந்தெடுத்த ரத்தின தீபம்போன்றொளிர்தலால் "சுப்பிரமணியன்" என்றும்; மாறா இளமையையும் அழகையும் உடைத்தாயிருத்தல் பற்றி "குமரனென்றும் முருகனென்றும்" வேலாயுதத்தை யுடையதால் "வேலன்" என்றும்; அகத்தியன் முதலாயினோருக்குக் குருவாயெழுந்தருளுதல் பற்றிக் "குருநாதன்" என்றும்; அடியார்களது இதயமாகிற குகையைவிட்டு நீங்காமலிருக்கிறபடியால் "குகன்" என்றும் பல திருநாமங்களையுறுவர். தவிர,

"முடியாப்பிறவிக் கடலிற்புகார் முழுதுங்கெடுக்கு
மிடியாற்படியில் விதனப்படார் வெற்றிவேற்
[பெருமான்
அடியார்க்கு நல்லபெருமா ளவுணர்குலமடங்கப்
பொடியாக்கிய பெருமாள் திருநாமம் புகல்
[பவரே"

என்று நம் அருணகிரிநாதர் இவரது திருநாமப் பெருமை கூறியிருத்தல் காண்க. இம் மூர்த்தத் தா னறியப்படும் உண்மை யென்னவெனில், சண்முகக் கடவுள் மற்றைய தேவர், மனிதர், விலங்கு, முதலியவுயிர்கள்போல, மாதாவுதர்க்கணிருந்து, கருப்பாசயப்பை யுறுத்தல், சலம் பூரித்தல், உதிராக்கினிசுடுதல், பிராணவாயு முரித்துத் தள்ளுதல், யோனித் துவாரத்தா னெருக்குண்ணுதல் முதலாய கருப்பவாதனைப் படாமலும் அதோமுகமாய்த் தோன்றாமலும், சிவ வீரியத்தானே ஊர்த்துவ முகமாய்த் தோன்றிய ரென்பதும்; சிவாக்னையினின்று ஆறு பொறிகளாய்த் தோன்றலால் அக்கினி கோத்திரிகளாகிய அந்தணர்களால் முக்கியமாய் ஆராதிக்கப்படுகின்ற பிராமணத் தெய்வந் தாமே யென்பதும்; அக்கினி கொண்டு செய்யும் யாகத்திற் கதிபதியும், யாகபலத்தை யளிப்பவரும், யாகபரிபாலனரும் தாமே யென்பதும்; அயனைச் சிறை புரிதலாதி லீலா விநோதங்களால் தாமே பஞ்சகிருத்திய மூர்த்தி யென்பதும்; வரம்பிலாற்றலுடையவ ரென்பதும்; எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுக்கே பிரணவோபதேசஞ் செய்யலால் தாமே சகலலோக குருமூர்த்தி யென்பதும் மோக்ஷதாதா வென்பதும் புலனாகின்றன. இம்மூர்த்தியின் வழிபாட்டால் இம்மையில் சகல போகபாக்கியங்களையும், மாறா இளமையையும், கட்டழகையும், கல்வி, செல்வம், மனை, சத்புத்திரப்பேறு, தீர்க்காயுசு, சத்துருஜயம், இராஜவசியம், முதலிய சர்வாபீஷ்டங்களையும்; மறுமையில் அழிவிலின்ப நிரதிசயானந்த முத்திப் பேற்றையு மடையலாமென்பது திண்ணம். கற்றறிந்த பெரியோர் இம்மூர்த்தத்தைப் பலவாறு உருவகப் படுத்திப் பல ஞானார்த்தங்களைக் கற்பித்துக் கூறுவர். இவரது பெருமையோ அளவு கடந்தது. ஆகையால் இந்து சகோதர! சகோதரிகளே! செங்குந்த குலச் சீரியர்களே! இத்துணை மாட்சி பெற்றிலங்கும் நங் குருநாதனாகிய சண்முக மூர்த்தத்தைப் பக்தி, சிரத்தை, வைராக்கியத்தோடும் அளவுகடந்த மெய்யன்போடும், வணங்கி வழிபாடாற்றி, இம்மை நலனும் மறுமை யின்பமும் பெற்று வாழ்வீர்களாக. இதற்கு நாம் வெற்றி வேலுடைக் கொற்றவன் றிருவருள் துணைபுரிவதாக. சுபம்.


# ஆனந்த விகடன்

(12,000, சந்தாதாரர்களுடையது)

80-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதாரர். நீங்கள் ஒரு வருஷத்திற்கு 960-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக் கூடாதா? தபால் கூலியுள்பட இந்தியா, பர்மா,

சிலோனுக்கு வருடசந்தா ரூ. 1—0—0 அயல் நாடுகளுக்கு முன் பணம் ரூ. 1—8—0

மாதிரி காப்பி இனாம். ஆனந்த விகடன் ஆபீஸ்,

தந்தி விலாசம்;—"விகடன்", சென்னை. 244, தங்கசாலை வீதி, மதராஸ், டெலிபோன் 3311.







ஒரு சம்பாஷணை

(ஒரு தலாபிமானி)

1930-ஆம் மார்ச்சு-மீ 2-ம் தேதி யன்று காலை சுமார் 7-மணி யிருக்கும். கொஞ்சம் கல்வி யுடையவனும் சமயப்பற்று சாதிப்பற்றுடையவனும் சுமார் 16 அல்லது 17 வயதுடையவனும் ஆகிய மீனாக்ஷிசுந்தர னென்னும் மாணவனொருவன் ஸ்ரீ குமரகுருபர ஸ்வாமிக ளியற்றிய நீதிநெறி விளக்கமென்னும் புத்தகத்தைக் கையிலேந்தி மிகுந்த சந்தோஷத்துடன் வாசிக்கத் தொடங்கினான். பின்னர் சிறிது நேரத்திற்குள் யாரோ ஒருவர் வருகிற சத்தத்தை யறிந்து வருபவர் யாரா யிருக்கலாமென யோசிக்கையில் தனது நண்பனாகிய கலியாணசுந்தரனைக் கண்டான். 'வருக வருக வென தாருயிர்த்தோழா வருக' என இன் சொல் கூறி, மிகக் களிப்புடன் அவனை வரவேற்று ஒரு ஆசனத்தமர்த்தித் தானும் அமர்ந்தான். பின்னரிருவருக்குங் கீழ்க் கண்ட சம்பாஷணை நிகழ்ந்தது.

கலியாணசுந்தரன்:—நண்பா, நானுன்னிடத்திலொரு விஷயத்தைக் கேட்டு மகிழ விரும்புகிறேன்.

மீனாக்ஷிசுந்தரன்:—மித்திரா, அதென்ன விஷயம்?

கலி:—நான் கேட்கும் விஷயம் வருடமொன்றுக்கு 1—8—0 ரூபாய் தவறாமல் செலுத்துகின்றவர்களுக் கெல்லாம் நன்றாகத் தெரியும். நீ மேற்சொன்ன ரூபாயைக் கட்டிவிடுகிறாய். ஆதலால் உனக்கு இவ்விஷயம் நிச்சயமாகத் தெரிந்திருக்கும். நான் தெரிந்து கொள்வதற்கோ வென்றால் என் தந்தை மிகுந்த பங்கராய் இருக்கிறார். அதனால் தெரிவதற்கில்லை. அவ்விஷயம் நமது கல்வி நிதியைக் குறித்ததாகும்.

மீனா:—அதுபற்றி உனக்கு என்ன தெரிய வேண்டும்?

கலி:—நமது கல்விநிதிக்குத் தற்போது லாட்டரி சீட்டால் வந்த ரூபாய் எவ்வளவு?

மீனா:—அது உனக்குத் தெரியாதா? நம் மூரிற்றானே பிரைஸ் குலுக்கப்பட்டது.

கலி:—ஆமாம் அது சமயம் நான் வெளியூருக்குப் போயிருந்தேன். அதனால் தெரிவதற்கில்லை.

மீனா:—ஆனால் சரி, லாட்டரி சீட்டால் செலவெல்லாம் போக,மிகுந்த ரூபாய்10,000.

கலி:—என்ன, இதுதானா மிகுந்தது?

மீனா:—இதைச் சேகரிப்பதற்கே தான் மிகுந்த கஷ்டமாகப் போயிற்றே.

கலி:—என்ன கஷ்டம்? நானே இரண்டு சீட்டு வாங்கினேனே.

மீனா:—உன்னுடைய தகுதிக்கு நீ 2 சீட்டு வாங்கினது மிகவும் பாராட்டற் பாலதேயாகும். ஆயினும், உன்னைப் பார்க்கிலும் செல்வத்தாலும் ஏனையவற்றாலும் உயர்ந்தார் நம்மவருள் எவ்வளவு பேர் வாங்காமலிருந்தார்கள்? இதெல்லாம் நாம் நேரிற் பார்த்தது தானே.

கலி:—சரி, போனதுபோகட்டும். அதைப் பேசுவதாலுள்ளதாகும் பயனென்னை? இனி, தற்போதுள்ள ரூபாயின் வட்டியைக் கொண்டு எத்தனை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங் கொடுக்கலாம்?

மீனா:—அதன் வருவாயைக் கொண்டு சுமார் 15 அல்லது 20 மாணவர்களுக்குத் தரலாமென்று நமது மித்திரன் ஆசிரியர் அறிவிக்கிறார்.

கலி:—20 மாணவர்களுக்கு மாத்திரம் உதவக்கூடிய பணமிருந்தாற் போதுமா? சுமார் 100 மாணவர்களுக்காவது கொடுக்கக் கூடிய ரூபாய் வேண்டாவா?

மீனா:—ஆமாம் அவ்வளவாவது இருக்க

வேண்டியது அவசியந்தான். ஆனால் அதற்கு நாம் என்ன செய்வது?

கலி :—என்ன அப்படிச் சொல்லுகிறாயே? எப்படியாயினும் மேற்குறித்த மாணவர்களுக்கு உதவக்கூடிய பணத்தைத் திரட்டுவதற்கொரு வழியை யோசிக்க வேண்டாவா?

மீனா :—சரி, யோசிக்கலாம்; நீ யேதாயினுமொரு வழியைக் கூறு. பின்னர் என் மனத்திற் றோன்றினாற் கூறுகிறேன்.

கலி :—எனக்குத் தோன்றுவ தென்னவெனில், நம்மூரிலுள்ள தறிகளுக்கெல்லாம் மாதம் 1-க்குத் தறி 1-க்கு 0—1—0 வீதம் வரிவைத்து வசூலித்தால் 2000 தறிக்கும் 125 ரூபாய் ஆகும். அதை மாதா மாதம் நம் தலைச்சங்கத்திற்கு அனுப்பினால் எவ்வளவு நன்மை யாகும்.

மீனா :—சரிதான்! முன் நம்மூரில் மாதம் 1-க்குத் தறி 1-க்கு 0—0—3 வரி வைத்தார்களே, அதைக் கொடுத்து விட்டார்களா? அதையே யின்னுந் தாராதவர்கள் இதைத் தருவார்களா?

கலி :—ஆமாம், இன்னும் தாவில்லை போல் தான் இருக்கிறது. தந்திருந்தால் நமது மித்திரனில் வெளிவந் திருக்காதா? இந்த 0-1-0 தருவதென்றால் மிகுந்த கஷ்டமாகத்தான் முடியும். ஆயினும் நீ யேதாகிலும் ஒரு வழியைக் கவனித்துக் கூறு.

மீனா :—நீ சொல்வது நன்றாயிருக்கிறது. 'பானையிலொன்று மின்றி அகப்பையி லென்ன வரும்?' என்னும் பழமொழிப்படி காலணாவும் இன்றிக் கல்விநிதியை எப்படித் திறட்டுவது. ஆயினும் நான் ஒரு வழியைக் கூறுகிறேன். அது நம்மூரிலுள்ள நம்மவர் அனைவரும் ஒற்றுமையுட னிருந்து பிரயத்தனப்பட்டால் இனிது முடியும் என்று நினைக்கிறேன். அது மகமை (வட்டம்) பிடிப்பதைப் பற்றியதாகும்.

கலி :—யார் பிடிக்கிறார்கள்?

மீனா :—ஆடிசன் பேட்டை ஜவுளிக் கடைக்காரர்கள்.

கலி :—ஆம், ஆம், ஜவுளிக் கடைக்காரர்கள் கொத்து, சேலை முதலியவற்றை நாம் கொண்டுபோய் அவர்களிடம் விற்றால் விலைக்குத் தக்கவாறு உரு 1-க்கு 0-1-0 விலிருந்து 0—8—0 வரையிலும் வட்டம் என்று வாங்கிய விலையில் பிடித்துக் கொண்டு மிகுதியைத் தருகிறார்கள். அது ஏன் பிடிக்கிறார்கள்?

மீனா :—தருமத்திற் கென்று பிடித்துக் கொள்ளுகிறார்களாம்.

கலி :—அவ்வளவையுமா தருமம் செய்கிறார்கள்?

மீனா :—இல்லை. இல்லை. உரு (கொத்து, சேலை) 1-க்கு காலணாவோ என்னவோ தருமம் செய்கிறார்களாம். அவர்கள் செய்கிற தர்மம் ஏகாம்பரநாதர் கோயிலுக்கு 0—0—1 யும், குமரகோஷ்டத்திற்கு 0-0-1 யுமாம். நமது ஸ்ரீகச்சபேஸ்வர சுவாமியார் கோயிலுக்குத் தம்பிடி கூடக் கிடையாதாம். இதையெல்லாம் இன்னும் நன்றாக விசாரித்துப் பின்னர் ஒரு சமயம் விளங்கக் கூறுகிறேன்.

கலி :—இதென்ன அநியாயம்! இவர்கள் (ஜவுளிக் கடைக்காரர்கள்) தருமம் செய்ய வேண்டுமானால், நம்மவர்களது பணத்தைக் கொண்டா செய்யவேண்டும்? இவர்கள் செய்கையானது கடைத்தேங்காயை யெடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பது என்னும் பழமொழியை ஒத்திருக்கின்ற தல்லவா? அந்தோ! இவர்கள் செய்கை நன்று நன்று! நான் இதுகாறும் சொந்தப் பணத்திலிருந்து தான் செய்கிறார்களென்று நினைத்திருந்தேன். இன்றுதான் இதனுண்மை விளங்கிற்று. இவர்கள் இவ்வாறு செய்வது இவர்கள் தகுதிக்கு ஏற்றதல்ல.

மீனா :—நீ கூறுவதெல்லாம் சரியே யாயினும் நாம் கவனிக்கற்பால தொன்று சொல்கிறேன். பெரிய காஞ்சிபுரத்தில் நம் குல வியாபாரிகள் ஏனைய வியாபாரிகளைப் பார்க்கிலும் 0-0-1 நம் கல்விநிதிக்காக அதிகம் பிடிக்கிறார்களே அது அநியாயமல்லவா?

கலி :—அநியாயமென்று நீ வாய் கூசாது எவ்வாறு கூறுகிறாய்? சின்னகாஞ்சிபுரத்தில் (ஆடிசன் பேட்டையில்) இருக்குமிவர்களைப் போலவா, 1-ரூபாயிற்கு மேல் 2 ரூபாய் தாளக்கூடிய உருவாயிருந்தால் 0-1-0 வும் 2 ரூபாயிற்குமேல் 3 ரூபாய் தாளக்கூடியதா யிருந்தால் 0-2-0 வும், இதுபோல ரூபாயிற்கு தக்கமாதிரி 0-8-0 வரையிலும் பிடித்துக் கொள்ளுகிறார்கள்? நம்குல வியாபாரிகள், 5 ரூபாய் அல்லது 6 ரூபாய் தாளக்கூடிய உரு (பீஸ்) வா யிருப்பினும், மகமை 0-0-3 வும், தருமச் செலவிற்காகத் தம்பிடியும் தானே பிடித்துக் கொள்ளுகிறார்கள். இவர்களும், மகமையாகவும் தருமச் செலவிற்காகவும் 0-0-4 தம்படி பிடித்துக் கொள்ளட்டுமே. இவர்கள் செய்கையானது அநியாயமாக 100-க்கு 3, 4, ரூபாய் வட்டி வாங்கும் கொடும்பாவிகளது செய்கையை ஒத்திருக்கின்ற தல்லவா? ஏன் இவர்கள் அதிகமாகப் பிடிக்கவேண்டும்?



மீனா :—மித்திரா, உன்மனமு மென்மனமும் ஒன்றாயிருந்தவாறு என்னே ஆச்சரியம்! நானும் இவ்வாறுதான் எண்ணியிருந்தேன். நிற்க, நங்குலத் துதித்த 5-லட்சம் செங்குந்தர்களது ஆதரவைப் பெற்று நடந்த கல்வி நிதிச் சீட்டினால் வந்த ரூபாய், 10,000, ஆனால் நம்மூரிலும் அடுத்த மூவூர்களிலுமுள்ள சுமார் 4000, 5000 செங்குந்தர்களாகிய நம்மவர்களால் ஜவுளிக் கடைக்காரர்களுக்கு மாதம் 1-க்கு வட்டமாக விடப்படும் ரூபாய், 8437-8-0 ஆகும். ஒருவருஷத்திற்குப் பார்த்தால் 101250 ரூபாய் ஆகிறது.

கலி :—என்ன ஆச்சரியம்! சுமார் 4000, 5000, செங்குந்தர்களால், 1 வருஷத்திற்குச் சுமாராக, 1,01,250 ரூபாய் ஜவுளிக்கடைக் காரர்களுக்கு வட்டமாக விடப்படுகிறதென்றால், இத்தனை வருஷங்களாக எத்தனை லட்ச ரூபாய் நம்மவர்கள் இவர்களுக்கு மகமையாக இழந்திருக்க வேண்டும்? இதைக் கணக்குப் பார்த்தால் இவ்வளவென்று சொல்ல முடியுமா? போனது போக, நீ சொல்லும் ரூபாய் எப்படி அவ்வளவு ஆகும்?

மீனா:—நான் ஆராயாமல் ஏதையுஞ் சொல்ல மாட்டேன். நம்மூரில் மாத்திரம் எத்தனைத் தறிகள் இருக்கும்?

கலி :—2000 தறிகள் இருக்கும்.

மீனா :—இத்தனைத் தறிகளிலும் எத்தனை உருக்கள் நெய்யப்பட்டுக் கடைத்தெருவிற்கு விற்கப்படுவதற்காகப் போகும்?

கலி :—ஏன், 1500 உருக்கள் (கொத்து, சேலைகள்) விற்கப்படுவதற்குப் போகும். எவ்வாறெனில், ஒருவன் 1-தறியில், 1-நாளைக்கு தன் வல்லமைக் கேற்ப, 1-கொத்து, அல்லது 1½ கொத்தும், வலுவில்லாதவன், முக்கால் கொத்தும் நெய்வான். ஆதலால் இந்த 2000-ம் தறிகளிலும் 1500 உருக்கள் நெய்யப்பட்டு விற்கப்படுவதற்காக ஜவுளிக்கடைக்குப் பிரதிதினமும் தவறாமல் போகும்.

மீனா :—இத்தனை உருவிற்கும் தினந்தோறும் எத்தனை அணா வட்டம் பிடித்துக்கொள்ளுகிறார்கள்?

கலி :—ஒரு உருவிற்குச் சராசரி 0-1-6 பிடித்துக்கொள்ளுகிறார்கள். இதற்குக் குறையாது என்பது என்னுடைய கருத்து. எவ்வாறெனில், முன்கூறியபடி விலைக்குத் தக்கவாறு 0-1-0 விலிருந்து 0-8-0 வரையிலும் பிடித்துக் கொள்ளுகிறார்கள். ஆதலால் சராசரி உரு 1-க்கு 0-1-6 வென்று கணக்குப் பார்ப்பது குறைவே தவிர அதிகமாகாது. ஒரு உருவிற்கு 0-1-6 அணாவானால், 1500 உருவிற்கும் 2250 அணாவாகிறது.

மீனா—நம்மூரிலேயே பிரதிதினம் 2250 அணா தெரியாமல் போய்விடுகிறது. வெளியூரிலிருந்து வந்து நம்மூர் கடைத்தெருவிற்கு விற்கப்படுவதற்குப் போகும் நம்மவர்களது உருக்கள் எத்தனை? அவற்றிற்கும் எத்தனை அணா ஜவுளிக் கடைக்காரர்கள் பிரதிதினமும் வட்டம் பிடித்துக் கொள்ளுகிறார்கள்?

கலி :—அவ் வுருக்களும், 1500-க்குக் குறையாமலிருக்கும். அவ்வுருக்களுக்கும் 2250 அணா வட்டமாகப் பிடித்துக்கொள்ளுவார்கள். எவ்வாறெனில், எத்தனையோ ஊர்களிலிருந்து வந்து நம்மவர்கள் விற்கிறார்களாம். அவ்வூர்களின் பெயர்களைச் சுருக்கமாகக் கூறுகிறேன். ஐயங்கார் குளம், பெருநகர், மானம்பதி, திருவோத்தூர், புதூர், பனப்பாக்கம், திருமால்புரம், வேம்பாக்கம், அரசனம்மாபேட்டை, வடமணப்பாக்கம், வரிதிபுரம், ஈஸ்வரபும், புதுப்பாக்கம், புதுப்பேட்டை, கோளேரிராயன்பேட்டை, திருநளம்பேட்டை, வெங்கடராயன்பேட்டை, திம்மம் பேட்டை, கருக்குப்பேட்டை, ராஜாம்பேட்டை, ஏகனும்பேட்டை, ஐயன்பேட்டை, என்பனவாம். இன்னும் எவ்வளவு ஊர்களிலிருந்து வருகிறதோ தெரியாது. சுருங்கக் கூறின் நம் காஞ்சியைச் சுற்றிச் சுமார் 15 அல்லது 20 மைல் தூரத்திலுள்ள நம்மவர்கள் நம் காஞ்சிக்கு வருகிறார்களாம். ஆகவே இத்தனை ஊர்களிலும் 2000-ம் தறிகளிருக்காவா? இத்தனைத் தறிகளிலும் 1500 உருக்கள் நெய்ய மாட்டார்களா? நான் சொல்வது மிகவும் குறைவேயாகும். ஆதலால் இதற்கும் 2250 அணா பிரதிதினம் வட்டம் பிடித்துக் கொள்ளுகிறார்கள்.

மீனா :—இதுவும், அதுவும் சேர்ந்து எவ்வளவு ரூபாய் பிரதிதினம் வட்டமாக ஜவுளிக் கடைக்காரர்கள் பிடித்துக் கொள்ளுகிறார்கள்?

கலி :—மொத்தம் 4500 அணாவாகிறது. இதற்கு ரூபாய், 281-4-0 ஆகிறது. ஒரு நாளைக்கே யிதுவானால், ஒரு மாதத்திற்கு, 8437-8-0 ஆகிறது. ஒரு வஷத்திற்கு 101250

ரூபாயாகும். ஆகவே நீ சொன்ன தொகை சரியாய் விட்டது.

மீன:—மித்திரா, இவ்வளவு ரூபாய் வீணுய்ப் போகிறதே. இதைத் தடுத்துக் கல்விநிதிக்குத் தரும்படி யேற்பாடு செய்ய வேண்டாவா?

கலி:—ஆமாம் செய்யவேண்டியதுதான், நம்மிருவரால் என்ன ஆகும்?

மீன:—ஒருவன் ஒரு மரத்தின்மேல் ஒரு கல்லை யெரிந்தால், அதிலுள்ள காயோ, பழமோ விழுந்தால் எடுத்து இன்பமாகப் புசிக்கப்போகிறான். விழாவிட்டால் அவன் என்ன செய்வான்? அதுபோல நாம் ஒரு யோசனை செய்வோம். அது முடிந்தால் முடியட்டும்; முடியாவிட்டால் நாம் என் செய்வது?

கலி:—அதென்ன யோசனை?

மீன:—நம்மூரில் இரண்டாவது மகாநாடு கூடப்போகிற தல்லவா? அம்மகாநாட்டில் இவ்விஷயமாக வொரு தீர்மானம் கொண்டு வரும்படிச் சிறப்பாகச் செங்கற்பட்டுஜில்லாச் செங்குந்தர்களையும், பொதுவாகத் தென்னிந்திய செங்குந்தர்களையும் கேட்டுக் கொள்ளுவோம். அவர்கள் இதை யேற்றுக் கொண்டால் கொள்ளட்டும். இல்லை, தள்ளி விடினும் தள்ளி விடட்டும்.

கலி:—நீ என்ன இப்படி நினைக்கிறாயே? அவர்கள் எவ்விதத்திலும் தள்ளமாட்டார்கள். கல்விநிதிக்கு அரும்பாடுபட்ட அவர்கள் எவ்வாறு தள்ளுவார்கள்? இதை நமது மித்திரன் மூலமாக அவர்களுக்குத் தெரிவிப்போம்.

மீன;—மித்திரா, நானும் அதுதான் எண்ணியிருந்தேன்.

பின்னர் இருவரும் கீழ்க் கண்ட வேண்டுகோளை மித்திரனில் பதிப்பிக்கும்படி, மித்திரனின் ஆசிரியருக்குக் கடிதம் எழுதி விட்டு, தத்தம் இருக்கையை யடைந்து, நஞ்செங்குந்த மித்திரனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

(வேண்டு கோள்)

செங்குந்த குலப் பெரியீர்,

நமது கல்வி நிதியைத் திரட்டுவதற்கு 5-லட்சம் செங்குந்தர்களாகிய நாமிருந்தும், குறித்த தொகையைத் திரட்டுவதற் கியலவில்லை. ஆனால், எங்கள் காஞ்சிபுரத்திலும் அடுத்த ஊர்களிலும் உள்ள சுமார் 4000, அல்லது 5000 செங்குந்தர்களாகிய நம்மவர்களால் ஒரு நாள் 1-க்கு 281-4-0 ஆக 1 மாதத்திற்கு 8437-8-0-வும், ஒரு வருஷத்திற்கு, 101, 250 ரூபாயுமாக ஜவுளிக்கடைக்காரர்களுக்கு வட்ட (மகமை) மாகக் 'கடுகுபோவதுதான் தெரியும்; மலைபோவது தெரியாது' என்னும் பழமொழிப்படி விட்டு விடப்படுகிறது. ஆதலால் இதைத் தடுத்து நம் கல்விநிதிக்குத் தருவதற்கேற்ற வொரு தீர்மானம் நமது இரண்டாவது மகாநாட்டில் கொண்டுவரும்படிச் சிறப்பாகச் செங்கற்பட்டு ஜில்லாச் செங்குந்த குலப்பெரியார்களையும், பொதுவாகத் தென்னிந்திய செங்குந்த குலப் பெரியார்களையும் மிகவணக்கமாயும், அன்புடனும் கேட்டுக் கொள்கிறோம்.

இரு குலாபிமானிகள்.


மாதம் 100 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை சம்பாதிக்கலாம்

**கைத்தொழில் முறைகள்**

(திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு)

இந்நூலின் முதற்பதிப்பு 2000 பிரதிகள் சில மாதங்களில் விற்றுப்போயின; இந்தியாவின் வறுமையையும் வேலையில்லாத்திண்டாட்டத்தையும் சூரியனை கண்ட பனிபோல் போக்கக்கூடிய அரிய புஸ்தகம், சோப்புகள், மெழுகுவர்த்திகள், பிஸ்கத்துகள், இங்கிகள், தீக்குச்சிகள், சகலவிதமான வாசனை சாமான்கள், மருந்துகள் இதுபோன்ற 1000 இரகசிய முறைகள் இந்நூலில் அடங்கியிருக்கின்றன. பிறர் உதவியின்றி நாமே தொழில் செய்து சம்பாதிக்கத்தக்க அரிய போதனைகள் அடங்கிய இந்நூலுக்கு விலை மிகவும் சொற்பம் என்பதைக் கவனியுங்கள்.

300 பக்கங்களுள்ளது. ஏரோப்ளேன் டிரேட் மார்க் உள்ளது. விலை ரூபா 1—8—0

வாஸன் புஸ்தகசாலை, 244, தங்கசாலை வீதி, மதராஸ்.




சிவமயம்

சிவ சண்முக மெய்ஞ்ஞான தேசிகன் றிருவடி வாழ்க.

# சித்தாந்தப் பகுதி

## சமய நுண் பொருள்கள்

(தொகுதி 4, 85-ம் பக்கத் தொடர்ச்சி)

[திரு. க. வச்சிரவேலு முதலியார், பி. ஏ.]

முன் அளவையாவது நாம் பொருள்களை யறிதற்குக் கருவியாகும் என்று கூறினோம். இங்கு அறிவு என்றது மெய்யறிவை; ஏனைய மயக்கவறிவை அன்று. மெய்யறிவு ஆவது பொருள்களை அவை இருந்தபடியே ஐயந்திரிபுகளின்றி அறிதல். உதாரணமாக ஒருகுடத்தை ஒருவன் குடம் என்று, அது உள்ளபடியே, அறிவானாயின், அவ்வாறு அறிந்த அறிவு மெய்யறிவு எனப்படும். இங்ஙனம் அன்றி, ஒருவன் ஒரு கயிற்றைக் கண்டு அது உள்ளபடி அறியாது அதனைப் பாம்பு என்று அறியின் அவ்வறிவு பொய்யறிவு ஆகும். இவ்வாறு ஒரு பொருளை அது உள்ளபடியன்றி வேறு பிரகாரமாக அறிதல் எல்லாம் பொய்யறிவே ஆகும். இது மயக்க அறிவு எனவும் படும்.

இனி ஐயம் என்பது ஒரு பொருளை இதுவோ அதுவோ என்று ஒன்றில் துணிவு பிறக்காது ஆராய்ந்து நிற்றல். இருளில் ஓர் உருவத்தைக் கண்டு அது மகன் என்றாவது அல்லது குற்றி என்றாவது துணியாது, 'இது குற்றியோ மகனோ' என்று இரட்டுற ஆராய்தலே ஐயம் ஆகும். திரிபு ஒரு பொருளை வேறு பொருளாகவே துணிந்து விடுதல். அதாவது குற்றியை மகனென்றே துணிதல். துட்டுற=இரண்டு (மாறுபட்ட) இயல்புகள் பொருந்த. ஐயம் சம்சயம் என்பன ஒரு பொருட் சொற்கள். திரிபு எனினும் விபரீதம் எனினும் பொருந்தும். இன்னும் சில நேரங்களில் எதிரில் பொருளின்றாகவும் முன் கண்ட பொருளின் நினைவின் வன்மையால் எதிரில் பொருள் இருப்பது போற் றோன்றும். ஒரு காமுகனுக்கு அவனால் விரும்பப்பட்டவள் உருவம் உருவெளியாகத் தோன்றல் போல். இதுவும் மெய்யறிவாகாது, நினைவு என்ற ஒரு குற்றம் ஆகும்.

இந்த ஐயம், திரிபு, நினைவு என்ற முக்குற்றங்களின்றிப் பொருளைத் தெளிவாக உள்ளபடியே அறிதலே மெய்யறிவு. இதற்குக் கருவியாவதே அளவை என்றபடி.

### ஆன்மாவின் உண்மையும் இயல்பும்.

இனி இவ்வளவையி னியல்பை வகுத்து உணர்தற்கு முன்னர் அவ்வளவைகளா லறிந்து வரும் ஆன்மாவி னியல்பை விளக்கின் அவ்வளவையியல்பு இனிது விளங்கும். ஆதலின் அவ்வுயிரியல்பை ஒருவாறு தெரித் துணர்த்துவேன்.

உணர்ச்சியும் விஷயமும்: நம்மறிவு, புறத்துப் பொருள்களாகிய மண், நீர், தீ, வளி முதலியவற்றை அறியும்போது, அப்பொருள்கள் நம்மறிவில் தட்டுகின்றன. அவ்வாறு அவை நம் அறிவில் தட்டும் போது ஒரு விளக்கம் நம் உளத்தில் உண்டாகின்றது. அவ்விளக்கம் புறத்துத் தோன்றும் பொருளின் இயல்பு முதலியவற்றை அடக்கிக்கொண்டு உள்ளது. அவ்விளக்கத்திற்குத் தான் உணர்ச்சி என்று பெயர். அந்த விளக்கத்தால் எப்பொருள் தோன்றுமோ அப்பொருள், அவ்விளக்கம் அல்லது உணர்ச்சிக்கு விடயம் என்று வழங்கப்படும். உதாரணமாக, நம் எதிரில் ஒரு மலர் இருக்கிறதாகக் கொள்வோம். அம் மலர் நம்மறிவில் தட்டுப்படும்; தட்டுப்பட, அம்மலரின் வடிவம், நிறம் முதலியவற்றின் விளக்கம் நம் உளத்தில் தோன்றும். இவ்விளக்கம் நம் உள்ளத்தில் நிகழுந் தோறும் அம்மலர் தோன்றும்; அம்மலரை நினைக்குந் தோறும் அவ்விளக்கந் தோன்றும். இவ்வாறு இவ்விளக்கத்திற்கும் அப்பொருளுக்கும் ஒன்றை ஒன்று விட்டு நீங்காத இயைபு உள்ளது. இத்தகைய விளக்கத்தை நாம் அம்மலரின் உணர்ச்சி என்றும் அம்மலரை அவ்வுணர்ச்சியின் விஷயம் என்றுங் கூறுகிறோம். இவ்வாறே ஒரு குடம் நம் எதிரில் இருப்பின் அதன் வடிவம் முதலியன நம் அகத்தில் விளங்குகின்றன. அவ்விளக்கம் குடத்தின் உணர்ச்சி எனவும் அவ்வுணர்ச்சி அகத்தே நிகழ்தற்குக் காரணமாகப் புறத்தே இருந்த குடம் அவ்வுணர்ச்சியின் விஷயம் எனவும் சொல்லப்படும்.

இனி, இவ்வுணர்ச்சியும் இதன் விடயமும் ஒரு கண்ணாடியின் உள்தோன்றும் நிழலும் (பிரதிபிம்பம்) அந்நிழலைத் தோன்றுவிப்பதாய கண்ணாடியின் புறத்தே உள்ள பொருளும் (பிம்பம்) போல, ஒற்றுமையுடையன. புறத்திலுள்ள பொருளின் (பிம்பத்தின்) ஒவ்வோரியல்பும் கண்ணாடியினுள் தோன்றும் நிழலிற் காணப்படும்; அப்பொருளின் ஒவ்வொரு அசைவிற்கும் நேரொத்த அசைவுகள் நிழலின்கண் நிகழும். அதுபோலப் புறத்துப் பொருள்களாய விடயங்களில் உள்ள ஒவ்வொரு

இயல்பும் எல்லா மாறுதல்களும் நம் அகத்தில் உண்டாகும் உணர்ச்சியில் நிகழ்கின்றன. ஆகவே இச்சம்பவத்தைக் கீழ்வருமாறு ஒரு முதல் நியாயமாகச் (axiom) சூத்திரிக்கலாம் (may formulate) அதாவது "நம் மகத்தில் நிகழும் உணர்ச்சியின் ஒவ்வொரு பகுதிக்கும் நேர் ஒத்த பகுதிகள் அதன் விஷயமாகிய பொருளிலும் இருத்தல் வேண்டும்" என்பது.

இங்கு முதனியாயம் (axiom) என்றது, ஆராய்ச்சி வேண்டாது தன்னியல்பாலேயே உண்மை என்று விளங்கக் கிடக்கும் ஓர் உண்மையைத் தெரிவிக்கும் ஒரு முற்றுத் தொடர்மொழியை. இம் முதனியாயம் எல்லாராலும் அநுபவத்தில் ஆராய்ச்சி வேண்டாது ஒத்துக்கொள்ளப்பட்டே உலகத்துப் பொருள்கள் அறியப்பட்டும் வழங்கப் பட்டும் வருகின்றன. ஆனால் அவ்வாறு அநுபவத்தில் கொள்ளப்பட்ட உண்மையை ஒழுங்கு படுத்தி ஒரு விதி வாய்பாட்டிற்குள் அடக்கி உரைத்தமையே என்னால் இங்குச் செய்யப்பெற்றது. இவ்வாறு ஒழுங்கு படுத்திக் கொள்ளின் அது மேன்மேலும் நம் அறிவைப் பற்றிய ஆராய்ச்சிக்குப் பெரிதும் துணை செய்யும்.

### பின்னிகழுணர்வும் ஆன்மாவினுண்மையும்

இப்பொழுது நாம் ஒரு குடத்தைக் காணும் போது முதலில் நம்மகத்தில் தோன்றும் உணர்ச்சி "இது குடம்" என்ற உணர்ச்சி ஆகும். இது முதலில் தோன்றுதலின் முன்னுணர்வு எனப்படும். இனி 'இது குடம்' என்று இங்ஙனம் அறிந்தபின்னர் 'நான் குடத்தை அறிந்தேன்' என்ற உணர்ச்சி நிகழும். இவ்வுணர்வு இரண்டாவது நிகழ்தலின் பின்னிகழ் உணர்வு எனப்படும். இப்பின்னிகழுணர்வில் மூன்று பகுதிகள் உள்ளன. அவை 'நான்' என்பதும் 'குடத்தை' என்பதும் 'அறிந்தேன்' என்பதும் ஆகும். இவ்வாறு உணர்ச்சியில் மூன்று பகுதிகள் காணப்படுதலின் அதன் விஷயத்திலும் அதாவது இவ்வுணர்ச்சியைத் தோன்றுவித்த பொருளிலும் மூன்று பகுதிகள் இருத்தல் வேண்டும் நாம் மேலே விதிவாய்பாடாக ஒழுங்கு படுத்திய முதனியாயப்படி. ஆதலின் அப்பகுதிகள் எவை என்று ஆராய்வோமாக. இங்குக்கூறிய பின்னிகழ் உணர்ச்சியாகிய 'நான் குடத்தை அறிந்தேன்' என்ற உணர்விற்கு விஷயமாவது இதற்கு முன்நிகழ்ந்த குடத்தைக்கண்டு 'இது குடம்' என்று அறிந்த முன்னுணர்வே யாகும். ஆதலின் 'நான் குடத்தை அறிந்தேன்' என்றதில் இரண்டாம் பகுதியாகிய குடம் என்ற உணர்விற்கு விஷயம் வெளியிலுள்ள குடம் ஆகும். மூன்றும் பகுதியாகிய 'அறிந்தேன்' என்ற உணர்விற்கு விஷயம் முன்னர் 'இது குடம்' என்று அறிந்த அறிவின் தொழிற்பாடு ஆகும். ஆனால் முதற்பகுதியாகிய 'நான்' என்ற உணர்விற்கு விஷயம் எது? அதற்குப் புறத்திலுள்ள பொருளொன்றும் விஷயமாகாது. ஆனால் 'இது குடம்' என்றும், இவ்வாறு அறிந்தேன் என்றும், இங்ஙனம் அறிந்தும், இவ்வுணர்விற்கு ஏதேது விஷயமாகற்பால தென்று ஆராய்ந்தும் வரும் அறிவு உள்ளதல்லவா? அதுவே இங்கு 'நான்' என்ற பகுதிக்கு விஷயம் ஆகும். இதுவே ஆன்மா அல்லது உயிர் எனப்படும். எனவே, புறத்துப் பொருள்களை 'இது குடம்', 'இது மலர்,' 'இது மாடு' என்றிவ்வாறு அறிந்தும் நான் குடத்தை அறிந்தேன் நான் மலரை அறிந்தேன், நான் மாட்டை அறிந்தேன் என்றிவ்வாறு தன்னையே நோக்கியறிந்தும் வரும் அறிவே ஆன்மா என்று பின்னிகழ் உணர்வில் வைத்து முன்னர் வகைப்படுத்தி விதித்த முதனியாயத்தால் ஆன்மாவினுண்மை நன்கு கொள்க.

### ஆன்மசித்சத்தி :

மேல் நான் என்ற உணர்விற்கு விஷயம் ஆன்மா என்று கூறப்பட்டது. அன்றியும் அது பொருள்களை அறியும் வகையும் விளக்கப்பட்டது. இவ்வான்மா ஒரு பொருளை அறிதலோடு மாத்திரம் அமையாது இச்சிக்கவும், உடம்பு முதலிய சடப்பொருள்களைத் தொழிற்படுத்தவும் வல்லது. இவ்வல்லமை அல்லது ஆற்றலே அதன் சத்தி எனப்படும். சத்தி = ஆற்றல். ஆன்மாவின்கண் உள்ள அறியும் ஆற்றல் அல்லது அறிவாற்றல் ஆன்மசித்சத்தி எனவும், இச்சிக்கும் ஆற்றல் அதன் இச்சா சத்தி எனவும், தொழிற்படுத்தும் ஆற்றல் கிரியாசத்தி எனவும் கூறப்படும். சித் = அறிவு, இச்சை = விரும்புதல், கிரியா அல்லது கிரியை = தொழில். ஆன்மா இம் மூன்று சத்திகளையும் உடையது. இனி, அறிவு ஒன்றேயாயினும், அது நான் அறிந்தேன், நான் செய்தேன், நான் இச்சித்தேன் என்றிவ் விடங்களிற்போலத் தன்னையே நோக்கி நிற்கும் நிலையில், ஆன்மா என்றும், இது குடம், இது மலர் என்றிவ்விடங்களிற் போலப் புறத்து விடங்களை நோக்கி ஓடி அறியும் உணர்வாக உள்ளபோது சித்சத்தி என்றும் கூறப்பட்டு, இருதிறப்பட்டு நிற்கும். இவ்வாறு பெறப்பட்ட ஆன்மாவினின்றும் புறத்து விடயங்களை நோக்கி ஓடும் உணர்வாகிய ஆன்மசித் சத்தியே முன்னர் கூறியபடி எல்லாப் பொருள்களையும் குற்றமின்றி அறியும் மெய்யறிவிற்குக் கருவியாவது. ஆகவே இவ்வான்ம சித்சத்தியே அறித்தற்குக் (அறிதற்குக்) கருவி எனப்பட்ட அளவை அல்லது பிரமாணம் என்றுணர்ந் தொளற்பாற்று.

(தொடரும்)






## உணவியல்

### உடல் வளர்ச்சிக்கான உத்தம உணவு எது?

[திரு. ஜெ. தங்கவேல்].

நாம் பல நலன்களையும் நன்கு நுகர்ந்து, சிறந்த மக்களாகத் திகழ்தற்கு முட்டுக்கட்டைகளாயுள்ள தீமைகளில் நமது தேகவன்மைக் குறைவும் ஒன்றும்—ஏன்? மிக முக்கியமான தொன்றும். அக்கொடிய பகைவனையோட்டுவதற்குத் தக்க கருவியும் இயற்கை வாழ்வே. சிறந்த நாகரிக மென்று நாம் மூடத்தனமாக நம்பியுள்ள அநாகரீகம் நம்மிடை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதன் பயனாக நாமும் இயற்கை யென்னும் இன்ப நிலையத்தினின்றும் நாளுக்கு நாள் தூரமாக விலகிக் கொண்டிருக்கிறோம்; பிணியும் துன்பமும் மல்கிய மாசறையை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, உண்மையில் சுகம் வேண்டுவோர் உண்டி, உடை, உறையுள் முதலியவற்றைப் பற்றிச் சிறிதேனும் கவலை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இவற்றுள் முக்கியமானது உண்டியே. உணவில் ஒரு கிரமத்தை அனுசரிப்பதாவது உண்ணும் காலம், முறை, உணவின் அளவு, விதம் ஆகியவற்றில் ஒரு ஒழுங்கைக் கொள்ளுதலே யாம். உண்ணுதற்கேற்ற காலத்தைக் குறித்தற்கு வயிற்றினுஞ் சிறந்த கருவி யில்லை. மன அலைவின்றி, மெல்ல மெல்ல மென்று புசித்தலே சுகாதார முறை என்பதைச் சுகாதார சாத்திரம் வல்லார் எவரும் கூறுவர். வயிற்றுக்குச் சுதந்தரத்தைக் கொடுத்து இயற்கை வழியே அதனை விடுவோமாயின், அதுவே நமக்கு வேண்டிய உணவின் அளவை நுண்ணிய துலாக்கோல் போலச் செவ்விதின் அறிவிக்கும். உணவின் விதத்தைப் பற்றிப் பேசும்போதே சிறிது அதிகமான காலம் வேண்டியிருக்கிறது. ஆதலின் அவ்விஷயம் பெரிதும் கவனிக்கற்பாலதாம்.

நமது தேகத்துக்குச் சுகத்தையும் பலத்தையும் கொடுப்பதற்காகவே நாம் ஆகாரங் கொள்ளுகிறோமாகையால் அவ்வாகாரம் அதற்கேற்ற குணம் வாய்ந்ததா யிருத்தல் வேண்டுமெனக் கூறவேண்டா. செல்வம் நிரம்பப் பெற்றவர்கள் சாதாரணமாக நாவுக் கடிமையாகிக் கண்டதைப் புசிக்கிறார்கள். நாவிற்கு ருசியாயுள்ளவற்றையும் கொழுப்பு நிறைந்தவற்றையும் அதிகமாகப் புசித்தால் தேகத்துக்கு எவ்வித நன்மையும் உண்டாகாது. இதனால் தீமை உண்டாவதே இயற்கையின் கட்டளை. ஏழைமக்களோ, தங்களால் கொடுக்கக்கூடிய சொற்பப் பணத்துக்கு எப்பொருள் அதிகமாகக் கிடைக்குமோ அதனையே வாங்கிப் புசிக்கிறார்கள். இதனாலும் நன்மை யுண்டாதற் கேதுவில்லை. நாம் உணவு கொள்ளுதல் தேகமாகிய கட்டடத்தை நன்னிலையில் நீடித்திருக்கச் செய்வதற்கே யன்றி நாவைத் திருப்தி செய்யவும் வயிற்றை நிறைப்பவும் அன்று. ருசி அதிக மில்லாத பண்டங்கள் அதிகச் சத்துள்ளவையா யிருக்கின்றன. குறைவான ஆகாரமும் அதிக பலத்தைத் தருகிறது. ஆகவே, நமது தேகத்துக்கு அவசியமாக வேண்டிய பொருள்கள் எவையென வாராய்ந்து அவற்றைக் கிரமப்படி அதற்களித்தலே அறிவுள்ளவர் செய்கை யாகும்.

தேகம் நன்கு செழித்தற்கு இன்றியமையாதவை ப்ரோடீன் (Protien), சுண்ணாம்பு

(Lime), நிபாக்கினி (Phosphorus), இரும்பு (Iron) ஆகிய நான்கு சத்துக்கள். இச்சத்துக்களைத் தேகம் கொண்டு பயனடைதற்கவசியமானவை வைடமின்ஸ் (Vitamins) என்னும் ஜீவாதாரசத்துக்கள்.

தேகத்தின் எப்பாகத்திலுள்ள தசைநார்களும் (Muscles) ப்ரொடீனு லானவையே. சருமம், ரோமம், நகம் ஆகியவையும் ப்ரொடீனு லானவையே. மற்றுமுள்ள நரம்புகள், எலும்புகள், பற்கள், இரத்தம் ஆகியவற்றிலும் ப்ரொடீன் அதிகமாக இருக்கிறது. ஆகவே தேகத்தின் முக்கியாம்சம் ப்ரொடீன் என்பதும் அதுவே அத்தியாவசியமான தென்பதும் வெள்ளிடை விலங்கலாம்.

இவ்வளவு முக்கியமான இச்சத்துப் பல ஆகாரங்களில் அடங்கியுள்ளது. முட்டையிலும், பாலிலிருந்து உண்டாகும் பாலேடு, வெண்ணெய் முதலிய பொருள்களிலும் இச்சத்து மிகவும் அதிகமாக இருக்கிறது. ஆகவே இதைப் பெறும் பொருட்டுத் தீமை செய்யக்கூடிய புலாலை நாம் கொள்ள வேண்டுவதில்லை. இன்னும், பாலிலிருக்கும் ப்ரொடீனே மற்றெதி லிருப்பதைக் காட்டிலும் சிறந்ததென்பது ஆராய்ச்சியாளர் துணிபு. பாலைக் குடிப்பதிற் கஷ்டமுமில்லை. அதனைத் தயிர், மோர், வெண்ணெய், பாற்கட்டி முதலிய பல பொருள்களாகச் செய்து சாப்பிடலாம். அவற்றில் ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு ருசியிருப்பது எவரும் அறிந்ததே. ஆனால் பாற்கட்டியிற் கொழுப்பு அதிகமாக இருத்தலால் அது பித்தத்தை உண்டாக்கக் கூடும். ஆகவே அதனை அதிகமாக அருந்தா திருக்கலாம். பின்னும் ப்ரொடீன் மிருக சத்தில் மட்டுமன்றி அவரை, பட்டாணி, வண்டை, காராமணி முதலிய மரக்கறிகளிலும் மலிவாக விருக்கிறது.

இனி, லைம் அல்லது கால்ஷியம் (Calcium) என்னும் பொருளைக் கவனிப்போம். எலும்புகள், பற்கள் முதலிய தேகத்தின் கடின பாகங்களில் இச்சத்து அதிகமிருக்கிறது. பற்கள் நன்கு வளர்ந்து ஸ்திரமாக இருத்தற்கு இச்சத்து இன்றியமையாததாகும். பற்களும் எலும்புகளும் நன்கே யமைய வேண்டுமென அவாவும் எவரும் சிறு பிராயத்திலேயே இப்பொருளை அதிகம் கொள்ளுதல் வேண்டும். இது அடங்கிய பொருள்களுள் மிகவும் சிறந்தவை பாலும் மோருமே. அவரை, பட்டாணி, கோஸ் கீரை, காலி ப்ளவர் முதலிய காய்கறிகளிலும், வாதுமை முதலிய கொட்டைகளிலும், பேரீச்சம் பழம், அத்தி, திராக்ஷை, ஆரஞ்சு, அன்னாசி முதலிய பழங்களிலும் இது நிறைந்திருக்கிறது.

அடுத்ததாகிய நிபாக்கினி என்னும் சத்து எலும்புகளில் மிக அதிகமாகவும் தசை, நரம்பு, மூளை முதலியவற்றில் சற்றுக் குறைந்தும் இருக்கிறது. இதை அதிகமாகக் கொள்வதால் சிறிது தீங்கு நேரிடலாமாதலால் இதனோடு கால்ஷியம் என்னும் பொருளும் அதிகமாக அடங்கிய ஆகாரங்களைப் புசிப்பது நல்லது. இதிலும் சிறந்திருப்பவை பாலும் அதிலிருந்துண்டாகும் மற்றப் பொருள்களுமே. மேற் சொன்ன பழங்களிலும் காய்களிலும் இந்த நிபாக்கினி அதிகமிருக்கிறது. ஆகவே அவைகள் இரண்டு விதங்களில் முக்கியமானவை.

நான்காவதாகிய இரும்பு சத்து இரத்தம் முதலிய தேகத்தின் எல்லாப் பாகங்களிலும் ஒரு முக்கியாம்சமாக அமைந்துளது. ஆனால் நாம் கொள்ளும் இரும்பு சத்தை இயற்கையாகாரப் பொருள்களின் மூலம் கொள்ள வேண்டும். பாலில் இச்சத்து அதிகமில்லை. மாமிசத்தில் இது இருப்பினும் அதில் நிபாக்கினி அபரிமிதமாக இருக்கிறது. இச்சத்து அதிகமாக அடங்கி யுள்ளவை வாதுமைக் கொட்டை, பேரீச்சம்பழம், அத்திப்பழம், பட்டாணி, உருளைக் கிழங்கு, தக்காளிக்காய், அரைக்கீரை முதலிய சாகபொருள்களே.

இனி, வைடமின்ஸ் என்னும் ஜீவாதாரப் பொருள்கள் நமது ஆகாரத்தில் முக்கியமாகக் கவனிக்கற்பாலன. அவை A, B, C, D என நான்கு வகைப்படும். அவைகளுள் எது குறைந்தாலும் ஒரு கெடுதி நேரிடும்.

எலும்புகளும் பற்களும் கால்ஷியம், நிபாக்கினி என்பவைகளா லானவை யென முன்பறிந்தோம். ஆனால் இவ்விரண்டு பொருள்கள் இருந்தால் மட்டும் எலும்புகளும் பற்களும் தானே வளரமாட்டா. A வைடமின் இல்லாவிடில் ஒருவேளை எலும்புகள் வளருமாயினும் பற்கள் வளரா. B வைடமின், சாதாரணமாக வேண்டியிருப்பதைப்போல் தாய்மார் தமது குழந்தைகட்குப் பாலூட்டுங் காலத்தில் அவர்களுக்கு 5 பங்கு வேண்டியிருக்கிறது. C வைடமின் இல்லாவிடில் ஸ்கர்வி



எனும் நோய் குழந்தைகட்குக் காணும்; பற்களும் சரியாக வளரா. சில சமயங்களில் பற்கள் தோன்றாமலேயும் இருந்துவிடும். D வைடமின் இல்லாவிடில் எலும்பு வியாதிகள் உண்டாகும். எலும்புகள் கடினமாகவும் ஒழுங்காகவும் வளரா. சூரிய வெளிச்சம் இதற்குப்பதிலாக பெரிதும் பயன்படும்.

பனானாவாழை, அவரை, வெண்ணெய், காரட்கிழங்கு (மஞ்சள் முள்ளங்கி), பாலேடு, மீனெண்ணெய், பால், பச்சைப் பட்டாணி, உருளைக் கிழங்கு, வசலை ஆகிய வற்றில் A வைடமின் நிறைந்துளது. ஆப்பிள், அவரை, பனானாவாழை, கீரை, முட்டை, பால், ஆரஞ்சு, பட்டாணி, தக்காளி ஆகியவற்றில் B வைடமின் மலிந்திருக்கிறது. ஆப்பிள், பனானா, ஆரஞ்சு, உருளைக் கிழங்கு, அவரை, தக்காளி இவற்றிலும்; புதிதான பழங்களிலும்; இலையுள்ள காய் கிழங்குகளிலும் C வைடமின் இருக்கிறது, A வைடமின் அடங்கியுள்ள பொருள்களி லெல்லாம் D வைடமின் இருக்கிறது. ஆயினும் மீனெண்ணெ (Cod Liver Oil) யிலேயே இது மிகுதியாக இருக்கிறது.

இப்பொருள்களின் குணங்களையும் தேகத்துக்கு இவற்றின் அவசியத்தையும் ஆராய்ச்சியாளர்கள் பெரிதும் பாடுபட்டுக் கண்டுபிடித்துள்ளார்கள். ஒருவன் பெரியவனான பின் பலம் பெறுவதைக் காட்டிலும் குழந்தையிலேயே பெறுவதே மிகவும் சிறந்ததாகையாலும், அப்பலமே நீடித்திருப்பதும் நிச்சயமானது மாகையாலும், குழந்தைகள் விஷயத்தில் இப்பொருள்களின் அவசியத்தைப் பற்றி நாம் பெரிதுங் கவலை எடுத்துக்கொள்ள வேண்டும். திடகாத்திரம் வாய்ந்த மக்களையடைய அவாவும் தாய்மார் இந்தப் பொருள்களை முறைப்படி கொள்ளுதல் வேண்டும். தக்கபடி போஷிக்கப்பட்ட தாய்மாரது குழந்தைகளே நல்ல பலமுடையன வாயிருக்கின்றன.

---


## மகாநாட்டு மலர்

நமது முதல் மகாநாட்டின் நிகழ்ச்சிகள், வைபவங்கள்,
தலைவர்களின் பேருரைகள், தீர்மானங்கள் நிறைந்துள்ளன.

தலைவர்களின் ஆப்டோன் படங்கள்
40-க்கு மேல் பொலிந்து விளங்குகின்றன.

வழவழப்பான காகிதம். கண் கவர் அழகு.

செங்குந்தர் ஒவ்வொருவர் கையிலும்
இருக்கவேண்டியது அவசியம்.

விலை அணா 8 தபாற் செலவு அணா 3

மானேஜர், செங்குந்தமித்திரன் ஆபீஸ்,
பவழக்காரத் தெரு, சென்னை.

## நாவல் பகுதி

# சிந்தாமணி யெழுதிய சித்திரம்

(கலைமகள்)

## II

அடுத்த நான்கு வாரங்களில், கண்காட்சிப் பரிசுக்குப் போட்டியாகப் படம் எழுதிய அவ்விருவரில், மிகவும் கருத்துடன் பாடுபட்டது சிந்தாமணியே. தன்சித்திரம் எவ்விதத்திலும் குறைகளில்லாததா யிருக்க விரும்பி, இயற்கைத் தோற்றங்களை உள்ளபடி வரையும் பொருட்டுச் சிலநாட்கள் வர்ணக்குழைகளையும், தூரிகைகளையும், சித்திரப் பாயையும் சுமந்து ஊருக்கு வெளியேயுள்ள சோலைகளுக்குச் சென்றும், காலை மாலை வேளைகளில் ஆற்றங்கரைக்கும் வயல்களுக்கும் சென்றும், கண்ணுற்கண்ட சூரியோதயம் மாலைக்காலம், ஆகாயம் முதலியவற்றின் அழகிய தோற்றங்களைத்தன் சித்திரத்தில் தோற்றுவிக்கப் பாடுபட்டாள். எழுதத் தொடங்குமுன்பே, எந்த விஷயத்தைப்பற்றிய படம்வரைவதென்று தீர்மானித்துக் கொண்டபடியால், பலவேறு விஷயங்களை எழுதித் தடுமாறாமல், ஒன்றிலேயே நிலைத்த புத்தியுடன், நிதானமாய் எழுதி, அனுப்பவேண்டிய குறித்த தினத்திற்கு முதனாள் முடித்தாள். சித்திரவர்மன் அவள் முடிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே எழுதிப் பூர்த்திசெய்து, அனுப்புதற் கேற்றவாறு சிப்பங் கட்டிவைத்து விட்டான். அவன் தன்வேலை முடிந்த பிறகு ஒன்றிரண்டு முறை சிந்தாமணியின் வீட்டுக்கு வந்தபோதெல்லாம் அவள் வெளியே சென்றிருந்த படியால் படம் அனுப்பப்படவேண்டிய அன்றையதினம் தான் அவளைச் சந்தித்தான். தான் எழுதிய படத்தைச் சித்திரவர்மனுக்குக் காட்டி, அவனுடைய அபிப்பிராயத்தை அறியவேண்டுமென்று சிந்தாமணிக்கு உள்ளூர ஆவலிருந்தது. ஆனால் சித்திரவர்மன் தனக்குக் காட்டாமலேயே சிப்பம் கட்டிவைத்து விட்டபடியால் தானும் காட்டக் கூடாதென்றும், அவ்வோவியம் எதிர்பாராத ஆச்சரியத்தைத் தருவதாயிருக்க வேண்டுமென்றும் எண்ணிச் சும்மா இருந்து விட்டாள். அவளைத்தவிர அந்தப் படத்தைப் பார்த்தது அவள் பாட்டனார் ஒருவரே. அவர் அதை எவ்வளவு வியந்தாரென்பதை அவர்முகமே நன்கு காட்டியது.

சித்திரவர்மனின் படத்தைக் கண்ணுறச் சிந்தாமணிக்கு எவ்வளவு ஆவலிருந்ததோ அதிற் பாதியாவது சித்திரவர்மனுக் கில்லாமற் போகவில்லை. இருவரும் தாமெழுதிய படங்கள் இதுவரையெழுதியவைகளைவிடச் சிறப்புடையன; தகுந்த பரிசுபெறும்யோக்கியதையுடையன என்றுணர்ந்திருந்தனர். இருவரில் ஒருவரும் தம் மனதிலிருந்ததை வெளியிற் சொல்லவில்லை. சித்திரவர்மனுக்குத் தன் ஓவியம் வெற்றி பெறுமென்று மிக்க நம்பிக்கை யிருந்தது. முதன் முதலில், அவன் எந்தக் காக்ஷியை வரைந்தால் கண்களுக்கும் மனதிற்கும் கவர்ச்சி தருமென்று நிச்சயிக்கமாட்டாமல் தத்தளித்தான். இறுதியில், ஜீவராசிகளனைத்தினும் மனிதன் உயர்ந்த சிருஷ்டி யென்பதையும், இயற்கையின் துணையுடன், மனிதன் மற்றைப் படைப்புகளைத் தன் ஆண்மையால் அடிபணியச் செய்வது சாத்தியம் என்பதையும் நிரூபிக்கக்கூடியதான ஒரு படம் வரைந்து முடித்தான். சித்திரவர்மன் கையிலெடுத்த வேலையை அழகுபெற முடிக்கக்கூடிய நிபுணனாதலால், சித்திரம் அவன் கொள்கையை நன்று விளக்கிக் காட்டுவதா யிருந்தது. சூரியோதய சமயத்தில், வேனிற் பருவத்தின் முழு அழகையும் கண்கூடாகக் காட்டக் கூடியதான ஒருவன மத்தியில், ஓருயர்ந்த குன்றின் அடிவாரத்தில், வலிய, அழகிய உருவமுடைய ஒரு மனிதன், தனக்கு மனதிலும் உருவிலும் உள்ள அபார சக்தியை வெளியிடும் பிரகாசமான முகத்துடன், தன்னிருபுறமும் இரண்டு, பெரிய சிங்கங்கள் அடங்கி நிற்க, ஒரு மதயானையின்மீது கம்பீரமாய்ச் சாய்ந்த வண்ணமிருந்தான். மற்றைய துஷ்ட மிருகங்களும் அஞ்சி அடிபணிந்திருந்தன. தலைக்குமேல் விதானமிட்டாற் போல் தழைத்தோங்கிவளர்ந்த வ்ருக்ஷங்கள், அவன் வீரத்தையும், சௌரியத்தையும் மெச்சிப் பூமழை பொழிவன போன்றிருந்தன. அவன் காலருகே, அன்பும் விசுவாஸமும் கலந்த நோக்கத்தால் மலர்ந்த கண்களுடன் அம் மனிதனின் ஆண்மையையும் அழகையும் மெச்சியவளாய், மெல்லிய அங்கங்களைப் பெற்ற மின்னிடையாள் ஒருத்தி முழந்தாட்படியிட்டு, அவன் முகத்தைப் பார்த்தவாறிருந்தாள். இவ்வாறு, மனிதனுக்கு இயற்கை உதவிசெய்ய, மற்றப் பிராணிகள் தொண்டுபுரிய, மெல்லியலார் விசுவாசத்துடன் பக்தியாயடிபணிய, மனிதன் அவர்களனைவரையும் ஆளப்பிறந்தவன் என்னும் உயர்வான கோட்பாட்டை நன்கு விளக்கிய அப்படத்திற்குச் சித்திரவர்மன் வைத்த, "ஆண்மை" என்னும் பெயர் மிகப் பொருத்தமாகவேயிருந்தது. அவன் எழுதிய படம், கம்பீரத்தையும், அதிகாரத்தையும், வெற்றியின் பெருமையையும் காட்டுவதாய், மிகத்திறமை வாய்ந்த ஓவியனின் வேலைப்பாடென்று வெளியிட்டது.

சிந்தாமணி எழுதிய சித்திரமோ, வாழ்விற்கின்றியமையாத, அன்பு நேசம், விசுவாசம், காதல் பக்தி, பக்ஷம், பிரேமை, ஆதிய அரிய, பெரிய, உயரிய உணர்ச்சிகளை வெளியிடுவதாய், அழகு, இன்பம், மகிழ்ச்சி யிவற்றால் மானிட இருதயத்திற்கேற்படும் அநந்த அநுபவத்தைத் தெற்றெனக் காட்டும் அற்புதக் காட்சியா யிருந்தது. அதைப் பார்த்தவர் ஒரு கணநேரம் தம்மை மறந்து, இந்நில உலகிற் காணுதற்கரியதும், விண்ணுலகிற்கே பொருந்தியதும், ஒவ்வொரு மனிதனுடைய மனோ பாவனையிலும் விரும்பக்கூடியதுமான பேரின்பக் காட்சியை யெட்டிப் பார்த்தாற்போன்று, உள்ளம் பூரித்து, உவகை எய்தும்படி அன்புருவாய், அருள்வடிவாய், இன்பப் பிழம்பாய் விளங்கியது சிந்தாமணியின் ஓவியம். இத்தனைக்கும், அவள், ஒரு பெண்மணிக்கு வாழ்வில் நேரிடும் மூன்று சம்பவங்களைச் சித்திரித்திருந்தாள். அதன் கருத்து, வெகுசகஜமானதுதான் என்றாலும், அவள் மனோபாவனையின் அபூர்வத்தால் புதுமையும் இனிமையும் மிகுந்து, கண்களுக்கிட்ட விருந்தென வியக்கத் தக்கதா யிருந்தது.

சிந்தாமணி, ஒரு பெரிய சித்திரப்பாயை மூன்று பாகங்களாய்ப் பிரித்து, ஒரு பெண்ணுருவை மூன்று விதங்களாய் எழுதி, மூன்று பெயர்களிட்டிருந்தாள். முதலாவது, "அழகு" என்ற பெயருள்ள சித்திரமானது, பருவமங்கையொருத்தி, தானளிக்க வல்ல இன்பத்தை யுள்ளடக்கிய கண்களும், புதிதாய் மலர்ந்த மல்லிகை மலரைப்பழித்த தூய்மையும் எழிலும் ஏந்தியவதனமும், உடையவளாய், வாழ்க்கையென்னும் மாளிகையிற் புக அடியெடுத்து வைத்ததுபோல், ஒரு பூம் பொழிலின் இடையிலிருந்த, அழகிய வாவியின் படிமீது கால்வைத்து நின்ற பாவனையில் வரையப்பட்டிருந்தது. அம் மங்கையின் உருவம் யௌவனத்தையே ஆடையாயணிந்து, அழகே அணியாகப் பூண்டு, உயிருள்ளது போல் தோற்றியது. மாலை வேளையும், மலர்ப்பூங்காவும் உண்மைத் தோற்றங்கள் போன்றுந் துலங்கின. இரண்டாவது, "இன்பம்" என்னும் தலைப் பெயரினையுடையதாய் அம்மங்கை தன் வாழ்க்கைத் துணைவனைத் தேர்ந்து, மனதிற் கிசைந்த அவ் வாடவனை அன்பும் காதலும் மிளிரும் பார்வையினால் தன் மனம் அவனுடன் ஒன்று பட்டதைக் காட்டி, ஒரு சிறந்த மனைவி யெவ்வாறிருக்க வேண்டுமோ, அவ்வாறான பாவனையில் எழுதப்பட் டிருந்தது. அதன்கண் எழுதப்பட்ட ஆண், பெண் இருவர் முகங்களிலும், உண்மைக் காதலும், நம்பிக்கையும், உள்ளக் கிளர்ச்சியும் ததும்ப, இன்பம் என்னும் உணர்ச்சி உரு வெடுத்தாற் போன்றிருந்தது. மூன்றாவதில், அதே மங்கை முந்திய இரண்டு படங்களில் காணப்படாத புதுமலர்ச்சியும், பேரெழிலும் பெற்றவளாய்க் கண்களிலும் இதழ்களிலும் மகிழ்ச்சியும் பெருமிதமும் கூத்தாட உள்ளப் பூரிப்பை வெளியிடும் அலர்ந்த புஷ்ப வதனத்தைத் தன் கையிலேந்திய அழகிய சிறுமகவின் முகத்துடன் சேர்த்தணைத்து, ஒரு மாமரத் தடியிற் சாய்ந்திருப்பதாய், "மகிழ்ச்சி" என்ற பெயருக்குச் சரியான சித்திரமாய்த் தீட்டப்பட் டிருந்தது. இம் மூன்று தோற்றங்களையுடைய அச்சித்திரத்திற்குச் சிந்தாமணி, "பெண்மையின் மூன்று முக்கியத் தோற்றங்கள்" என்று பெயரிட்டிருந்தாள்.

இத்தகைய படத்தை, முற்றிலும் எழுதியபிறகே பார்த்த சிந்தாமணியின் பாட்டனார் இமையா நாட்டத்துடன் திகைத்துச் சிலைபோல் நின்றுவிட்டார். அத்துணைச் சாதாரணமான விஷயத்தை இத்துணை அழகிய காக்ஷியாய் எழுதும் திறமை வாய்ந்திருந்த தன் செல்வப் பெயர்த்தி, நெடுங்காலம் உயிருடனிருக்கவேண்டுமே என்று யோசித்தார். அறிவைக் கொடுத்த இடத்தில் பிரமன் ஆயுளைக் குறைத்து விடுவது படைப்பின் இயல்பல்லவா ?

வித்தைகளிற்குள் மிக அரியதும் கஷ்ட சாத்தியமுமானது சித்திர வித்தை. மற்றக் கலைகளைக் காட்டிலும் கடினமானது; எளிதில் வாராதது. ஒருவர் சொல்லக்கேட்டுப் பயிலக்கூடிய, எண், எழுத்து, சங்கீதம் இவற்றைப் போன்றதல்ல, ஓவியம்; கையால் ஒருவர் எழுத, அதைக் கண்டு எழுதும் இயல்புடையதன்று எழுதுங்கலை. மற்ற வித்தைகளைப் போல் தொட்டுக்காட்டக் கூடியதுமல்ல. மனோ பாவனையே இதற்கு முக்கியமானது மனதிலுதிக்கும் விதவித எண்ணங்களைக் கை வழியாய் அழகிய சொற்களி லமைக்கக் கற்பனா சக்தியும், மனோ பாவனையும் ஒரு புலவனுக்கோ, நூலாசிரியனுக்கோ எவ்வளவு அவசியமோ, அதைவிடக் கண்ணுற் கண்டவற்றை மனதில் உருவகப் படுத்தி அதைக் கையால், தக்க வர்ணங்களுடன், சாயல் கெடாமல் சித்திரிப்பதற்குச் சித்திரந் தீட்டுபவனுக்குப் பன்மடங்கு கற்பனையும் மனோ பாவமும் அவசியம். சித்திரம் வரைவதற்குப் படங்களுக் கேற்றபடி வர்ணங்களை ஒன்றோடொன்று அளவறிந்து, சீர்தூக்கிப் பார்த்துக் கலந்து கூட்டும் திறமை எவர்க்கும் எளிதிலுண்டாவ தில்லை. இந்த ஆச்சரியமான வித்தையின் முழு நுட்பத்தையும் தனது நுண்ணறிவாற் கற்ற சிந்தாமணியின் படத்தைப் பார்த்துப் பிரமிக்காதவர்கள் அக்கண் காட்சித் திருவிழாவில் இலர். அச்சித்திரம் அவ்வளவு அமைப்பாய் விழுந்தது சிந்தாமணிக்கே சிறிது ஆச்சரியமா யிருந்தது. அவள் எழுத உட்காருகையில், தன் திறமையை நன்றாய் உபயோகித்து, இதுவரை எழுதியவைகளைக் காட்டிலும் சிறந்ததாயிருக்கவேண்டு மென்று விரும்பித்தான் ஆரம்பித்தாள். அவள் மனோ பாவம் சித்திரமாய் உருவம் பெறப் பெறச் சிறிது சிறிதாய் அவள் தன் முழு மனதும் அதிலேயே சென்றவளாய்த் தன்னை மறந்து தான் எழுதப் புகுந்த படத்திலேயே லயித்து விட்டாள். தன்னை மறந்து ப்ரவசப் பட்டுச் செய்யும் எச்செயலும், பரிபூரணமான்தாக அமைந்து விடும் அன்றோ?

சித்திரவர்மன் எழுதியதற்கும், சிந்தாமணி வரைந்ததற்கும் இருந்த வேறுபாடு இது ஒன்றே. அவன், தான் வேறு, தான் எழுதப் புகுந்த படம் வேறு; தன் கை வன்மையாற் படைக்கப் பட்டது

அந்தக் காட்சி என்று வேற்றுமை பாராட்டிய வாறே முழுவதும் எழுதி முடித்தான். சிந்தாமணியோ, தான் எழுதுவது படமென்ற நினைவற்றுத் தானும் அச்சித்திரமும் ஒன்றேயாகப் பாவித்து எழுதினாள். ஆதலாற்றான், சிந்தாமணியின் ஓவியத்தில் சித்திர வர்மனின் சித்திரத்திற் காணப்படாத ஒரு தெய்வீக ஒளி திகழ்ந்தது. அவனுடைய படம் சாமர்த்தியத்தை மட்டும் காட்டியது. அவளுடையதோ, கண்முகிழ்த்தலும், வாய் பேசுதலும், இல்லையென்று ஓராதவர்கட்கு உயிர்ப்புடனிருக்கும் உண்மை யுருவெனத் தியங்கச் செய்தது. நிற்க,

கண்காக்ஷி மண்டபத்திற்கு அனுப்பவேண்டுமென்று விளம்பரத்திற் குறித்த நாளைக்கு முதனாளே சித்திரவர்மன் தன் படத்தை எழுதி முடித்துப் பரீக்ஷகர்களுக்கு அனுப்பும்பொருட்டுப் படத்தின்மீது அட்டைகளையும் காகிதங்களையும் நன்றாய்ப் பரப்பி இருமுனையிலும் மெல்லிய மரச் சட்டங்களிட்டுப் படம் மடங்காமலும் உருக்குலையாமலும்வெகு ஜாக்கிரதையாகக் கட்டிச் சுருட்டிச் சிப்பத்தின் மேற்புறத்தில் அரக்கு முத்திரைகளிட்டு எடுத்துக்கொண்டு சிந்தாமணியின் வீட்டுக்குவந்தான். அவன் வரும் தருணத்தில் சிந்தாமணி தன் அருமைச் சித்திரத்தைத் தன் கைகளாலேயே வெகு ஜாக்கிரதையாய்ச் சுருட்டிச் சிப்பங் கட்டி அனுப்பத் தயார் செய்துகொண் டிருந்தாள். அவள் அறையில் இருந்தமையால் வாயிலறையில் உட்கார்ந்திருந்த சிந்தாமணியின் பாட்டனாரை விளித்துச் 'சிந்தாமணி எங்கே?' என்று கேட்டான் சித்திரவர்மன்.

" ஆ! சித்திரவர்மா, வா, வா. உன்படம் எழுதி முடிந்ததா? முத்திரைகூட வைத்துவிட்டாயா? நீ எப்பொழுதும் எச்சரிக்கை யுள்ளவன். சிந்தாமணி காலை முதல் அவள் படத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறாள். கடந்த மாதத்தில் அவள் ஒரு நாள் ஓய்வும் எடுத்துக்கொள்ளவில்லை. வேளையில் ஆகார மருந்துவது மில்லை. நீ கூட மேனி வாடித் தானிருக்கிறாய்!" என்று கூறினார் கிழவர்.

" தாதா! உடல் வாட்டத்தைக் கவனித்தால் முதற்பரிசு கிடைக்குமா? சாதாரணப் பரிசுக்கே சிந்தாமணி இத்துணைச் சிரமப்பட்டிருக்கிறாளென்றால், முதற்பரிசை நாடியுள்ள நான் சிரமப்பட்டதில் என்ன அதிசயம்?" என்றான் அவ்வாலிப ஓவியன்.

" உன் படம் அனைவராலும் மெச்சப்படுமென்பதிலும் முதற்பரிசு பெறுமென்பதிலும் எனக்கு ஐயப்பாடில்லை. ஆனால் இப்பொழுது சிந்தாமணி எழுதிய படத்தைக் கண்ட பிறகு எதுவும் அதற்கிணையாயிராது என்று நான் நிச்சமாய்க் கூறுகிறேன். அப்பரீட்சகர்களுக்குக் கண்களிருப்பது மெய்யென்றால் என் கண்மணிக்கு ஒரு முதற்பரிசு வருவது திண்ணம். ஒரே ராஜதானியில் ஒரே நகரத்தில் வசிக்கும் இரு சிறியோர் ஒன்றாய் முதற்பரிசுகள்பெறுவது இந்தஇராஜதானிக்குமிக்க மதிப்பாயிருக்கும்" என்று உவகை பூத்துப் புகன்றார். பெரியவர் சித்திரம் எழுத அறியாதவரானலும், அந்தச் சாஸ்திரத்தின் ஒவ்வொரு நுட்பமும் தெரிந்த அறிஞரென்பதைச் சித்திரவர்மன் முன்னமே அறிந்தவனாதலால் அவர் சொற்களைக் கேட்க அவன் முகம் சுருங்கியது. அவன் மனதில் விவரிக்க முடியாத ஒரு கொடிய துன்பமும் அச்சமும் உண்டாகியது. "அவ்வளவு நன்றாய் எழுதியிருக்கிறாளா? என்ன வரைந்திருக்கிறாள்?" என்று சிறிது தடுமாறிய குரலில் கேட்டான்.

"அவள் பரம ரகசியமாய் வைத்திருக்கும் செய்தியை நான் உன்னிடம் சொன்னால் சிந்தாமணி என்னைக் கோபிப்பாள். நீயே கேட்டுப் பார்! அல்லது அடுத்த வெள்ளிக்கிழமை வரையிற் பொறுத்திரு!" என்று நகைத்தார் பெரியவர்.

" நான் கேட்டால் அவள் சொல்லமாட்டாள் என்று நினைக்கிறேன். நான் என் படத்தைக் காட்ட மறுத்ததற்குப் பதிலாக இப்படிச் செய்கிறாள் சிந்தாமணி." என்று விளம்பினான் சித்திரவர்மன்.

" நியாயம் தானே? நீ காட்ட மறுத்தால் அவளும் பதிலுக்கு மறுத்துவிட்டாள், ஒன்று நிச்சயம். அவளுக்கு அவளே சீதனம் சேகரித்து விட்டாள். அவள் எழுதிய சித்திரத்தைக்கண்டு அநேகர் வாங்க முன் வருவர். பார்ப்பவர் புத்தியை மயக்கி விடுகிறது அந்த ஓவியம். ஆனால் அவளுக்கே தான் ஒரு உயர்ந்த படம் எழுதி யிருக்கிறாளென்று தெரியவில்லை. மாசற்ற குழந்தையின் சுவாபத்தினள்." என்று புகன்றார் சிந்தாமணியின் பாட்டனார்.

அவர் மொழிகளைக்கேட்கக் கேட்கச் சித்திரவர்மனுக்கு ஒரே ஒரு எண்ணந்தான் உதித்தது.

இக்கிழவர் சொல்வது உண்மையானல் என் சித்திரம் சிந்தாமணியின் சித்திரத்திற்கு அடுத்த படியாகத்தா னிருக்கும். நமக்கு முதற்பரிசு கிடைக்காது. எப்படியாயினும் அவள் படத்தை ஒருவருமறியாமல் ஒரு பார்வை பார்த்துவிட வேண்டும் அவளைக்கேட்பதில் பயனில்லை. கேட்பது முறையுமல்ல." என்று சிந்தித்தான் சித்திரவர்மன்.

அச்சமயம் மாடியில் தன் அறையில் வேலையாயிருந்த சிந்தாமணி " தாதா! யார் அங்கே வந்திருப்பது? ராமனா" என்று வினவினாள். " இல்லை நான்தான். இராமன் இதோ வந்துவிடுவான்." என்று பதிலுரைத்த வண்ணம் மாடியேறி அவளது அறைக்குச் சென்றான் சித்திரவர்மன். அவன் எதிர்ப்பார்த்திருந்ததற்கு மாறாக அவள் படத்தைக் கட்டிமுடித்து வைத்துவிட்டு எதையோ தேடிக்கொண்டிருந்தாள்.

(இன்னும்வரும்)



129816

# ஆராய்ச்சிப் பகுதி

## முருகன்

(செங்குந்தமித்திரன் தொகுதி 4-ல் 121-ம் பக்கத்தொடர்ச்சி)

### முருகற்காய புராண கற்பித வரலாறுகள்

[திரு. ஜி. இராஜ முதலியார்]

இயற்கைப் பேரொளியைத் தண்ணறுந் தனித் தமிழர் முருகன், செவ்வேள், சேய் என்பனபோன்றுள்ள தமிழ்ப் பொருட்பெயரான் வழங்கிவந்தமை முற்கூறினேன். சேய் என்பதுஞ் செம்மையெனும் பண்புப் பொருளடியாய பெயராகும். அன்றி, தூரத்துள்ளதென்று கோடலும் ஒன்று. இனி ஆரியர்தங் காலத்துப்பின்னர்த் தோன்றிய புராணம் முதலிய கற்பித நூல்களுட் சேயோற்குரிய வரலாறு பலபட வந்தவாறுங் காட்டுதும். அந்நூல்களுங் காலப்போக்கிற் குரியவாறு மாறுபட்டுள்ளன.

பரிபாடலும், முருகாற்றுப்படையும், கந்தபுராணமும் முருகற்குரியவாக முன்னோர்களாலியற்றப்பெற்ற வரலாறுகளைக்கூறும். கந்தபுராணம் முருகனது விளையாடல்களையே கூறும் வடமொழி ஸ்காந்தத்தின் மொழிபெயர்ப்பு. பரிபாடலும் முருகும் முருகனைப்போற்றிய வழிபாட்டு நூல்கள். பரிபாடலிற் பல பாடல்கள் முருகற்கும், ஏனைய திருமாற்கும், மதுரைக்கும், வையைக்குமாக வமைந்தன. கந்தபுராண வரலாறு யாவரும் அறிந்த தொன்று. முருகன்பால் ஆற்றுப்படுக்கும் முருகாற்றுப்படையும் அன்பர்கள் போற்றுவதொன்று. பரிபாடலின் நடை கடினமாயினும் பொருளுஞ் சொல்லும் அமையப்பெற்றுள்ள முறை பதமுறச் சுவைக்கச் சுவைக்க மேன்மேலும் இனிமை பயப்பதொன்றாகும். அன்றியும், முருகனது பலவாய ஆற்றல்களையும் பலபடப் புனைந்து புகழும் பெருமையது. ஆதலின் இவற்றுள் முருகனது வரலாற்று முறைமை யெங்ஙனங் கூறப்பெற்றுள்ளதென்பதி யாவரும் அறிய வேண்டியதாம்.

நம்முன்னோர்கள் கடவுட்கு நம்போன்ற வரலாறுகளை யமைத்து மக்களறிந் தின்புறுமாறு செய்துள்ளனர். அவ்வரலாற்றினும் மக்களுட் சிறந்தது கடவுட்டன்மை யென்று காட்டும் பொருட்டு மக்களால் இயலாச் சில தெய்விக முறைகளையுங் கற்பித்தனர். நல்லறிவு வாய்ந்த அறிஞர்களியாவருங் கடவுளை வழிபாடு செய்வதற்குக் கடவுளை மக்களைப் போன்ற வடிவுடையவராகவும், வரலாறுடையவராகவும் பாவனை செய்யுமாறு மக்கட்குக் கற்பித்தனர். வழிபாட்டுக் கிம்முறையன்றி வேறெம்முறை சிறந்ததாகும்? பேராநிலைமைப் பெருவீட்டுச் செல்வராய குமரகுருபர வடிகளுந் தாம் பாடிய திருவாரூர் நான்மணி மாலையில் தியாகராயப் பெருமானை,

" தண்டலை யுடுத்த வொண்டமிழ்க் கமலைப்
பொற்பதி புறக்கும் அற்புதக் கூத்த! நின்
சேவடிக் கொன்றிது செப்புவன் கேண்மதி
விலங்கினுண் மிக்கது விண்ணவர் தருவென
வொருங்குவைத் தெண்ணுவ தோர்வழக் கண்
[மையின்
ஒத்த சாதியின் உயர்புமற் றிழிபும்
வைத்தன ரல்லதை வகுத்தனர் யாரே
முற்படு தேவருண் முதல்வனென் றெடுத்துக்
கற்பனை கடந்த கடவுணிற் பழிச்சுதும் "

எனக் கடவுளை வழிபாடு செய்தற்கு 'மக்களினுந் தெய்விகத் தன்மை வாய்ந்த தேவருண் முதல்வனாகக்கொண்டு வணங்குகின்றேன்' என்றும், விலங்கிற் சிறந்தது விலங்கிலுயர்ந்த விலங்காகக் கொள்ளவேண்டுமே யன்றி 'விலங்கினுள் மிக்கது விண்ணவர் தரு' என ஒருங்குவைத் தெண்ணல் மரபன்றென்றும், கடவுட் சக்தியினாற் பலவேறாய ஆன்ம கூட்டங்களுள் உயர்வு தாழ்வின்மையின், ஆன்மாவிற் சிறந்து நின்ற கடவுளைப் 'பரமான்மா' என வழங்குதலே சால்புடைத்தென்றுங்' கூறினமையும், இராமகிருஷ்ண பரமஹம்ஸர் 'கடவுளை வணங்கவேண்டுமாயின், அன்பு செய்யவேண்டுமாயின், உன்னுயிரைப்போற்சிறந்த எந்தப் பொருளாகவாவது கடவுளை நினைத்துக்கொள்' எனக் கூறினமையும் நாங் கருதத்தக்க, சிறந்த, நன்முறையாய மொழிகளாகும். இயற்கைப் பொருளாய கடவுளின் உண்மை வடிவை மனத்திலறிந்து, அப்பெரும் பேரின்ப வொளியுடன் கலந்து நின்று, என்றுமழியா வின்பமுறப் பேரறிவர்களாகிய யோகிகட்கன்றி, 'காலுணவாகச் சுடரொடு கொட்கும் அவிர்சடை முனிவர்க்'கன்றி, எம்போன்று முக்குண வயத்தான் முறைபிறழ்ந்து, உலகின் நிறைபொருளாவார் பிடர்பிடித்துந்துமாற்றா லறிவு மயங்கி நிற்போருக் கெளிதன்று. பரஞ்சோதி முனிவருந் தமது திருவிளையாடற் புராணத்தில்,

" வென்றுளே புலன்களைந்தார்
பெய்யுண ருள்ளந் தோறுஞ்
சென்றுளே யமுதமூற்றுந்
திருவருள் போற்றி, யேற்றுக்
குன்றுளே யிருந்து காட்சி
கொடுத்தருள் கோலம்

மன்றுளே மாறியாடு
மலர்சிலம் படிகள் போற்றி"

என, வெள்ளியம்பல ஆனந்தக்கூத்தனை மும்முறைப்படுத்து வணங்கினார். அவை முறையே அமுதவடிவாகவும், எற்றுக் குன்றி லுலமையோர் கூற்றனுகவும், அம்பலத்தி யாவருங்காண வெளிவந்த சிலம்பணிந்த திருவடிக்கூத்தனுகவும் உள்ள வடிவங்களின் பெருமை கூறியவாறு. இவ்வடிவங்களை 'முக்குண வயத்தராய மக்கள், ஒழிந்த வேளையிலம் பலத்துச் சென்று, சிலம்பொலியோடுகூடிய நடன வடிவைக்கண்டு, மகிழ்ந்து வணங்குவதும், மாயையும் கன்மமும் நீங்கிய மனத்தினர் மனத்திலேயே மாதோர் பாகனையெருதின்மீதிவர்ந்துவருவோனுக வணங்குவதும், மாயையுங் கன்மமும் நீங்கியோர் அமுதவடிவாக அருந்துவதுஞ் செய்வர்' என்பதும் இச்செய்யுளான் வெளிப்படுத்தப்பெற்றன. ஆதலின், புராண வரலாறுகள் இயல்பாகவே யொன்றினும் பற்றுருது தனித்துநின்ற பேரொளிப் பிழம்பாய இயற்கைப் பொருட்கில்லையென்பதும், மக்கள் வழிபாட்டிற்காக அறிஞர்களாற் புனையப்பெற்றன என்பதும் இம்முறை நன்முறையேயன்றி, இக்காலத்தாரிற் சிலர் கூறுமாறுபோல இழுக்குடையன அல்ல வென்பதும் அறிஞர்கள் ஒப்பக்கூடியனவே.

## 1. கந்தபுராண வரலாறு

கந்தபுராணத்தில், முருகனது பிறப்பு வரலாறு கீழ் வருமாறு கூறப்பெற்றுள்ளது:—

சூரபன்மனுல் தேவர்க ளிடுக்கணுற்றனர். மால் முதலானோராற் றீர்க்க வியலவில்லை. சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவபெருமான், "தக்கன் யாகத்திற்குச் சென்றதனுற் றுயருற்றீர்; இனிக்காப்பேன்; தக்கனை வெறுத்த வுமையவள் இமைய பர்வதன் புத்திரியாய் வளர்கின்றனள்; சென்று மணம்புரிந்து நுமது செல்லல் தீர்ப்பேன்" என வாதரவு கூறினார். பின்னர், சனகன் முதலாய நால்வ ரிருடிகள் யோகமுறையருள வேண்டுமென் றுமைகேள்வனை யிரப்ப, இறையவனுர், கல்லாலின் புடையமர்ந்து நான்மறை யாரங்க முதற் கற்றகேள்வி வல்லார்கள் நால்வர்க்கும் வாக்கிறந்த பூரணமாய் மனவாக்கெட்டா, எல்லாமாய் அல்லவுமாய் இருந்ததனை யிருந்தபடி யிருந்து காட்டிச், சொல்லாமற்" சொல்லி யிருந்தனர். நாள் பலவாய் ஆண்டுபலவா யிங்ஙனங் காலங்கடந்து சென்றதேயொழிய யோகநிலை மாறினுரில்லை நம்பெருமான்.

தேவர்கள் மனம் வாடினர்; நான்முகன் றுணையாரதிகேள்வனை யனுப்ப வவனும் நீராயினன். சிவபெருமானும் யோகநிலை நீங்கி, யுமையை மணந்து, காமனுக்குணர்வு தந்து, தேவர்களின் வேண்டுகோளைச் செவியேற்றுப் பார்ப்பதியுடன் வீற்றிருக்கு மோர்போதில், ஐந்துமுகத்துட னதோமுகமுங்கொண்டாறுநெற்றி விழியினின்றும்ஒவ் வோர் ஒளிப்பிழம்பை வெளியிட்டனர். அவையுலகு பொறு நிலையில் நின்றமையால், அவற்றை வாயுவானும் அக்கினியானுங் கங்காநதியின் மூலமாய்க் கைலைச் சரவணப் பொய்கையிற் சேர்த்தனர் திரிபுரதகனர். அப்பொறிகளாறும் ஆறு குழவிகளாயின. முனிவரானுரையின்படி யருந்ததி யொழிந்த கார்த்திகைமாத ரறுவரும் முலையூட்டி வளர்த்தனர். ஆறு வேறு வகையாய அக்குழவிகள் ஒரு குழவியாகும்: பல குழவிகளாகும்; பல்வேறு செயற்கரிய தெய்வத்தன்மை பொருந்திய பிள்ளை விளையாட்டுக்களைச் செய்யும். இதனையறிந்த தேவர்கள் பிள்ளையாரைக்கண்டு வணங்கி வாழ்த்திச்சென்று நீலகண்டனிடங்கூறி, மகிழ்வெய்தினர். சிவனுமுமையுமாய்ச்சென்று குழவியாறினுடையவும் விளையாட்டுக்கண்டு பேருவகை கொண்டனர். பார்ப்பதியார் குழவிகளாறினையும் ஒன்றுக அணைத்துக்கொள்ள, எம்மை யாறுசெயும் ஆறுமுகமும் பன்னிரு கரமுமாய அக்குழந்தை கந்தனென்ற் காரணப்பெயர் பெற்றுப் பெற்றோராற் சீராட்டப்பெற்றது. பின்னர் சூரபன்மனைத் துணைவருடன் சென்று சங்கரித்தது.

இங்கு, † சிவபெருமானது நெற்றி விழியினின்றும் வெளிவந்த ஒளிப்பிழம்புகளே குழவிகளாயின' என்பதும் * 'உமாதேவி அணைத்தெடுத்தும்போது குழவிகளாறும் ஒன்றுயின' என்பதுங் கருத்தில் வைக்கவேண்டுவன.

## 2. திருமுருகாற்றுப் படையிலுள்ள வரலாறு.

"இருபேருருவின் ஒருபேரி யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழிணர்
மாமுதல் தடிந்த மறுவில், கொற்றத்
தெய்யா நல்லிசைச செவ்வேற்சேஎய்" 57-61

என்பன திருமுருகாற்றுப்படைச் செய்யுள் அடிகள். இவற்றுள் "இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை, அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி" என்பதற்கு நச்சினார்க்கினியருரைக்கும் உரை "மக்கள் வடிவும் விலங்கு வடிவும் ஆகிய இரண்டு பெரிய வடிவுகளையுடைய ஒன்றுகிய பெரிய உடல், ஆறுகிய வேறுபட்ட கூற்றுலே அச்சந்தோன்ற மிக்குச்சென்று'..........என்றதனுன் இறைவன் உமையை வதுவை செய்துகொண்ட 'நாளிலே இந்திரன் சென்று நீ புணர்ச்சி தவிர வேண்டுமென்று வேண்டிக்கொள்ள, அவனும் அதற்குடம்பட்டு அது தப்பாமுகிப் புணர்ச்சி தவிர்ந்து கருப்பத்தை இந்திரன் கையிற்கொடுப்ப, அதனை இருடிகள் உணர்ந்து அவன் பக்கனின்றும் வாங்கித் தமக்குத் தரித்தல் அறிதாகையினுலே இறைவன் கூறுகிய முத்தீக்கட்பெய்து, அதனைத் தம் மனைவியார் கையிற்கொடுப்ப, அருந்ததியொழிந்த அறுவரும் வாங்கிக்கொண்டு விழுங்கிச் சூன்முதிர்ந்து சரவணப்பொய்கையிற் பதுமப்பாயலிலே பயந்தாராக, ஆறு கூறுகி வளர்கின்ற காலத்து இந்திரன் தான் இருடிகளுக்குக்கொடுத்த நிலையை மறந்து ஆண்டு

(இதன் தொடர்ச்சி 169-ம் பக்கம் பார்க்க.)



# தமிழ் மொழியும் தற்கால நிலைமையும்

(திரு. K. S. வேலு முதலியார்அவர்கள்)

தமிழ்மொழிபற்றி ஆராயுமிடத்துத்தமிழ் மொழியின் அமைப்பு, தமிழ் மொழியின் பெருமை என இரண்டு பிரிவுகளாக ஆராயத்தக்கதாதலின், அம்முறையே ஈண்டு குறிப்பிடுகின்றேன்.

## தமிழ்மொழியின் அமைப்பு.

ஒரு மொழியானது அதற்குரிய சிறப்பு உறுப்புக்களால் ஆக்கப்பட்டிருக்குமேல் அதுவே இனிமை பயக்கும் சிறப்புடைய மொழி யெனப்படும். "உயிரு முடம்புமா முப்பது முதலே" என்பது நன்னூல். தமிழ் மொழியானது உயிரெழுத்துப் பன்னிரண்டும் மெய்யெழுத்துப் பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துக்களை முதலாக வுடையது. இவ்விரு வகையினுள் ஒன்றுகிய உயிரெழுத்துப் பன்னிரண்டனுள், பிறப்பு வகையால் அகர, இகர, உகர, மூன்றுமே சிறந்தன. அகரக்கூறும், இகரக்கூறும், சேர்ந்து யகரமும், அகரக்கூறும், யகரக்கூறும், இகரக்கூறும் சேர்ந்து ஐகாரமும், அகரக்கூறும், உகரக்கூறும் சேர்ந்து ஒகரமும், அகரக்கூறும், வகரக்கூறும், உகரக்கூறும், ஒளகாரமும் ஒலிக்கும் குறிலின் விகாரமே நெடிலுமாகும். இனி, மெய்யெழுத்துப் பதினெட்டும், வல்லினம், மெல்லினம், இடையினம், என மூவகைப்படும்.

தமிழ் என்னும் மொழியானது, தகரமகரம் என்னும் இரண்டு வல்லின மெல்லின மெய்களின்மேல் அ. இ. என்ற உயிர்கள் ஏறி இடையினழகர மெய் சேர்ந்து முடியப் பெற்றிருக்கின்றது. ஆகவே, தமிழ் என்னும் மொழியானது, அம் மொழிக்குரிய மூவகை மெய்களாலும், மூன்றுயிர்களாலும் அமைந்துள்ளது என்பது பெறப்பட்டது. இவ்வாறமைந்த பொருளால் இனிமை தருதல் பற்றியே தமிழ் என்பதற்கு இனிமை யென்று பொருள் கொண்டனர் பெரியோர். ஏனைய மொழிகளைக் குறிக்கும் மொழிகள், இவ்வாறமையவில்லை யென்பது ஆராய்வார்க்கு நன்கு விளங்கும்.

## தமிழ்மொழியின் பெருமை.

இத்துணை யமைப்பு வாய்ந்த தமிழ்மொழியானது ஒரு சமயம் சிவபெருமானைச் சங்கப் புலவரோடு ஒருவராக அமரும்படி செய்த தென்றுல் இதன் பெருமையை எவ்வாறியம்புவது?

"கண்ணுதற் பெருங்கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த விப்பசுந்தமிழேனை [ல்
மண்ணிடைச் சிலவிலக்கண வரம்பிலா மொழிபோ
எண்ணிடைப்படக் கிடந்ததாவெண்ணவும்படுமோ?
தொண்டர் நாதனைத் தூதிடைவிடுத்ததும்முதலை[க்
யுண்டபாலனை யழைத்தது மெலும்புபெண்ணுருவா
கண்டதும் மறைக்கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்
[றீர்.

என்றனர் திருவிளையாடற் புராண ஆசிரியரும் இத்தகைய சிறப்பும், பெருமையும் ஒருங்கேயமைந்த தமிழ் மொழியுடன் வேறு மொழிகளைக் கலந்து ஆபாசப் படுத்துகின்றனர்.

ஒருவர் மற்றொருவருடன் எம்மொழியால் முதன் முதலில் பேசுகின்றுரோ அதே மொழியால் இறுதிவரை பேசுதல் மிக அழகாக விருக்கும். அப்படிக்கில்லாது, சிலர், கீழ்வருமாறு பேசுகின்றனர்:—

"என்னுங்க (Brother) பிரதர், என்னுடைய (Father) பாதருக்கு, (Three or Four days,) திரி ஆர் போர் டேஸாய் ரொம்ப (Danger) டேஞ்சராயிருக்கின்றது. அதற்கென்ன செய்யலாம்?" என்று பேசுகிறார்கள். இதன் பொருளென்னவோ? ஆண்டவன்தா னறிய வேண்டும். 'அண்ணு? என்னுடைய தந்தையாருக்கு மூன்று நான்கு நாட்களாக மிகுந்த செளகரியக் குறைவாக இருக்கிறது. அதற்கு என்ன செய்யலாம்?' என்று பேசினுலென்ன என்பது விளங்கவில்லை.

இஃதுபற்றி அண்மையில் மதுரையில் கூடிய 'மதுரைத் தமிழ்ச் சங்கத்து ௪0-ம் ஆண்டு விழா'வில் தலைமை வகித்தவரும், சென்னை நிர்வாகசபை அங்கத்தினரும், சிறிது காலம் கவர்னராக வேலை பார்த்தவருமான கனம் சர், நார்மன் மார்ஷ்பாங்ஸ் அவர்கள் செய்த பிரசங்கத்தில் "தமிழில் உரையாடும் பொழுது பிறமொழிச் சொற்களை இடையிடையே கலந்து பேசுவதை நோக்க என்மனம் வருந்துகின்றது. அவ்வழக்கத்தை முற்றும் விட்டுவிட வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவ்வழக்கம் பேச்சில் மட்டும் நில்லாது எழுத்திலும் அச்சிலுங்கூட வழங்கக் காண

(இதன் தொடர்ச்சியை 170-வது பக்கம் பார்க்க)

[முருகன்] 168-ம் பக்கத் தொடர்ச்சி.

வந்து வச்சிரத்தான் எறிய, அவ்வாறு வடிவும் ஒன்றுய் அவனுடனே பொருது அவனைக் கெடுத்துப் பின், சூரபன்மாவைக் கொல்லுதற்கு அவ்வடிவம் ஆறுகிய வேறுபட்ட கூற்றுலே, மண்டிச்சென்றதென்று புராணங்கூறிற்று."

இங்கு "இருபேருருவின் ஒருபேரியாக்கை' என்பது முகம் குதிரை முகமும், உடல் மனித உடலுமாகிய சூரபன்ம னுடல். இங்ஙனம் இவன் வடிவுடைய னென்பதை "ஈரணிக்கேற்ற வொடியாப்படிவத்துச்—சூர்கொன்ற செவ்வேலாற்பாடி" என்னுங் கலித்தொகைச் செய்யுளடியானும், அதற்கு நச்சினார்க்கினியர், ஒடியாப் படிவத்து— கெடாத விரதத்தாலே, ஈரணிக்கேற்ற சூர்—முகங் குதிரை முகமும் உடல் மக்களுடலுமாகிய இரண்டு அழகுக்குப் பொருந்திய சூரபன்மாவை, கொன்ற செவ்வேலாற்பாடி—கொன்ற சிவந்த வேலையுடைய முருகனைப் புகழ்ந்து" என்று கூறிய உரையானும் அறியலாம்.




## காற்று

(தொகுதி 4, 21-ம் பக்கத் தொடர்ச்சி)

[திருவாளர். மா. பரமகுருநாத முதலியார், திருமயிலை]

கரியமல வாயுவின் சம்பந்தமாக விட்ட சில விஷயங்களை இங்குத் தொட்டுக் கவனிப்பாம்.

இது சர்வ சாதாரணமான தாகையால் இதைப் பற்றி எழுத வேண்டியது அவசியம் இன்று என்று முன் எழுத விடுத்தது. ஒரு நண்பர் காற்றில் கரியமலவாயு இருப்பதாகச் சொல்லியதை எவ்விதம் தெரிந்து கொள்வதென்று என்னை வினவினர். அதற்கு விடை தந்தேன். இவ்விதமாக வேறு சிலரும் வினவ இடமில்லாதிருக்க இங்கு இதை வரையலாயது.

சாதாரணமாய்க் கிடைக்கும் சுண்ணும்பை நீரில் கரைத்து அந்நீர் தெளிந்த பிறகு, வாய கண்ட ஒரு பாத்திரத்தில் அதை விட்டுப் பார்த்தால், சாதாரணமாய் ஒரு நிறமுமில்லாமலிருக்கும்.

(169-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறேம். 'கேஸ் டிஸ் மிஸ்ஸாயிற்று' என்று சொல்வதைக் கேட்பது சகஜமாயிருக்கிறது. 'வழக்குத் தள்ளுபடியாகி விட்டது' என்ற எளிதாயும் தெளிவாயும் தமிழில் சொல்லலாமே." என்று கூறியுள்ளார்.

கனம் மார்ஷ்பாங்ஸ் அவர்கள் யாவர்? அவர் ஒரு ஆங்கிலேயர். அவர் ஏன் இங்ஙனம் கூறவேண்டும்? நிற்க, கனம் மார்ஷ்பாங்ஸ் அவர்களது எண்ணம்போல் நமது புதுமைக் கவியான பாரதியார்:-

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்
மொழியில் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்
மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்"

எனக் கூறிப் போந்தார். என்னே பாரதியாரின் கவித்திறன்! இனியாகிலும் தமிழ் மக்கள் உணருவார்களா? தமிழ்நாடு தழைத் தோங்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக!

சுபம். சுபம். சுபம்.

அப்படியே சிலமணிநேரம் வைத்துப் பிறகு அதைப் பார்த்தால் அந்நீர் மேல் வெண்மையான ஏடுபடிந்திருப்பதைப் பார்க்கலாம்.

இன்னும் நாம் விடும் சுவாசத்திலும் கரியமல வாயு இருக்கிறதென்றேம். அதையும் எவ்விதம் காணலாம் எனின் முன்சொன்ன தெளிந்த நிறமற்ற சுண்ணும்பு நீரை, ஒரு பாத்திரத்தில் கொண்டு, ஒரு சிறிய குழாயையோ அல்லது துவாரமுள்ள ஒரு வைக்கோலையோ எடுத்துக்கொண்டு, ஒரு முனையை வாயில் வைத்தும், மற்றொருமுனையை அந்நீர்க்குள் வைத்தும் ஊதிக்கொண்டிருந்தால், சிறிது நேரத்திற்கெல்லாம் அந்நீர் வெண்மை நிறம் காட்டுவதைக் காணலாம்.

மேற்காட்டிய இரண்டிலும், கரியமல வாயுவும் சுண்ணும்பும் சேர்ந்து சாக் (Chalk) ஆகிறதால் வெண்ணிறம் காட்டுகிறது.

ஆகவே காற்றிலும், நாம் விடும் சுவாசத்திலும் கரியமலவாயு இருப்பது திண்ணம்.

ஒவ்வொருவரும் ஒரு மணி நேரத்திற்கு, 0·6 கனஅடி (C. ft) கரியமலவாயுவை வெளி விட்டுக் கொண்டே இருக்கிறார் என்பதும் கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது.

காற்றில், கரியமலவாயு அதிகரிக்குங்கால் அங்குள்ளவர்களுக்குத் தலைவலி, பசியின்மை, மலச்சிக்கல் முதலியவை உண்டாகின்றன என்பது அறியற்பாலது.

இவ்வாயுவின் சம்பந்தமான விஷயங்களை எல்லாம் இதன் முன் பகுதியில் எழுதி இருக்கிறது.

### நீராவி (watery Vapour)

காற்றில் நீராவி உண்டென்றேம். இதைப் பற்றிச் சற்றுக் கவனிப்போம். இது காற்றின் சேர்க்கைக்கு அவசியமான மற்றொரு வஸ்துவாகும்.

நீராவி காற்றில் பரவி இராவிடில் மரம், புல், பூடு முதலியவைகளிலுள்ள நீரும், ஜீவ வர்க்கங்களின் உடல்களிலுள்ள ஜலமும் உஷ்ணத்திஞல் வரண்டு எல்லாம் கெட்டுப்போகும் என்பதில் என்ன ஐயம்?

ஒரு மனிதன் 24-மணி நேரத்திற்குள்ளாக



நுரை ஈரல் வழியாய் 10-அவுன்ஸூம், தோல் வழியாய் 20 அவுன்ஸூம் ஆக, 30-அவுன்ஸ் நீராவியை வெளி விட்டுக்கொண்டே இருக்கிறன் என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இதைப் பூர்த்தி செய்ய ஜலம் வேண்டி இருக்கிறது.

ஆகவே நீராவி தாவரங்களுக்கும், ஜீவவர்க்கங்களுக்கும் வேண்டி இருப்பதால் இதைச் சதா சூரிய வெப்பத்திஞலோ அல்லது வேறு எந்த உஷ்ணத்திஞலோ பூமியிலுள்ள ஜலம் நீராவியாக ஆகாயத்தில் பரவிக்கொண்டே இருக்கச் செய்திருக்கிற கடவுளின் கருணையைக் கவனியுங்கள்.

உஷ்ணத்திஞல் ஜலம் வற்றுவதைப் பார்க்கலாம். ஓர் அகண்ட பாத்திரத்தில் ஜலத்தை விட்டு காற்றில் வைத்தால் அக்காலத்திய சீதோஷ்ணஸ்திதிக்குத் தக்கவாறு மெதுவாகவோ அல்லது சீக்கிரத்திலோ ஜலம் குறைந்து கொண்டே வருவதையும், பிறகு பாத்திரத்திலிருந்த ஜலம் காணுமையையும் காணலாம். அதிலிருந்த ஜலம் என்னயது? நீராவியாய் மாறியது.

அங்ஙனமாகவே பூமியிலுள்ள அகண்டாகார கடலினின்றும், ஏரி, குளம், குட்டைகளினின்றும், ஜலம் நீராவியாகி, ஆகாயத்தில் மேக முதலானவைகளுக்குப்பரவி, தங்கி, காலம் வாய்த்த போது மாரியாக மாறி, மறுபடியும் பூமிக்கு வருகிறது. இச்செய்கை இல்லையேல் பூமியில் மழை, பனி முதலானவையும் இல்லை தான். "மாரியல்லது காரியமில்லை" என்ற வாக்குக்கிணங்க, மாரியில்லையேல் நாமெங்கே? தாவரங்கள் எங்கே? இப்பொழுதுள்ள பூலோகமென்பது என்ன விதமாக இருக்குமோ? சர்வேஸ்வரனுக்குத்தான் ஏகவெளிச்சம்.

இது காலதேசத்திற்குத் தக்கவாறு இருக்கிறது. குளிர் காலத்திலும், குளிர் பிரதேசங்களிலும் ஆகாயத்திலுள்ள நீராவி குறைந்தும்; உஷ்ண காலத்திலும், உஷ்ணப்பிரதேசங்களிலும் அதிகமாகவும் இருக்கிறது. இவ்விதம் தான் இருக்க வேண்டி இருக்கிறது என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயமே.

ஆகவே நீராவியும் காற்றில் எத்தகைய பலன்களைக் கொடுத்துக்கொண் டிருக்கிறது என்பதையும் கவனியுங்கள்.

### நவாச்சார வாயு (Ammonia)

காற்றிலுள்ள மற்றொரு வாயு நவாச்சார வாயுவாகும். இது மாம்ச வர்க்கங்களும், தாவரவர்க்கங்களும், அழுகுமிடங்களில் உண்டாகின்றது. இன்னும் பூமிக்குள் ஓடும் சாக்கடைகளிலும் (Sewers) கரிசுரங்கங்களிலும் (Coal mines), ஆடு மாடுகளை வெட்டு மிடங்களிலும் (Slaughter houses) இதைக் காணலாம்.

இதற்கு ஒரு வித காரமான (Pungent) வாசனை உண்டு. இது நெருப்பு எரிவதற்கோ, பிராணுதாரத்திற்கோ அனுகூலமானது அல்ல. இது விஷக் காற்ருகையால், ஜீவராசிகளுக்குப் பிணிகளையும், சில சந்தர்ப்பங்களில் மரணத்தையும் விளைவிக்கின்றது. இது கெந்தகத்தோடு கலக்குங்கால் உண்டாகும் துர்நாற்றமோ சகிக்க முடியாதது. இது நீரில் கரையும் தன்மையுள்ளது. ஆகையால் மழை பொழியுங்கால் இவ்வாயு அந்நீரில் கரைந்து பூமியிலிறங்கி மரம், புல், பூடு முதலியவைகளுக்கு ஆகாரமாகிறது. இவ்வாயுவுள்ள குப்பைகள் பயிர்களுக்கு எருவாகின்றன.

### அக்கினித் திராவகம் (Nitric Acid)

இவ்வஸ்து ஆகாயத்தில் சிற்றளவாக எப்பொழுதும் உள்ளது. ஆனல் இடி இடித்து மின்னல் மின்னி மழை பெய்த பிறகு ஆகாயத்தில் அதிகமாக இருக்கும். இது உப்பு வாயு சம்பந்தப்பட்ட பதார்த்தங்கள் அழுகுவதால் உண்டாகின்றது. ஜீவவர்க்கங்களின் சுகாதாரத்திற்கு ஏற்றதல்ல. ஆனல் இதனல் தாவரங்கள் செழிக்கின்றன. மழையின் மூலம் பூமிக்கு வந்து பயிர் பச்சைகளுக்கு உணவாகிறது.

இவ்வஸ்துவும், நவாச்சார வாயுவும் ஜீவராசிகளுக்குக் கேட்டை விளைவிப்பதால், ஜலம் இக் கொடிய வஸ்துக்களைத் தன்னுள் அடக்கிப் பூமியிலிறக்கித் தாவரங்களுக்கு உணவாக்கி விடுகிறது. ஜலத்திற்கு இக்கொற்ற சக்தியைக்கொடுத்திருக்கிற தயாநிதியின் காருண்யம் இங்குங் கவனிக்கத்தக்கது.

இவ்விரண்டும் சுகாதாரத்திற்கு ஏற்றதல்லவே. இங்கு ஏன் இவைகளை எடுத்துக்காட்ட வேண்டியதென்றல்; கவனியுங்கள் சாக பதார்த்தங்கள் மனிதர்களுக்கு உணவாதிகளாய் உதவியாகிச் சுகாதாரத்தைக் கொடுக்கின்றனவல்லவா? அங்ஙனமாக நமக்கு உதவி புரிகிற ஒருவன், தக்க ஆகாராதிகளை உட்கொண்டு, சுகமாக இருத்தல் வேண்டுமல்லவா? இல்லையேல் உதவி புரிய எண்ணமுடையவனேனும் சக்தி இன்றி எங்ஙனம் உதவி புரிவன்? அக்கொற்றவன் சுகமாயிருப்பின் அன்றே நமக்கு உதவி புரிய அவனுக்குச் சக்தி இருக்கும்? அங்ஙனமே நமக்கு உதவி புரிகிற சாக பதார்த்தங்களுக்கு இவை உதவி புரிந்து செழிக்கச் செய்வதால் இவையும் வேறு வழியாக நம் சுகாதாரத்திற்கு உரித்தானவை என்பதை விளக்கிக்காட்ட இவைகளைப்பற்றி இங்கு எழுத வேண்டியதாயிற்று.

### கந்தக ஜலவாயு (Sulphurated hydrogen)

இது மஹா கொடிய விஷவாயு. இது, மனிதர்களைவிட, மிருகங்களுக்கு அதிக விஷத்தைக் கொடுக்கும் தன்மை யுள்ளது. பயிர்த் தொழில் செய்பவர்களுக்கு மாடுகளின் உதவி அதிகம் வேண்டி இருப்பதால், இதை அவர்கள் அதிகம் கவனிக்க வேண்டியது.

இது கெந்தகம் கலந்த பதார்த்தங்கள் அழுகுங்கால் உண்டாகிறது. இது சுயமாக இருக்குங்கால் அவ்வளவு கெடுதியல்லவாகிலும், சில கொடிய விஷக்கிருமிகள் இதனுடன் சேருங்கால் மரணத்தையே உண்டாக்கும் தன்மையுள்ளது. முக்கியமாக பூமிக்குள் ஓடும் சாக்கடைத் தண்ணீரில் இதை அதிகமாகக் காணலாம். இன்னும் சதுப்பு நிலத்தி

லும் அதிகம். இவ்விடங்களில் வேலை செய்கிறவர்கள் அநேகமாக அஜீர்ணம், இரத்த வரட்சி பலஹீந முதலியவைகளால் துன்புறுவதைக் காணலாம்.

ஆகையால் இக்கொடிய வாயு அதிகரிக்காமல் தடுக்கும் உபாயங்களையுந் தேடல் வேண்டும்.

இக்கொற்றவைகளைச் சுத்தம் செய்யும் முறைகளைப்பற்றிப் பின்னிட்டு வரைவாம். மேற் கூறிய வாயுக்கள் தவிர இன்னும் காற்றில் தாவர வஸ்துக்களும், உலோக வஸ்துக்களும் பரவி இருக்கின்றன என்பதை முன்னமே சொல்லி இருக்கிறதல்லவா? அதைப்பற்றிச் சிறிது இங்கு ஆராய்வோமாக.

இத்தாவர வஸ்துக்களிலும் உயிர் அற்றவை, உயிருள்ளவை என இரண்டு வகைகள் உண்டு. உயிர் அற்றவையாவன மரமட்டுகளினின்றும், புல், பூடு முதலியவையினின்றும் உண்டாகும் வெகு நுண்ணியவையாகிய பூப்பொடிகளும், பஞ்சு நூற்கும் சாலையினின்று உண்டாகும் பஞ்சு தூசுகளும், இறந்த பக்ஷி முதலியவையினின்று உதிரும் இறக்கை, பட்டு, மயிர் தூசுகளுமாம். இவை தனியாக அதிகக் கெடுதிகளை விளைவிக்காவிட்டாலும், பூமியிலும், ஆகாயத்திலும் உள்ள விஷக்கிருமிகளைப் போஷிப்பதால், அக்கிருமிகளின் துவாரா ஜனங்களுக்குக் கேட்டை விளைவிக்கின்றன.

உயிருள்ளவையாவன வென்றால், கட்புலனுக்ககப்படாத நுண்ணிய பூச்சுக்களும், கிருமிகளுமேயாகும். இவ்விஷப் பூச்சுக்கள் காற்றில் பரவி இருந்து ஜீவராசிகளின் உஸ்வாசத் துவாரா உடல்களில் புகுந்து அநேக வித கொடிய நோய்களை உண்டு பண்ணுகின்றன. இக்கொற்ற விஷக்கிருமிகள் அதிகமாகச் சீர்கெட்ட பூமியிலும், ஜன அடர்த்தியான இடங்களிலும், சரியான காற்றோட்ட மற்ற இடங்களிலும் அதிகம். சலன மற்ற காற்றில் இக்கிருமிகள் சீக்கிரம் பூமியைச் சமீபிக்கின்றன. மலையின் பேரிலும், கடல் ஓரங்களிலும் இக்கிருமிகள் சிற்றளவே யுள்ளன.

மேற் கூறியகாற்றின் சேர்க்கைகளின் விஷயங்களைக் கூடிய வரையில் என் சொல்ல வேண்டியதென்றால், சுகாதார விதிகளை அனுசரிப்பதற்கு நம்மைச் சுற்றிலும் என்ன என்ன இருக்கின்றனவென்றும், அவைகளின் நன்மை தீமைகள் எவையென்றும் கண்டறிந்தாலன்றிச் சுகாதார விதிகளை எங்ஙனம் அனுசரித்தல் கூடுமென்ற நோக்கத்தோடு இங்கு மேற்காட்டியவாறு எழுதலாயது.

கந்தக ஜலவாயுவும், காற்றில் பரவி நிற்கும் தாவர, உலோக வஸ்துக்களும் இயற்கையில் சுத்தமாகிறதில்லை யாகையால், சேர்க்கையின் துவாரா சுத்தப்படுத்தப்பட வேண்டி இருக்கின்றன. எவ்விதம்என்பிறகு காற்றைச் சுத்தப்படுத்தும் தலைப்பின் கீழ்காணலாம்.

இனி காற்றிலுள்ள அசுத்தங்களைக் கவனிப்போம்.

காற்று எப்பொழுதும் சுத்தமாகவே இருக்கிறதில்லை. அடிக்கடி கெடுகிறதும், சுத்த மடைகிறதுமாகவே இருககிறது. காற்றிலுள்ள அசுத்தங்களை அநேகமாக முன்பே எடுத்துரைத்தோம். இவை இரண்டு விதமாகும்:—

(1) வன்பொருள் மயமாய அசுத்தங்கள் (Solid impurities)

(2) வாயுமயமாய அசுத்தங்கள் (Gaseous impurities)

வன்பொருள் மயமாய அசுத்தங்கள்

- அநிந்திரம் (Inorganic) அதாவது மணல், தூசு, கரி, முதலிய உலோகங்களின் பொடிகள்
- இந்திரம் (Organic)
  - மிருகங்கள் (Animals)
    - உயிருள்ளவை, அதாவது கிருமிகளும் புழுக்களும்
    - இறந்தவை, அதாவது இரக்கை, பட்டு, கம்பளம், மயிர் முதலிய தூசுகள்
  - தாவரங்கள் (Vegetable)
    - உயிருள்ளவை, அதாவது கட்புலனுகாக் கிருமிகள் (microbes, Bacteria, Fungi, Infusoria)
    - இறந்தவை, அதாவது பூவின் பொடிகள் பஞ்சுத்தூசுகள் முதலியன

(தொடரும்)



# செங்குந்த யாத்திரைவாசி

## செங்குந்தர் வரலாறு

(தொகுதி 4, 11-வது பக்கத் தொடர்ச்சி)

நமது முன்னோர்கள் சரித்திரங்களையும், கர்ன பாரம்பரியங்களையும், கல்வெட்டுக்களையும் உற்று நோக்குவோர்க்கு அவர்கள் மதக்கொள்கையில் சைவர்களாகவும், புலால்மறுத்தல், கள்ளுண்ணாமை முதலிய உயர்ந்த ஆசார முடையவர்களாகவும் இருந்தார்கள் என்பது விளங்காமற் போகாது. சமயோசிதம் போல் புத்தர்களாகவும், சமணர்களாகவும் மாறிப் பின்னர் சைவக் கொள்கைகளை மேற்கொண்டு இப்போது 'சைவம் எங்களுக்கே உரிய மதம்' என்று சொல்லிக்கொள்ளும் சில இனத்தவரைப்போ லல்லாது நம்மவர்கள் எப்போதும் சைவ சமயக் கொள்கைகளை விட்டு மாறியதே கிடையாது. கைலாயத்தைச் சூழ்ந்த இடங்களிலும் நம் மூதாதையரே சிறந்த காவலராய் விளங்கினர் என்று ஈட்டி எழுபது முதலிய நூல்களில் கூறப்பெற்றிருப்பதனாலும், முசுகுந்தச் சக்கரவர்த்திக்குப் படைத்துணைவரா யிருந்து வங்கம், கலிங்கம், ஈழம், மலையாளம் முதலிய நாடுகளைச் செயித்தார்கள் என்பதனாலும், அஞ்சாத நெஞ்சு படைத்த பேர் பெற்ற போர் வீரர்களா யிருந்தார்கள் என்று அறியக்கிடக்கிறது. என்றாலும் இவர்களைப்போல் ஓரறிவுயிர்களுக்கும் தீங்கியற்றலாகாது என்ற உயரிய கொள்கை யுடையவர்களை யாண்டும் காண்டல் அரிது என்று கூறுவதற்குப் போதிய சான்றுகள் இல்லாமற் போகவில்லை. நம்மவர்கள் இன்றும் கையாண்டு வரும் ஆசாரங்களும் இதனை வலியுறுத்தும்.

ஆகவே அத்தகையோர் ஜனத்தொகையில் அதிகரித்தும், இவர்களால் பேணப்பட்டும், இவர்களைப் பேணியும் வந்த சோழ ராஜ்ஜியம் க்ஷீணித்தும், நம்மவர்கள் முன் பெற்றிருந்த செல்வாக்குக் காரணமாகப் பொறாமை கொண்டிருந்த சில சகோதர இனத்தவர் செல்வாக்குப்பெற்றும் வந்த காலத்தில் வேறு தொழிலை மேற்கொள்ள நேரிட்டது. நேரிடவே, உயர்திணை மக்கட்கேயன்றி அஃறிணை உயிர்கட்கும் எவ்வாறும் தீங்கிழைக்க லாகாது என்ற தங்கள் கொள்கையினின்றும் மாறாதவாறு நெசவுத் தொழிலை மேற்கொண்டனர். அத்தொழிலினும் போட்டியால் பிறர்க்குத் தீங்கிழைத்தாரில்லை. ஏனெனில் தமிழ் நாட்டில் போதிய நெசவுக்காரர் இன்மையால் தமிழரசர்கள் வடநாட்டிலிருந்து அத்தொழில் வல்லாரைத் தருவித்து ஆதரித்த காலமாகும் அது. நெசவின் மேன்மையைக்குறித்து அறிந்துள்ள உங்களுக்கு யான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. 'உழவே தலை' என்றும், 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்றும் உழவுத் தொழிலைச் சிறப்பித்துக் கூறவந்த திருவள்ளுவரே அதனினும் மேம்பட்டது நெசவென்று கருதியன்றோ நெசவைமேற் கொண்டனர்?

நம் முன்னோர்கள் ஆதியில் தமிழகத்திற்கு வெளியிலிருந்து வந்தவர்கள் என்பதற்கு நம் குலத்தொழிலும் ஒரு சான்றாக நிற்கின்றது. சரித்திர ஆராய்ச்சி யுள்ளவர்களுக்கு இது நன்கு விளங்கும். சில நூற்றாண்டுகளுக்கு முன் தமிழகத்தில் வந்து குடியேறிய மகம்மதியர், சௌராஷ்டிரர், மராட்டியர், ரஜபுத்திரர் முதலியவர்கள் பெரும்பாலும் கைத்தொழில், வியாபாரம் போன்றவற்றையே கையாண்டு வருவதைக் காண்கின்றோமேயன்றி விவசாயத்தைக் கையாளக் கண்டிலோம். இது போலவே வெளிநாட்டிலிருந்து வந்து குடியேறிய நம்மவர்களும் பெரும்பாலும் நெசவைத்தம் தொழிலாகக் கொண்டனர் என்று கூறுதல் பொருத்தமுடைத்தாம்.

நாளடைவில் நம்மவர்கள் அடைந்து வந்த பிற்போக்கை ஆங்கில அரசாட்சிக்கு முன் ஸ்திரமற்று ஒன்றன் பின் ஒன்றாகமாறிக் கொண்டு வந்த அரசாங்கங்களும் ஸ்திரப்படுத்த அநுகூலமா யிருந்தன. இப்போது ஸ்திரமாக விருக்கும் ஆங்கில அரசாங்க காலத்தில் மேல் நாட்டு இயந்திரங்களோடு போட்டி போட இயலாதவர்களாய்ப் பொருளாதார நிலையிலும் ஏனைய துறைகளிலும் பிற்போக்கை அடைந்து கொண்டே வருகின்றனர். (நாமே நம் துணியைக் கட்டுவதில்லை, வெட்கம், வெட்கம். என்ற சத்தம்) நாம் நெய்வதையே நாம் கட்டா விட்டால் பிறர் செய்கையைப்பேசுவானேன். நம் க்ஷேமத்தைக் கோரும் ஒவ்வொருவரும் நம் நாட்டுத்துணிகளையே வாங்கிக்கட்ட வேண்டியது அவசியந்தான்.

நண்பர்களே! நாம் இப்போது தமிழர்களாகத் தா னிருக்கிறோம். நம் முன்னோர்கள் சோழ அரசர்களோடு கலந்து தமிழையே தம் தாய் மொழியாகக் கொண்டு தமிழர்களோடு பழகத்தொடங்கியபடியால் நாம் நெடுங்காலத்திற்கு முன்னரே தமிழராய் விட்டோம். ஈண்டு யான் சரித்திர முறையில் நாம் வெளிநாட்டிலிருந்து வந்து இந்நாட்டில் குடியேறினோம் என்று கூறினேனேயொழிய இதை வைத்துக் கொண்டு நாங்கள் தமிழர்கள் அல்ல என்று சொல்லி வீண் விவாதங்களை உண்டுபண்ணக் கூறவந்தவனல்ல. இப்போது

நாம் தமிழர்கள் தான். அதை மறுக்க முடியாது. இவ்வுபந்யாசத்தில் கூறியவற்றை விரிவாக எடுத்துரைத்து அவற்றை ஸ்திரப்படுத்தக் கூடிய ஆதாரங்கள் பல இருப்பினும் காலத்தையும், உங்கள் சௌகர்யத்தையும் உத்தேசித்துச் சுருக்கமாகக் கூறினேன். இன்னும் இரண்டொரு நிமிஷத்தில் முடித்துக் கொள்ளுகிறேன்.

### நமது தற்கால நிலைமை

காலப்போக்கை யறிந்து நமது வாழ்க்கையைத் திருத்திக்கொள்ளாது பழமையினையே பாராட்டுதல் நமக்கு இயற்கைக் குணமாக இருந்து வருகிறது. பழையன வெல்லாம் எக்காலத்திற்கும் பொருந்துவனவாகா என்பதை நாம் நன்கு உணர வேண்டும். சில பொருத்த முடையனவாயிருக்கும். இக்காலத்திற்குப் பொருத்த மல்லாதவற்றை அதாவது நம்மைப் பிற்போக்கிற்குக் கொண்டு போகக் கூடியவற்றை அடியோடு மாற்றியோ அல்லது திருத்தியோ வைத்துக் கொள்ள வேண்டும். ஆப்பிரிக்காவில் இப்போது சஹாரா பாலைவனம் என்று சொல்லப்படும் வெறும் மணற் காட்டுப்பிரதேசம், புல் பூண்டுகளும் கூட முளைக்காத பிரதேசம, ஒரு காலத்தில் அநேக ஜீவநதிகள் பாய்ந்து மிகுந்த செழிப்பான நாடாக இருந்ததென்று அங்குக் காணப்படும் ஆறு முதலியவற்றின் அடையாளங்களினுல் தெரியவருகிறது. அக்காலத்தில் திரளான ஜனங்கள் நதிக்கரைகளில் நெல், கோதுமை முதலிய தானியங்களைப் பயிர் செய்து சுகமாய் வாழ்ந்து வந்தார்கள். நாளடைவில் அது ஒரு பெரும்பாலைவனமாக மாறி விட்டது. அப்பிரதேசம் செழிப்புற்றிருந்த காலத்தில் அங்கு வசித்து வந்தவர்களின் சந்ததியார் அவ்விடத்திலேயே இதுவரையில் இருந்து 'எங்கள் முன்னோர்களைப் போலவே நாங்களும் வாழ வேண்டும். அவர்களெல்லாம் இங்கிருந்து வாழாமலா போய் விட்டார்கள்?' என்று சொல்லிக்கொண்டு வீணே முயல்வார்களாயின், இயற்கை மாறுதலை உத்தேசித்து அதற்கேற்றபடி வாழ அறியாத அன்னவரை நாம் எவ்வாறு மதிப்போம்? அது போலவே கால நிலைமைக் கேற்றவாறு நமது வாழ்க்கையையும் திருத்திக்கொண்டு வாழ அறியாத நம்மைப் பிறர் எவ்வாறு மதிக்கிறார்கள் என்பதை நாம் யோசித்துப் பார்க்கிறதில்லையே. பரம்பொருள் ஒன்றே; என்றும் மாறாதது; அப் பரம்பொருளால் சிருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்சமும் அதனுள் அடங்கிய சரம் அசரம் ஆகிய இருவகைப் பொருள்களும் ஒவ்வொரு நிமிஷமும் மாறுதல் அடைந்து கொண்டே யிருக்கின்றன என்னும் உண்மையை நாம் நன்கு அறிவோமல்லவா? உண்மை இதுவாக நம் சமூகம் மாத்திரம் காலத்திற்கேற்ற மாறுபாட்டை ஏற்க மறுக்குமாயின் அஃது எவ்வாறு பொருந்தும்?

இவ்வளவிற்கும் காரணம் கல்வியில்லாமையன்றோ? நம்முன்னோர்கள் பெருமையைப் பற்றி நீங்கள் அனைவரும் உணர்வீர்கள். என்றாலும் நம் சமூகத்தவரை இப்போது ஏன் பிறர் நன்கு மதிப்பதில்லை? கல்வி இன்மையால் உண்டாகிய அறியாமையும் அவ்வறியாமையா லுண்டாகிய ஒழுக்கமின்மையும் பிறவுமன்றோ காரணங்களாம்? மக்களுக்கு இம்மை வாழ்வையும், மறுமை வாழ்வையும் ஆக்கி வைப்பது கல்வியன்றோ? அதனலன்றோ, நாள் தோறும், மாதந் தோறும், வருஷந் தோறும், லக்ஷக்கணக்கான பணத்தைக் கோயில்களுக்கும் திருவிழாக்களுக்குச் செலவிட்டும் நல்லபலனையும், பெயரையும் பெறுவதில்லை? நமக்குள் சகோதர பான்மையையும், க்ஷேமத்தையும், ஒற்றுமையையும் வளர்க்கும் பொருட்டு ஏற்படுத்தப் பெற்ற கடவுள் வழிபாட்டால் அதாவது கோயில் சம்பந்தமான விஷயங்களால் நம்மவர்கள் வதியும் ஒவ்வொரு கிராமத்திலும் கக்ஷிகளும், சண்டைச் சச்சரவுகளும், வழக்குக்களும் என்றும் நீங்காப் பகைமையும் உண்டாகி நாம் நாளுக்கு நாள் க்ஷீணித்து வருவதற்குக் காரணம் என்னவென்பதைச் சிறிதாவது யோசித்துப் பார்த்தீர்களா? செங்குந்தர்களாகிய நாம் அப்பர் சுவாமிகளைப் போன்ற மேதாவிகளையன்றோ சமய விஷயத்தில் பின்பற்றி நடக்க வேண்டும்? அப்பர் சுவாமிகள் திருஞானசம்பந்தர், அப்பூதியடிகள் போன்ற பெரியோர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு நடந்து கொண்டனர்? நாம் சரியான கடவுள் வழிபாடு இத்தன்மைத்து என்பதை அறிந்திருப்போமாஞல் அது சம்பந்தமாக மேற் கூறிய கெடுதிகள் விளைவதற்கு இடமுண்டாகுமா? இதற்கும் கல்வியின்மையன்றோ காரணம்? எதையும் உள்ளபடி உணர நமக்குக் கல்வியாகிய கண்ணில்லை. முகத்தின் கண் இரண்டு புண்ணைத்தான் பெற்றிருக்கிறோம். அப்புண் நமக்குத் துன்பத்தை யன்றி மற்றெதைத் தான் விளைக்கும்? யான் என்னென்று சொல்லுவேன்? எங்குச் சென்றாலும் கக்ஷி; எங்குச் சென்றாலும் கோயில் வழக்கு; எங்கு; சென்றாலும் பொறாமைச் (நமக்குள்ளாகவே); எங்குச்; சென்றாலும் அறியாமை; எங்குச் சென்றாலும் கல்லாமை; நம் சமூகத்தின் குறைகளை எடுத்துரைக்கப்புகின் கந்தபுராணத்தைப்போல் எண்ணிறந்த புராணங்கள் எழுதலாம்.

ஆகையால் துயிலினின்றும் விழித்தெழுங்கள். தட்டி எழுப்ப ஆட்கள் புறப்பட்டிருக்கிறார்கள். எழுந்து முன்னேற்ற மார்க்கத்தில் விரைந்தோட முயலுங்கள்." எனச் சொல்லி முடித்தேன். இதுவே உபந்யாசத்தின் சாரமாகும்.

மணி 10 ஆய்விட்டது. முத்து முதலியார் எழுந்து 'ஆண்டவமார்களே, நேரமாய் விட்டது. கூட்டத்தை இதனேடு முடித்துக் கொள்வோம். நாளை காலை 8 மணிக்கு மறுபடியும் கூட்டம் இதே இடத்தில் கூடும்.' என்றார். கூட்டம் ஜே! சப்தத்தோடு இனிது கலைநதது.

---



# வர்த்தமானம்

திருடர்களைப் பயப்படுத்த மின்சார நாய்களை ஒரு பிரஞ்சு இஞ்சினியர் கண்டு பிடித்திருக்கிறார்.

* * *

600 வருஷங்கட்கு முன்பே சைனக்காரர்கள் முசுக் கொட்டைப் பட்டையில் கரன்சி நோட்டுகள் அச்சடித்தனராம்.

* * *

ஒன்பது வார்த்தைகள் எழுதியுள்ள ஒரு அரிசி டில்லி கண்காட்சிச் சாலையில் இருக்கிறதாம். அது பூதக் கண்ணுடியில் பார்த்தால் தெரிகிறது.

* * *

### மனிதனைத் தின்னும் நண்டுகள்.

'நார்விச் சிட்டி' என்னும் கப்பல் கார்டனர் தீவுக்கு 200 கஜ தூரத்தில் பவளப் பாறையில் மோதி உடைந்து போனதால் மாலுமிகள் பலர் பேரலைகளுடன் போராடிச் சுரா மீன்களின் வாயிற் படாமல் தப்பிக் கரைசேர்ந்தனர். கரை ஏறியதும் 8 அங்குல நீளமான கொடுக்குடைய மனிதரைத் தின்னும் நண்டுக் கூட்டங்களும், கண்டோர் நடுங்கும் பார்வையை யுடைய எலிக் கூட்டங்களும் அவர்களை எதிர்த்தன. அவர்கள் கஷ்டப்பட்டுத் தடிகளால் அடித்துத் துரத்தினர். பிறகு, உடைந்த கப்பலின் மரத்துண்டுகளால் சுவர் எழுப்பிப் பாய்களைக் கொண்டு கூடாரம் போட்டு வசிக்கத் தொடங்கின ரேனும் நண்டுகளின் கொடுமையும், எலிகளின் தொல்லையும் விட்டபாடில்லை. இதற்காக இரவில் சிலர் தடிகளுடன் காவல் புரிய நேர்ந்தது. இவ்வாறிருந்தும் நண்டுகள் சதையைக் கௌவிச் சென்றதாலும் எலிகளின் கொடிய கடியினுலும் தேக முழுதும் காயங்களேற்பட்டன. நான்கு நாட்களுக்குப்பின் அவ்வழி வந்த படகினர் அவர்களைக் காப்பாற்றி, சிட்னி கொண்டு வந்து சேர்த்தனர்.

---

### மனைவிக்காக லாட்டரிச் சீட்டு.

பூடா பெஸ்ட் நகர வாசியான மிகவும் அழகு வாய்ந்த ஒரு வாலிபன் தனக்கொரு மனைவி வேண்டுமென விரும்பி ஒரு லாட்டரிச் சீட்டுப்பிடித்தான். அவன் அவ்வூரில் வெளியாகும் பத்திரிகை யொன்றின் விளம்பர மானேஜரிடம் சென்று தான் கல்யாண லாட்டரி பிடிக்கப் போவதாயும் அதற்குத் தன்னையே பரிசாக வைப்பதாயும் கூறிப் பத்திரிகையில் விளம்பரப் படுத்துமாறு அறிவித்தான். லாட்டரிச் சீட்டு ஒன்று 9 பென்ஸ் வீதம் 20,000 டிக்கட்டுகள் விற்று வரும் பவுன் 750-ம் பிரைஸ் சீட்டு விழும் பெண்ணுக்குச் சீதனமாகக் கொடுக்க இசைந்தான்.

விளம்பர மானேஜர் அந்தச் சீட்டு ஏதாவது கிழவிக்கோ, கோர ரூப முள்ளவளுக்கோ, படிப்பற்ற மூடத்துக்கோ விழுந்துவிடக் கூடுமென எச்சரிக்கை செய்தும் அவ்விளைஞன் தன் கருத்தை மாற்றிக்கொள்ள மறுத்து விட்டான். எனவே, விளம்பரம் வெளியிடப் பட்டு 20,000 டிக்கட்டுகளும் விற்று விட்டன. டிக்கட்டுகள் வாங்குவதற்கு அப்பத்திரிகாலயத்திற்குப் பலதிறப்பட்ட வயதுடைய பெண்களும், விதவைகளும், கிழவிகளும், ஏழைப் பெண்களும், செல்வச் சீமாட்டிகளும், பிச்சைக்காரிகளும், நோயுற்றவர்களுமாகக் கூட்டம் கூட்டமாய் வருவது கண்ட மானேஜர் டிக்கட்டுகளின் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடும்படி இளைஞனுக்கு மீண்டும் எச்சரித்தார். அவன் இணங்காமையால் சீட்டுக் குலுக்கப்பட்டது. முதற் சீட்டு விழுந்த பெண்ணை மணமுஞ் செய்து கொண்டான். 750 பவுன் சீதன மாகவும் வழங்கினான். கலியாணப் பெண்ணைப் பற்றி அறியப் பலர் முயன்றும் அவ்வாலிபன் அவளைப் பற்றி ஒன்றும் அறிவிக்க வில்லை.

---

### ஆண்களைக் கொல்லும் அரக்கிகள்
#### பெண்கள் தீவின் விபரீதம்
#### அந்தரங்கம் என்ன ?

தென் பசிபிக் மகாசமுத்திரத்தில் பெரியவையும் சிறியவையுமான அநேக தீவுகள் இருக்கின்றன. அங்கு வசிக்கும் ஜனங்கள் அநாகரீகர்கள். அவர்களிடையே பற்பல விநோதப் பழக்க, வழக்கங்கள் இருந்து வருகின்றன. சிறசில தீவுகளிலுள்ளவர்கள் நர மாமிசத்தைப் புசித்து வருகிறார்கள். ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாருடன் அடிக்கடி சண்டை செய்வதும் வழக்கம். இன்னும் சில தீவுகளில் மேற்கூறிய ராட்சசர்கள் மனிதர்களைப் பிடித்துத் துஷ்ட தேவதைகளுக்குப் பலியிட்டு அம்மாமிசத்தைப் புசித்து வருகிறார்கள். பசிபிக் மகா சமுத்திரத்திலுள்ள மேற்கூறிய தீவுகளில் சாலமன் தீவுக்கூட்டத்தைச் சேர்ந்த மாலய்டர் தீவிற்குப் பக்கத்தில் பொராசி போவா என்ற ஒரு சிறு தீவு இருக்கிறது. இதைப் போன்ற விநோதத் தீவு வேறெங்கும் கிடையாது. இந்தத் தீவு குடியேற்றத் தீவுபோல் விளங்குகிறது. அங்குப் பெண்களைத் தவிர ஆண்களே கிடையாது. அப்பெண்கள் உலக வழக்கத்திற்கு மாறாக ஆண்களை விஷமென வெறுக்கின்றனர். தப்பித் தவறி ஆண்கள் அங்கு வருவார்களாயின் சித்திரவதை செய்து கொல்லுகிறார்கள். இவர்கள் செயலானது பக்கங்களிலுள்ள மற்ற தீவு ராக்ஷதர்களுக்குப் பிடிக்கவில்லை. அந்த ராக்ஷத ஆண்களில் மூவர், பெரியோர்களின் புத்திமதியைத் தட்டி, இப்பெண்கள்

தீவை பரீக்ஷிக்கச் சென்றார்கள். அவர்கள் இந்தத் தீவில் கால் வைத்ததும், மேற்கூறிய ராக்ஷதப் பெண்கள் இவர்களை ஈட்டிகளாலும், அம்புகளாலும் தாக்கிச் சித்திரவதை செய்து தங்கள் வாசஸ்தலத்திற்கு இழுத்துக்கொண்டு போனார்கள். இவர்கள் அத்தீவின் பற்பல பாகங்களில் தனித்தனி கூட்டங்களாகி, தனிக் கிராமங்களேற்படுத்தி வசித்து வருகின்றனர். மேற் கூறிய மூன்று ஆடவரையும் சிறை செய்தவுடன், ஒவ்வொரு கிராமத்திற்கும் தூதுவர்களை அனுப்பி யாவரும் வந்து சேர்ந்தவுடன், ஒரு பெரிய உற்சவம் கொண்டாடி, மேளங்கள் முழங்க ஆடிப்பாடிக் கைதிகளைத் தீயிட்டு வதைத்துக்கொன்று புசித்தனர். அவ்விருந்து இரண்டு நாட்கள் நீடித்திருந்தது. அதன்பின் ஆடவருடைய எலும்புக் கூடுகளை எடுத்துச் சென்று "பெண்கள் தீவுக்குள் நுழையும் ஆண்களுக்கு இதுவே கதி" என்று மற்றவர்களுக்கு எச்சரிப்பதற்காக, அவற்றைக் கடற்கரையில் நிறுத்திவைத்தனர்.

பக்கத்துத் தீவுகளிலுள்ள ஜனங்கள், அந்த 'பொராசிபோ' தீவு வாசிகளைப்பற்றி அறியவோ அல்லது அவர்களைப்பிடித்து வந்து விவாகஞ் செய்து கொள்ளவோ பல தடவைகளில் முயன்றும், பயனற்றுப் போயிற்று. அவ்விதம் முயன்றவர்கள் கதிகள்யாவும், மேற்கூறிய மூன்று ஆடவர் கதியேயாயின. இப்பெண்கள் கடற்கரையில் அதிக ஜாக்கிரதையாகக் காத்திருந்து, வரும் ஆண்கள் ஒவ்வொருவரையும் பிடித்துக்கொன்று விடுகின்றனர்.

### பெண்கள் சீர்திருத்தம்

மேற்கூறிய அரக்கிகள் தற்போது சீர்திருத்தம் அடைந்திருக்கிறார்கள். ஆடவர்களை வெறுத்தபோதிலும் அங்கு மதப்பிரசாரத்துக்குச் செல்லும் வெள்ளைப் பெண்களை வெறுக்கிறார்களில்லை. அவர்களை வரவேற்று, அவர்கள் உபதேசங்களை வெகு கவனமாய்க் கேட்டு வருகிறார்கள். மேற்கூறிய மதப்பிரசார பெண்களின் நன்முயற்சியினால், அந்த அரக்கிகள் இப்போது பல நாகரீக பழக்க வழக்கங்களைக் கைக்கொண்டிருக்கின்றனராம். முன்போல் அவர்கள் நிர்வாணமாகத் திரியும் வழக்கத்தை விட்டுவிட்டனர். இப்போது உடையணிந்து வருகின்றனர். அநேகர் துஷ்ட தேவதைகளை வணங்கும் கொடிய வழக்கத்தையும் விட்டு, கிறிஸ்தவர்களாகி யிருக்கிறார்கள். ஆப்பக்கங்களில் வசிக்கும் ஆண்களைவிட இவர்கள் தங்கள் வாசஸ்தலங்களை மிக அழகாகவும், அமைப்பாகவும் கட்டியிருக்கிறார்கள். அவ்வீடுகளில் சித்திர வேலைப்பாடுகளும் செய்து, அவற்றை அழகுபடுத்தி வைத்திருக்கின்றனர்.

மேற்கூறிய பிரசாரகர்கள் எவ்வளவு முயற்சி செய்தும், அப்பெண்கள், அத்தீவுக்குள் ஆண்களை அனுமதிக்கச் சம்மதிக்கிறார்களில்லை. ஆண்கள் தப்பித் தவறி அங்கு வந்தால் அவர்களைத் தீயிலிட்டு வதைப்பதையும் நிறுத்த முடியவில்லை.

அப்பிரசாரகர்கள் அத்தீவினர் பாஷையைக் கற்று அப்பாஷையிலே அவர்களுக்கு உபதேசம் செய்து வந்தும், அந்தத் தீவிற்கு அவர்கள் எப்படி வந்தார்கள், அப்பெண்கள் ஆண்களை ஏன் வெறுக்கின்றனர் என்ற விஷயங்களை மாத்திரம் அவர்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அவர்கள் ஆண்களை விரும்பும்படிச் செய்வது முடியாத காரியமென்பதையும், ஆண்களின் உதவி இல்லாமல் இப்பெண்கள் சௌக்கியமாக இருக்கக்கூடுமென்பதையும் பிரசாரகர்கள் பூர்ணமாக அறிந்து கொண்டனர். இவர்களுடைய ஜனவிருத்தி மர்மந்தான் கண்டுபிடிக்க முடியவில்லை.

இப்போதில்லா விட்டாலும் சமீபத்தில் எப்போதாவது, சில ஆண்கள் படையெடுத்துச் சென்று இந்த பொராசிபோ தீவைக் கைப்பற்றி, இவ்வரக்கிகளை அடக்குவார்களென்பதில் சந்தேகமில்லை. ஆனால் அந்நாள் வரைக்கும் ஆண்கள் அத்தீவைப் பற்றி ஆராய்ச்சி செய்வதை மறந்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

---

## மந்திரவாதி சாபம்

### படுக்கையில் பாம்புகள்.

ஆப்பிரிக்காவிலுள்ள ஜூஜூ என்ற பிரதேசத்தில் டிஸ்டிரிக்ட் கமிஷனராயும், நையாக்ரா பிரதேசத்தில் நீதிபதியாயுமிருந்த ஸ்ரீ. பிராங்க் ஹைவ்ஸ் என்பவர், அங்குள்ள மந்திர வாதிப் பெண்களைப் பற்றி அநேக ஆச்சரியக் கதைகள் கூறுகின்றார்.

ஒரு கிழவி தன் மகன் சிறைக்குச் சென்றதற்கு முக்கிய காரணம் இவரே எனக் கருதிச் சாபம் கொடுத்தாள். அதனால் அநேகவித பாம்புகள் ஷை கமிஷனரைத் சதா தொடர்ந்து கொண்டே இருந்தன. அவருடைய படுக்கையிலும், கழட்டி வைத்த பூட்சுகளிலும் அவை படுத்துக் கொண்டிருந்தன. அவைகளெல்லாம் விஷப் பாம்புகள்; ஒன்று மாத்திரம் சுமார் ஐந்தடி நீளத்திற்குமேல் இருக்கும்.

இது இவர் ஒபுடு என்ற ஊரிலிருக்கும்போது நடந்ததாம். அக் கிழவி இவருடைய வாசஸ்தலத்திற்கு வெளியில் நின்று சாபம் கொடுத்தபோது பிராங்க்ஹைவ்சினுடைய வேலைக்காரர்கள் நன்றாகக் கேட்டுக் கொண்டிருந்தனராம்.

### தோஷ திருஷ்டிக் கண்

அதைக் கேள்விப் பட்டவுடன் அந்தக் கமிஷனர் அவளைச் சிறை செய்ய உத்தரவிட நினைத்தார், ஆனால் ஏதோ மந்திரத்தால் கட்டுண்டவர் போல் அவருடைய வாய் உத்தரவிட எழவில்லையாம். அதே நாள் மாலை அவருடைய படுக்கையின் மேல் ஒரு பெரிய கருநாகம் படுத்துக் கொண்டிருந்தது. அவருடைய வேலைக்காரன் அதைத் தடியால் அடித்துக் கொன்றுவிட்டான். இம்மாதிரியாக மூன்று நாட்களுக்குள் பதினைந்து பாம்புகள் கொல்லப்பட்டன. அவையாவும் ஹைவ்ஸ் போகும் இடங்களிலேயே தென்பட்டன. அதனால் அவர் தமது



ஸ்டேஷனை விட்டு வீட்டிற்குப் போக உத்தேசித்தார். ஆனால் அவர் வீட்டை அடைந்ததும் வீட்டின் வாயில் மண் சுவற்றின் மேலேயே அநேக பாம்புகள் வெயில் காய்ந்துக் கொண்டிருந்தன.

அந்நாள் இரவு இவர் தூங்கிக் கொண்டிருக்கும் போது ஏதோ ஒரு கனத்த வஸ்து கொசு வலையின் மேல் விழுந்த உணர்ச்சிகொண்டு, எழுந்து, ஆராய்ந்தார். மெதுவாகக் கையை மேலேகொண்டு போய், ஜாக்கிரதையாகப் பரீக்ஷித்துப் பார்த்தபோது ஒரு பாம்பு சுருண்டு படுத்துக் கொண்டிருந்தது. அவர் உட்கார்ந்தபோது அது அவருடைய முகத்தைத் தொடக்கூடிய உயரத்தில் தாழ்ந்து இருந்தது.

### சாப விமோசனம்.

அவர் மீண்டும் ஒபுடுவிற்கே சென்று சாபம் கொடுத்த அந்தக்கிழவியைச் சந்திக்க நிச்சயித்தார். அவர் புறப்படும் போது தனது பெட்டியின் மேலேயே ஓர் பாம்பு இருக்கக் கண்டு அதைத் தமது காலால் எட்டி உதைத்தார். அதனால் அவருடைய காலில் பலத்த காயம் பட்டது. அந்தக் கிழவியை அடைந்ததும், ஹைவ்ஸ் அவள் கன்னத்தை பலமாகக் கடித்து "என் சாபத்தைத் தீர்க்காவிட்டால், எனது பற்கள் உன்னைக் கொல்லக் கடவன" என்று மறுசாப மிட்டார். நற்காலமாக அந்த மந்திர வாதியும் இதை உண்மை என்றே எண்ணி, தான் இட்ட சாபத்தை மாற்றினாள். அதன் பின்னால் பிராங்க் ஹைவ்சுக்குப் பாம்புகளால் யாதொரு தொந்தரவும் நேரிடவில்லை.

---

## தேர்தல் வெற்றி

### தென்னாற்காடு ஜில்லா

26-4-30 ல், புவனகிரி யூனியன் போர்டு தேர்தலில் திரு. பொ. ந. பொன்னம்பல முதலியார் அவர்கள் 96 ஓட்டுகள் பெற்று வெற்றி பெற்றார். 30-4-30 தேர்தல் கொண்டாட்டத்தை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ சிங்காரவேலு சுவாமிகளால் ஒரு உபந்யாசம் நடை பெற்றது. திரு. பொ. ந. பொன்னம்பல முதலியாருக்குப் பூமாலைகள் சூட்டினார்கள் என நிருபர் எழுதுகிறார்.

---

## திருமண நன் கொடை

சீகாழி நாட்டுக்குத் தலைநகரமாகிய திருநாங்கூர் கிராமத்தில் திரு. த. ந. சொக்கலிங்க முதலியார் அவர்கள் இல்லத்தில் சுக்கிலஹு பங்குனி மீ. 25உ திரு. தா. சு. சபாபதி முதலியார் அவர்கள் குமாரர் திரு. நடராஜ முதலியாருக்கும் கீழையூர் திரு. அரு. வயித்தியலிங்க முதலியார் அவர்கள் குமாரத்தி ஸ்ரீமதி இராஜாம்பாள் அம்மாளுக்கும் நடந்த திருமணவிழாவில் அவ்வமயம் கீழையூர் திரு. அ. சொக்கலிங்க முதலியார் அவர்கள் பெருமுயற்சியால் நமது தலைச்சங்கத்திற்கு முறையே பிள்ளை வீட்டாரிடம் ரூ. 2-0-0 பெண் வீட்டாரிடம் ரூ. 1-வாங்கி வழங்கியுள்ளார்கள். அன்னவர்களது குலப்பற்றும் ஊக்கமும் போற்றத் தகுந்தது.

---

### மித்திரனுக்கு நன் கொடை

தேவக் கோட்டை மளிகை வியாபாரம் திரு. வீர. பி. சி. த. நடராஜ முதலியார் அவர்கள் செங்குந்த மித்திரனுக்கு 23-4-30ல் நன் கொடையாக கொடுத்த ரூபா. 2-0-0 இவரது பெருந்தன்மையையும் குலப்பற்றையும் நம்மவர் ஒவ்வொருவரும் பின்பற்றுவரேல் நமது குலம் விரைவில் முற்போக்கடையும் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

---

### லாட்ரியில் பிரைஸ் வந்த தோகையில் கல்விநிதிக்கு நன் கொடை

| | | | | |
|---|---|---|---|---|
| தென்காசி ப. கு. கு. சுந்தர முதலியார் வரவு. | | 0 | 10 | 0 |
| சிலோன். மு. ல. வி. சித்தநாத முதலியார் வரவு. | | 0 | 10 | 0 |
| ,, M. Y. P. சின்னசாமி முதலியார் வரவு. | | 0 | 10 | 0 |
| நாகப்பட்டணம். அ. ப. முத்துக் குமாரசாமி முதலியார் வரவு | ரூ. | 1 | 8 | 0 |
| ஷை. ப. ராக்கப்ப முதலியார் வரவு | ரூ. | 0 | 8 | 0 |

### உபகாரச் சம்பள நன்கொடை

புதுவை. A. முத்தைய முதலியார் பி.எ., பி.எல்., அவர்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| எப்ரல். மே. மாதத்திற்கு வரவு | ரூ. | 10 | 0 | 0 |

---

### உண்டியல் வரவு

| | | | | |
|---|---|---|---|---|
| மதராஸ் பாளயக் காட்டுக் கம்பெனியார் அவர்கள் வரவு மாசி மீத்திற்கு | ரூ. | 88 | 0 | 0 |

---

### சீமந்த மூகூர்த்த நன் கொடை

குவாகம் நாட்டைச் சேர்ந்த பொன்பரப்பி கிராமத்தில் திருவாளர் த. மு. வேலாயுத முதலியார் சகோதரர் திருவாளர் அருணாசல முதலியாருக்கு 11-4-30ல் நடந்த சீமந்த மூகூர்த்தத்தில் நமது சங்கத்திற்கு நன்கொடையாக அளித்த ரூபா. 1-0-0. இவரது குலத்தொண்டும் ஊக்கமும் போற்றற் குரியன.

---

### பிழை திருத்தம்

மித்திரன் 4-வது தொகுதி 4-வது பகுதியில் 134-ம் பக்கம் சிறுத்தொண்ட நாயனார் திருநக்ஷத்திரக் கொண்டாட்டம் என்ற பிரசுரத்தின் கீழ்த் திருநாகேஸ்வரத்திற்கு அடுத்த சன்னாபுரம் எனச் சேர்த்துப் படிக்கவும்.

ஷை 134-ம் பக்கம். கல்யாண நன்கொடை என்ற தலைப்பின் கீழ்த் திருவாளர். மா. குப்புசாமி முதலியார் தம்பி யாகிய என்பதை தமையனார் என்று திருத்திக்கொள்ளவும்.




## நமது அனுபவ வளர்ச்சி.

ஒரு பக்தர்: ஏனையா, அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒரு அம்மையார் மாத்திரம் மிகவும் வயது தளர்ந்தவராக இருக்கிறார்களே, காரணம் என்ன?

மற்றொரு பக்தர்: இது தெரியாதா? 62 பிள்ளைகளையும் அதோடு ஒரு பெண்ணையும் பெற்ற அம்மையார் எப்படி இருப்பார்கள்?

*

ஒருவர்: (திருவள்ளுவர் உருவத்தைப் பார்த்து) இவர்தானு சம்பந்தர்?

மற்றொருவர்: இல்லை, இல்லை, மஸ்தான் சாயபு.

மற்றொருவர்: சே, சே, ஒளவையாருடைய புத்திரர்.

மற்றொருவர்: நன்ருகச் சொன்னீர்! சிவாலிங்கத்திலிருந்து பிறந்தவர் அல்லவா இவர்?

*

மூட நம்பிக்கை: ஒரு காரியம் ஜெயமாகுமா என்று தெரிய வேண்டும்.

துறும்பு: ஆல மரத்தடியில் ஜோசியன் இருப்பானே?

மூட: அவன் ஆகாதென்று சொல்லி விட்டால்?

து: அப்படியானுல் கொத்தவால் சாவடியில் மிளகாய், சீக்காய்க் கடைகளுள்ள வரிசையில் போய் காரியம் ஜெயமாகுமா என்று நினைத்துக் கொண்டு நில்லும்.

*

அன்பர்: சுவாமிகளே, சிறியேனுக்கு ஒரு சந்தேகம். தாங்கள் மகா ஞானியென்றும் முற்றுந் துறந்தவரென்றும் பலர் கூறக் கேட்டுள்ளேன். தாங்கள் ஏன் பொன் உருத்திராக்கமும், வைர மோதிரங்களும் சிறந்த பட்டாடைகளும் அணிகிறீர்கள் என எளியேனுக்கு விளங்கவில்லை. சுவாமிகள் கோபிக்கலாகாது.

அடிகள்: அன்பரே, நும்போன்ற அன்பர்களைத் திருப்தி செய்யவே இந்த நிலையா வேஷங்களையெல்லாம் பூண்டிருக்கிறது.

அன்: அப்படியா. எளியேனது வேண்டுகோளொன்றுண்டு. சுவாமிகள் இணங்குமோ?

அடி: அன்பர்கள் அவாவைத் திருப்தி செய்வதே என் கொள்கை.

அன்: சந்தோஷம், சுவாமிகள் எளியேன் பொருட்டுத் தயை செய்து ஒரு நகைமுக நங்கையை மணம் புரிந்து கொள்ளுமோ?

*

## தற்கால 'ஜே'

அமிர்தாஞ்சனத்துக்கு ஜே!
சுகானந்த பல்பொடிக்கு ஜே!
சேட் பீடிக்கு ஜே!
கரீம் பீடிக்கு ஜே!
யானைமார்க்கு சிகரெட்டுக்கு ஜே!
முத்துக் கிராமணி கள்ளுக்கடைக்கு ஜே!
பட்டுக் கிராமணி சாராயக்கடைக்கு ஜே!—!!!

*

## ஒரு பக்தரின் வருணனை.

ஆஹா, அன்று நடந்த உற்சவத்தை என்னவென்று வர்ணிப்பேன்! என்ன அலங்காரம்! சுவாமி உடம்பெல்லாம் நகைதான். எவ்வளவு பெரிய மாலை! சுவாமியையே மறைத்துக் கொண்டது.

எத்தனைவித வாத்தியங்கள்! எத்தனைத் தாசிகள்! பெரிய கோயில்; நிறைந்த பணம். அதில் பூஜை செய்கிற பிராமணர் கையில் மாத்திரம் 20,000 ரூபாய் நகையிருக்கும்.

*

ஒரு வழிப்போக்கன் ஓர் ஊருக்குப் போய்க் கொண்டிருந்தான். அவனைப் பார்த்து சுப்பன் கேட்பது:

சுப்பன்: ஓய் ஐய்யா உமக்கு எந்த ஊர்.

வழிப்போக்கன்: ஐய்யா நீர் கேட்ட ஊர் தான்.

*

பட்டிக்காட்டான்: என்னய்யா. வாத்தியாரே, நம் பையனுக்கு அ. ஆ. தெரியவில்லையே.

வாத்தியாயர்: ஐய்யா உம்முடைய பையன் பல வார்த்தைகள் பேசுபவனுயிற்றே.

பட்டிக்காட்டான்: எங்கே சொல்லச் சொல்லுங்கோ.

வாத்தியாயர்: அடே சுப்பு இங்கே வாடா, இதை வாசிடா.

பையன்: தடம், வடம், மடம், படம்.

பட்டிக்காட்டான்: நல்ல படிப்பு ஐய்யா, நான் போயிட்டு வாரேன்.

(தொடரும்)

*






## ஸ்ரீ. ராமகிருஷ்ண பரமஹம்சர். உபதேசம்.

(1) அத்வைதமாகிய திவ்யஞானத்தை ஜேபிலேயே போட்டுக்கொண்டு நீ எதுவேண்டுமானுலும் செய். அப்பொழுது உன்னிடத்திலிருந்து தீமையே வாராது.

(2) சர்ப்பமானது அதன் சட்டையினின்றும் வேரு யிருப்பதுபோல், ஆத்மாவும் சரீரத்தினின்றும் வேரு யிருக்கிறது.

(3) ஈஸ்வரன் எல்லோரிடத்திலும் இருக்கிருர். ஆனுல் எல்லோரும் ஈஸ்வரனிடத்தில் இல்லை. அதுதான் அவர்கள் துன்புறுவதற்குக் காரணம்.

(4) ஈர விறகும் நெருப்பின்மீது வைக்கப்பட்டால், சீக்கிரத்திலே உலர்ந்து விடுகிறதுடன் எரிய ஆரம்பிக்கிறது. அதுபோலவே சாதுக்களுடைய சங்கம் உலகினர்களுடைய காமமும் ஆசையுமாகிய ஈரத்தை போக்கடிக்கின்றது. பின்னர் விவேகாக்கினி விடாமல் எரிகிறது.

(5) ஒரு புண் ஆறிவிட்டால் பொறுக்குத் தானே விழுந்து விடுகிறது. அதற்கு முன் அந்தப் பொறுக்கை எடுத்தால், புண்ணில் ரத்தம் வருகிறது. அதுபோலவே திவ்யஞானம் உண்மையில் உண்டாகும்பொழுது ஜாதி வித்யாசங்கள் எல்லாம் ஒழிந்து விடுகின்றன. ஆனுல் அஞ்ஞானிகள் அந்த வித்யாசங்களை மீறி நடப்பது தப்பு.

(6) உன்னை உலகினர் அறிந்து கொள்ளும் பொருட்டும் கௌரதைக்காகவும் பொது நலச் சேவை செய்யாதே. பாமர மக்கள் உய்யும் வழியைப் பொதுவாக இறைவன் கிருபையால் செய்வதாக செய். அதனுல் உனக்குப் புகழ்ச்சி ஏற்படினும் இகழ்ச்சி ஏற்படினும் அதைப் பொருட்படுத்தாதே.

ப. நஞ்சப்ப முதலியார் பள்ளைய பாளையம்.

### மதிப்புரை

### தமிழரசு

### செங்குந்த மித்திரன்

செங்குந்த வகுப்பினரின் முற்போக்கை முன்னிட்டுத் திங்கடோறும் வெளியிடப் பெறும் மங்கலமிகும் இப்பத்திரிகையைக் கண்டு அகமகிழ்ந்தோம். இன்னமுதென இன்பம் பயக்கும் கட்டுரைகளும், அக்கட்டுரைகளைத் தன்னுளே பொதிந்து கிடக்கும் இப்பத்திரிகையின் கவின்பெறும் கட்டழகும், காணக் காண காண்பார் மனத்தைக் கொள்ளை கொள்ளும். மூவ்வண்ணங்களால் தீட்டிய முருகுடைக் கடவுளின் அழகுடை ஓவியம் இதன் தலையேட்டில் உளது. குறையே இன்றி நிறைபெற உலவும் மாதப் பத்திரிகைகளின் தலைமிகும் இச் செங்குந்த மித்திரனைச் செங்குந்தச் சோழர்களுடன் ஏனைய நம் தமிழரசு மக்கள் அனைவருமே போற்றிப் படித்தல் ஏற்றமுடைத்தாம்.

### மதன சுந்தரி மாத்திரைகள்

இம்மாத்திரைகளை உட்கொண்டவர்களுக்கு சிற்றின்பம்இன்னதெனப் பூர்த்தியாய் விளங்கும். இந்திரபோகத்தைத் தரும். ஆண்தன்மை குன்றிவவர்களுக்கும் சந்ததி இல்லாதவர்களுக்கும் இதுசஞ்சீவி போன்றது. தேகவலிமை நரம்புகளுக்குச் சக்தியும் உண்டாக்குவதன்றி இருபாலார்க்கும் இன்பத்தையுண்டாக்கும். ஒரு தடவை இம்மாதிரிகளை உண்டு அனுபவித்தவர்களுக்கு நாங்கள் மறுபடியும் சொல்லவேண்டுவது இல்லை. இதுவே தேவா அமிர்தம்.

இதன் விலை டப்பி 1-க்கு ரூ. 1—0—0.

தபால் செலவு பிரத்தியேகம்.

ரூபிஸ் பெஸிபிக் ஔஷதாலயம்.

நெ. 30, நம்மாழ்வார் தெரு, மதராஸ்.

# நிருபங்கள்

## எங்களூரும் நமது இயக்கமும்.

நமது தலைச்சங்கமானது சென்ற சில வருஷங்களாக நமது சமூக முன்னேற்றத்திற்காக இரவு பகலாய் ஊக்கம் தளராது உழைத்து வருவதை மித்திரன் வாசகர்களும், பிறரும் நன் குணர்வர். என்றாலும் நம்மவர்கள் அநேக இடங்களில் இன்னும் மாதந்தோறும் நம்மைத்தேடி வரும் மித்திரனுக்கும், அப்போதைக்கப் போது நம்மைச்சீர்திருத்த வரும் தலைச்சங்கப் பிரசாரகர்களுக்கும் செவிசாய்க்காது சுயகாரியத்தையே பெரிதென மதித்து நமக்குள் ஒற்றுமை யொழிந்து, கக்ஷிப் பிரதிகக்ஷிகளால் சிதறுண்டு, ஏழ்மையெய்தி, பிறரால் கேவலமாக மதிக்கப்பட்டு வருவதை அடியோடு மறந்து 'புளியங்காய்க்குப் புளிப்புக்குத்த வேண்டுமோ' என்று வீண் வார்த்தை சொல்லிக் கொண்டு, இன்றைக்கும் நாம் முருகன் சகோதரர்களே என்று நினைத்துக் கொண்டும் சொற்பன உலகத்தில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் சொற்பனம் என்று கலையுமோ! நித்திரை என்று தெளியுமோ! அம்பலக்கூத்தனே அறியவல்லான்.

நான் வெளியூர்களுக்கு அதிகம் சென்றவனல்லன். ஆகவே எனக்கு வெளியூர்ச் சகோதரர்கள் நிலைமை தெரியா தென்றாலும் நமது மித்திரன் மூலம் அவர்களைப் பற்றி ஒரு வாறு அறிந்துள்ளேன். அவ்வாறு ஆகம அளவையால் பெற்ற அறிவைக் கொண்டு நோக்குங்கால் எங்களூரைப் போல் ஏனைய ஊரார் இன்னும் அவ்வளவு நித்திரை மயக்கத்தில் இருப்பதாகத் தோன்றவில்லை. எங்களூரில் நாங்கள் அவ்வாறு இருப்பதற்குத் தகுந்த காரணங்கள் இல்லாமற் போகவில்லை. சொல்லுகிறேன் கேளுங்கள்.

எங்களூரே தேவார திருவாசகங்களுக்கு ஆதியும் அந்தமுமாயிருப்பது. எங்களூரே சைவ சமயாச்சாரியர்களாலே யன்றி, ஏனைய பெரியோர்களாலும், மன்னாதி மன்னர்களாலும் புகழ்ந்து, பேணி, போற்றப்பெற்றது. எங்களூரே சிவபெருமானது 999 கலைகளுக்கும் நிலைக்களமாயிருப்பதன்றி ஏனைய தலங்களெல்லாவற்றிற்கும் உரிய எஞ்சிய ஒரு கலையும், அர்த்தராத்திரியில் வந்து தங்க இடமாயிருப்பது. எங்களூரே ஐம்பெரும் பூதங்களுள் மேலானதும், பரிசுத்தமானதுமாகிய ஆகாச க்ஷேத்திரமாகும். எங்களூரே தரிசிக்க முத்தி தரக்கூடிய புண்ணியதலம். எங்களூரே ஊரெனப்படுவது. உறையூர் என்றாற் போல 'கோயில்' என்னும் அடையெடுக்காத ஒரு தனிச் சொல்லால் குறிக்கப்படுவது எங்களூரே. கைலாயத்திலிருந்து ஸ்ரீ நடராஜப் பெருமானோடு வந்த மூவாயிரவர் வாழுமிடம்.

மித்திரநேயர்களே! திருக்கைலாய பரம்பரை நவ வீரர் வழி வந்த செங்குந்தர்களாகிய நாங்கள் பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போலவே இத்தகைய பெருமை வாய்ந்த தெய்வீக தலத்தில் வசிக்கும் பாக்கியத்தைப் பெற்றுள்ளோம். ஒரு தடவை ஸ்ரீ நடராஜ மூர்த்தியைத் தரிசித்தவர்க்கே முத்தி சித்திக்கிற தென்றால் மோக்ஷலோகமே எங்களுக்குச் சொந்தமானது என்பதை மறுப்பார் யார்? பிறவியின் பயனாகிய முத்திக்கே நாங்கள் சொந்தக்காரர்களாகையால் இனி எங்களுக்கு வேண்டியது என்ன? ஆனால் எங்களுக்கு ஒரு சந்தேகம் மாத்திரம் உண்டு. அதாவது அப்பர் சுவாமிகள் 'திசை எட்டும் தெரிப்பதற்கு முன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே' எனத்திருவாய் மலர்ந்தது போல நாங்கள் குடியேறியது மூவாயிரவர் ஸ்ரீ நடராஜ மூர்த்தியோடு கைலாயத்திலிருந்து வந்து தங்கியதற்கு முன்னோ பின்னோ என்கிற சந்தேகந்தான்.

கேட்டீர்களோ! சகோதரர்களே! எங்களுக்கு இனி நிலையற்ற இவ்வுலகச் சம்பந்தமான செங்குந்தர் இயக்கத்தைப்பற்றிக் கவனிக்க வேண்டிய வேலை என்ன இருக்கிறது? ஈரோட்டு மகா நாட்டிற்கு வந்திருந்த சிலர் அடுத்த மகா நாட்டை ஆகாசதலமாகிய எங்கள் ஊரில் கூடுவது நலமென்று பேசிக்கொண்டனர். அவர்கள் அம்பலத்தில் கூடினால் அம்பலத்தைப் பெறலாமென்று நினைத்தார் போலும். நமது தலைச்சங்கத்திலிருந்து வந்த குலத்தொண்டர்கள் எங்கள் ஒத்துழைப்பையும் ஒத்தாசையையும் எவ்வாறு பெற்றார்கள் என்பதைச் சொல்லுகிறேன் கேளுங்கள். நமது முன்னேற்றத்திற்காக எவ்வளவோ தியாகம் செய்து தொண்டாற்றி வரும் ஒரு பெருந்தொண்டர் எங்களூருக்கு வந்த போது அவரைக் கவனித்தார் யார்? காலை சந்திக்கட்டளை முதலியார் கவனியாதிருந்திருப்பாராயின் அவர் தங்க இடமுமின்றி அம்பலத்தில் தான் நின்றிருப்பர். தெருத் தெருவாகச் சுற்றி பார்க்க வேண்டிய தலைவர்களை யெல்லாம் பார்த்தார். அவரைக் கவனித்தாருமில்லை; அவர் சொல்லைக் காதில் போட்டுக் கொண்டாருமில்லை; இதற்கு மேல் சொல்ல எனக்கு வெட்கமாயிருக்கிறது.

எல்லாவற்றையும் அழிக்கவல்ல இப்பரம் பொருளே எங்கள் கைக்குள் இருக்கும் போது நிலைபெற்ற விசாலமான எங்கள் சொற்பன உலகத்தை அழிக்க வல்லார் யார்.?

மறைக்குன்றம், தில்லை.

---

## வர்த்தக விஷயமாய் பிரயாணஞ் செய்யும் செங்குந்த சிகாமணிகளுக்கு ஓர் விஞ்ஞாபனம்.

சகோதரர்களே! நமது தண்டமிழ் நாடேயன்றி மலையாளம், பர்மா, தென்னாப்பிரிக்கா, சிங்கப்பூர், மலாய் நாடு முதலிய பலதேசங்களிலும் வசித்து வரும் செங்குந்தர்களுக்கு நமது குலத்தின் பெருமையையும், நமது மூதாதையர் அரும் பெருஞ் செயல்களையும் எடுத்தோதுவதன்றித் தற்காலத்தில் முற்போக்கான முறைகளை அனுசரிக்கும் படிக்குச் சமயோசித யுக்திகளையும் போதித்து நமக்குள் ஒற்றுமையும், சகோதர பான்மையும் உண்டாக்கி வருவது நமது அரிய மித்திரன் என்பதை யார் தான் மறுக்க வல்லார்? இப்போது நம்மில் புத்துணர்ச்சியை உண்டாக்கி யிருப்பதும் மித்திரனே யன்றோ?

நாம் செய்த தவப்பயனாய் அவதாரம் செய்துள்ள திருவாரூர் சபாபதி வள்ளலார், சென்னை ம. சண்முக சுந்தர முதலியார் M. A., L. T., புதுவை மந்திரியார் முத்தைய முதலியார் பி. செ. மாணிக்க வாசக முதலியார் முதலிய பல குலசிகாமணிகள் மித்திரன் மூலமாகவும், தலைச்சங்கத்தின் மூலமாகவும் உடல். பொருள் ஆவிகளை நம் பொருட்டுத் தத்தம்செய்து உழைத்து வருகிறார்கள் என்பதை உணர்ந்த செங்குந்தர் தற்போது இல்லை யென்றே சொல்லலாம். இவர்கள் மேற்கொண்டுள்ள குலத்தொண்டிற்குப் பொதுவாக ஒவ்வொரு செங்குந்தருடைய (ஆண் பெண் உட்பட) ஒத்துழைப்பும், உதவியும் அவசியம் வேண்டியிருக்கிறது. எனினும் வர்த்தக விஷயமாக ஆங்காங்கு பிரயாணம் (டிராவலிங்) செய்யும் நாம் சிறப்பாக இவ்விஷயத்தில் செய்யவேண்டிய காரியங்கள் உண்டென்பதை ஞாபக மூட்டவே இதனை வரையத் துணிந்தேன்.

நம் குலத்தொழிலையோ, வியாபாரத்தையோ, விவசாயத்தையோ செய்துவரும் சகோதரர்களைக் காட்டிலும் டிராவலிங் செய்துவரும் நமக்கே நம் குலதிலகர்கள் தாமே தாங்கியுள்ள பாரத்தின் ஒரு பாகத்தைப் பகிர்ந்து எடுத்துகொண்டு உழைக்கக் கூடிய சௌகர்யம் மிகுதியும் உண்டு. அதாவது சிதம்பரம், தாரமங்கலம், சங்கர நயினார் கோயில் முதலிய நகரங்களில் அநேக செங்குந்தர்கள் மிகுந்த செல்வமும் செல்வாக்கும் பெற்றிருந்தும் அவர்களில் பெரும்பாலார் இன்னும் நமது மித்திரனை ஆதரிக்காது பராமுகமாக இருந்து வருகிறார்கள். அநேக ஊர்களில் கிளைச்சங்கங்கள் ஏற்படவில்லை. ஆனால் பல்லாயிர மைல்களுக் கப்பாலுள்ள டிரான்ஸ்வால், ஜோஹான்ஸ்பர்க், பிரிடோரியா' மலேயா, சிங்கப்பூர், ரங்கோன், முதலிய இடங்களில் கப்பலேறிச் சென்று குடியேறிய சகோதரர்களின் ஊக்கத்தைப் பாருங்கள். அவர்கள் கிளைச்சங்கங்கள் நிறுவியும், நிறுவப்பிரயத்தனம் செய்து கொண்டும் வருகிறார்கள். ஒரேவீட்டில் 10 செங்குந்தர்கள் குடியிருப்பினும் ஒவ்வொரு செங்குந்தரும் தனித்தனியே நமது மித்திரனை வரவழைக்கிறார்கள். (நான் ஒரு நண்பர் மூலம் சில நாட்களுக்கு முன் அறிந்த உண்மையாகும் இது) நமது உள் நாட்டுச் சகோதரர்களோ இன்னும் உறக்கத்திலேயே இருந்து வருகிறார்கள். டிராவலிங் செய்யும் சகோதரர்களே! ஆகையால் நாம் செல்லு மிடமெங்கும் செங்குந்தர்கள் வதியும் இடத்தைத் தேடிச்சென்று தக்கவர்களைக் கண்டு நமது மித்திரனுக்குச் சந்தாதார்களாகச் சேரும் படியாகவும், கிளைச்சங்கங்கள் நிறுவும் படியாகவும் தூண்டுதல் செய்வதோடு சௌகர்யப் படுமானால் கூட்டங்கள் கூட்டி உபந்யாசங்களும் செய்யமுயல வேண்டும். இதனால் நமக்குப் பணங் காசு செலவில்லை. நம் குல முன்னேற்றத்திற்கும் பேருதவியாயிருக்கும். நமது வியாபாரம் தழைத் தோங்குவதற்கான அனுகூலத்தையும் செய்து தரும். ஒவ்வொன்றிற்கும் நமது தலைச்சங்கத்தாரையே எதிர் பார்த்திருத்தல் கூடாது. ஒவ்வொரு செங்குந்தரும் முதலில் தாம் பிறந்துள்ள குலத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். என்பதை நன்குணரவேண்டும். நங்குல மித்திரனை ஆதரிக்காது பிற பத்திரிகைகளை ஆதரித்தும், நங்குல சங்கங்களை நிறுவி அவற்றின் மூலம் மிகத்தாழ்ந்த நிலையில் இருந்துவரும் நம் சமூகத்திற்கு உழைக்காது பிறசங்கங்களில் சேர்ந்து உழைத்தும் வருகிற செங்குந்த பிரமுகர்கள் அநேகர் இருக்கிறார்கள். இதைப் பொது நோக்கம் என்கிறார்கள். பொது நோக்கம் அவசியம் வேண்டியது தான். ஆனால் அதற்கு முன் இருக்க வேண்டியது குலத்தொண்டாகிய சிறப்பு நோக்க மல்லவா? பெற்றதாய் வயிரெரிய பிராமணபோஜனம் செய்விப்பாரு முண்டோ? இனத்துக் கீந்தன்றோ பரத்துக் கீதல் வேண்டும். நம மித்திரனை முதலில் ஆதரித்தன்றோ பின்னர் பிற பத்திரிகைகளை ஆதரிக்கவேண்டும். நம் சங்கத்தில் சேர்ந்தன்றோ பின்னர் பிற சங்கங்களிற் சேரவேண்டும்.

ஆகவே சகோதரர்களே! நீங்கள் வியாபாரச் சம்பந்தமாகச் செல்லு மிடங்கள் தோறும் நம்மவர்களை நம்மித்திரனை ஆதரிக்கவும், கிளைச்சங்கங்களை நிறுவவும் தூண்டுவதோடு மாத்திரம் நில்லாது, நமது தலைச்சங்கம் இதுகாறும் நமது ஏழை இளைஞர்கள் உயர்தரக் கல்வி ஷயத்தில் செய்துவரும் முயற்சி முதலியவற்றை எடுத்தோதி கல்யாணம் முதலிய விசேஷகாலங்களில் நமது தலைச்சங்கத்துக் கல்வி நிதிக்கு நன்கொடைகள் வழங்குமாறும், மறுமை இன்பத்தை நாடி பல தர்மங்களுக்காகச் செலவிடும் பொருளை இனிமேல், இம்மையில் அழியாப் புகழையும் மறுமையில் அந்தமில் இன்பத்தையும் ஒருங்கே தரவல்ல கல்வி தானத்தின் பொருட்டு நமது கல்வி நிதிக்குக் கொடுத்துதவுமாறும் கேட்டுக்கொள்ள வேண்டுகிறேன். கருந்தனமாகிய கல்விக்குதவி கழிபெரும் புகழை நாட்டிய சென்னை பச்சையப்பனையும், செட்டி நாட்டரசராகிய ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரையும் எடுத்துக்காட்டாக எடுத்துக் காட்டுவேன்.

மா. குப்புசாமி முதலியார்

மதுரை, வண்டியூர், செங்குந்தர் சங்கத் தலைவர்

மதுரை. ஜவுளி. லோ. அ. ரெ. ஷோ. பிரதர்ஸ்
அண்டு ஏஜெண்டு

---

## எங்களூரும் கக்ஷியும்.

சில வருஷங்களுக்கு முன் கம்மஜாதியாருக்கும் நம்மவர்களுக்கும் சண்டை புண்டானதை முன்

ளிட்டு நம்மவர்களுக்குள்ளிருந்த கக்ஷிவித்தியாசங்களை மறந்து, நம்மவர்கள் ஏகோபித்துச் சுமார் 7000 ரூபாய்வரையில் செலவு செய்து கேசில் ஜெயித்தார்கள். அச்சமயத்தில் அதாவது சென்ற சித்தாத்திரி வருஷம் நம்குலதிலகமாகிய ஸ்ரீமத், ராமானந்த சுவாமிகள் ஒற்றுமை யுற்றுள்ள ஊராரைக் கொண்டு அகத்தீஸ்வரர் தேவஸ்தானத்தைப் பூர்த்திசெய்து அதேவருஷம் ஆனிமீ ՝0வ கும்பாபிஷேகம் முதலியதும் நடத்தி, நித்திய பூஜைக்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்து விட்டுச் சில காலத்தில் பரிபூரணமடைந்தார்கள். சுவாமிகளுக்குப் பிறகு ஊராரே (செங்குந்தர்களே) பண்டுவைத்துப் பூசைமுதலியதும் நடத்தி வந்தார்கள். பின்னர் பிரபவ வருஷம் ஆவணி மீ 'சாவுத்திரை' என்ற திருவிழா செய்ய ஆரம்பித்தார்கள். இதை நடத்த முன்னின்ற காரியதரிசிகளுக்கு மரியாதை செய்ய சிலர் முயன்றனர். சிலர் அதைத் தடுத்தார்கள். உடனே வந்தது வம்பு, என்ன வம்பு? சண்டையும் கக்ஷியும். அது மட்டுமா! அந்தோ பரிதாபம்! வைராக்கியம் மேவிட்டது. தேவஸ்தான பண்டையும் கலைத்துப் பாழாக்கினார்கள். நித்திய பூஜை நிறுத்தப்பட்டது.

வைராக்கியத்தை உபயோகப்படுத்தும் சந்தர்ப்பத்தைப் பாருங்கள். போர்க்களத்தில் பகைவரை வெல்லற்குரிய ஆயுதத்தை உபயோகிக்கும் வகையறியாது அதனால் தனக்குத்தானே கேட்டை விளைவித்துக்கொண்ட அறிவிலியின் செயலையன்றோ இது ஒத்திருக்கிறது. வைராக்கியத்தை உலகார்த்தமாகவும் ஆத்மார்த்தமாகவும் உள்ள காரியங்களிலன்றோ உபயோகிக்க வேண்டும். அவ்வாறு செய்ய அறியாத இவர்கள் அவ்வைராக்கியத்தினால் அடைந்த பலனைப் பாருங்கள். மனிதன்மேல் வந்த கோபம் கடவுள்மேல் சென்றது. ஒரு குடியன் குடிவெறியினால் அநாவசியமாகத் தன் மனைவிமேல் கொண்ட கோபத்தைச் சோற்றுப் பானையின்மேல் காட்டிப் பட்டினி கிடப்பதையன்றோ இது ஒத்திருக்கிறது.

அற்பத்திற்கு அறியாமையால் பிறர் மேல் கொண்ட கோபத்தைக் கடவுள் மேல் காட்டித் தமக்கே கேட்டை உண்டாக்கிக் கொள்ளும் இவர்களை என்னென்று கூறுவது! இவற்றிற்கெல்லாம் காரணம் என்ன? கல்வியின்மையும், உண்மை பக்தி இப்படிப் பட்டதென்று உணராமையுமன்றோ! இன்னும் நடந்ததைக் கேளுங்கள். நம் தமிழ் நாட்டிலுள்ள எல்லாப் பிரபல கோயில்களிலும், நம்மவர் கைங்கரியம் இல்லாமலிராது என்பதை நாம் யாவரும் உணர்வோம். அதன்படி நம் குலதெய்வமாகிய திருத்தணிகை வாசனுக்குக் காலை பூஜா கைங்கரியம் நடத்தி வருவது எங்கள் நாட்டின் கடமையாக இருந்து வருகிறது. இந்தப் பாழும் கக்ஷியினால் அதற்காகக் கொடுக்கும் வரியும் நின்று போய் விட்டது.

இத்தகைய மேதாவிகள் நிறைந்த ஜாதி என் கெட்டுப்போகாது? பிறர் ஏன் எள்ளி நகையாடமாட்டார்கள்? கடவுள் எப்படி நமக்குத் துணையிருப்பார்? நவவீரர் வழித்தோன்றியவர்கள் என்று சொல்லிக் கொள்வோர்க்கு இது அடுக்குமா? ஆவணி மாதத்தை நினைக்குந்தோறும் என் உடல் நடுங்குகிறது. சுமார் 400 ஆடுகளையும் 100 கோழிகளையும் பலியிட்டு வதைக்கச் சொல்லும் 'சாவுத்திரை' திருவிழா வருவது அம்மாதத்தில் தான்.

'சாவுத்திரை' வந்தால் முருகப்பெருமான் வாகனத்தையும் கொடியையும் கொலை செய்கிறோம். கக்ஷி வந்தால் முதலாளியையே பட்டினி போட்டுக்கொல்லுகிறோம். நமக்குக் கடவுளிடத்து எவ்வளவு பக்தி இருக்கிறதென்று இதனால் தெரிகிறதல்லவா? இவர்களுக்கு அறிவூட்டுவோர் இவ்விசாலமான பெரிய உலகத்தில் ஒரு வரையும் இது வரையில் காணேன். ஆகையால் நமது குலோத்தாரணம் செய்ய முன் வந்துள்ள நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார்தான் எங்கள்மீது கருணை கூர்ந்து எங்கள் ஊருக்கு விஜயம் செய்து எங்களுக்கு அறிவுச் சுடர் கொளுத்தி ஒற்றுமை புண்டாக்கி உய்விக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன். என் வெளிப்படையான கூற்றில் பிழையிருந்தால் பொறுத்துக் கொள்க.

ஓர் மத்தூர் செங்குந்தன்.

---

## அநுதாபம்

### சென்னி மலையில் ஒரு பெரியாரின் மரணம்.

இவ்வூர் பிரபல வியாபாரியான வா. செ. அ. பிரதர்ஸ், தகப்பனார் ஸ்ரீமான் வா. சென்னியப்ப முதலியார் என்பவர் நாளது வருஷம் சித்திரை மீ 16வ திங்கள்கிழமை 28-4-30வயில், தமது 95 வது வயதில் தெய்வலோக பிராப்தியடைந்தார். அவர் குடும்பத்தார்கள் நல்ல நிலைமையிலிருக்கும் போது, ஷையார் பூர்ண ஆயுளோடு 95-வயது வரைக்குமிருந்தும், இறந்ததால் அவர் நிரம்பவும் புண்ய புருஷரென்றே சொல்லலாம். இவரை விட இவ்வூரில் தற்சமயம் அதிக வயதுடையவர்கள் யாருமில்லை. இவருடைய மக்கள் இது சமயம் பெங்களூர், மதராஸ், மதுரை, கொளும்பு, யாழ்ப்பாணம், ஈரோடு, திருப்பூர், கோயமுத்தூர், சென்னிமலை முதலிய இடங்களில் பிரபலமாக வியாபாரம் செய்து வருகிறார்கள். அன்னார் குடும்பத்தார்களுக்கு எமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

## பிழை திருத்தம்

4-வது தொகுதி 4-வது பகுதி.

147-ம் பக்கம் 6-வது புதுப்பேட்டை வட்டம் என்பதை காஞ்சிபுரம் வட்டத்தில் சேர்த்து பத்துப்பேட்டை வட்டமெனத்திருத்திக் கொள்ளும்படி வாசகர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

146-ம் பக்கம் குன்னத்தூர் வட திருநாகேஸ்வரமெனச் சேர்த்துக் சொள்ளவும்.



# செங்குந்தர் கிளர்ச்சி

## சென்னை ஜில்லா

### திருமயிலாப்பூர் செங்குந்த வாலிபர் சங்கம்.

9-3-30 இரவு 8-மணிக்கு ஸ்ரீவெள்ளீஸ்வரர் கலியாண மண்டபத்தில் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் பி. ஏ., பி. எல்., அட்வகேட் அவர்கள் தலைமையில் திருக்குறள் விளக்க ஆசிரியர் திரு. கி. குப்புசாமி முதலியார், திரு. தி. அ. சண்முக முதலியார் முறையே 'ஒட்டிட்ட பண்பு' 'அன்பு' என்பதைப் பற்றி உபந்யசித்தார்கள்.

5-4-30 மாலை 6-மணிக்குத் திரு. M. சம்பந்த முதலியார் அவர்கள் தலைமையில் திருவாளர்கள் M. V. சிங்காரவேலு முதலியார், கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள் முறையே 'தாயினு மினிய தயாவான தத்துவன்' 'நட்பு' என்பவை பற்றி உபந்யசித்தார்கள். திரு. கா. கோவிந்தசாமிப் பிள்ளை ஷை விஷயத்தைத் தழுவிப் பேசினார்.

19-4-30 மாலை 6-மணிக்குத் திரு. V. இரத்தின முதலியார் பி. ஏ., பி. எல்., அட்வகேட் அவர்கள் தலைமையில் திருவாளர்கள் புராணிகர், கி. வை. துரைகண்ணுப் பிள்ளை, மு. சுந்தர வடிவேல் அவர்கள் 'தமிழ் மொழி' என்பதைப்பற்றி உபந்யசித்தார்கள்.

*

ம. க. பாலசுந்தர முதலியார்,
ஏ. ராமசாமி முதலியார், காரியதரிசிகள்.

---

## செங்கல்பட்டு ஜில்லா

### காஞ்சிச் செங்குந்த மாணவர் கழகம்.

2-2-30வ மாலை 3-மணிக்குச் செங்குந்த மாணவர்களின் கூட்டம் ஒன்று பிள்ளையார் பாளையம் திருநாவுக்கரசு சுவாமிகள் மடத்தில் தமிழாசிரியர் திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க்கூட்டப் பெற்றது. கல்லூரி மாணவர்களும் உள்ளூர் ஹைஸ்கூல் மாணவர்களும் சுமார் 40 பேர்கள் வரையில் கூடியிருந்தனர். தலைவர் 'செங்குந்த மாணவர் கழகத்தின் அவசியம்' என்ற சொற் பொழிவு நிகழ்த்தியபின் கீழ்க்கண்ட . உத்தியோகஸ்தர்களுடன் செங்குந்த மாணவர் கழகம் ஒன்று நிறுவப் பெற்றது. திருவாளர்கள். திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார், C. நடராஜன், S. குமாரசாமி, K. அருணாசலம், N. P. தணிகராயன் ஆகிய இவர்கள் முறையே போஷகராகவும், தலைவராகவும் உபதலைவராகவும், காரியதரிசியாகவும் உதவிக்காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றபின் C. நடராஜன் 'நமது நோக்கம்' என்ற சிறு சொற்பொழிவு நிகழ்த்தினார். கூட்டம் ஆறு மணிக்கு இனிது நிறைவேறியது.

16-2-30 மாலை 3 மணிக்கு நடந்த கூட்டத்தில் 'மாணவர்களின் கடமை' என்பதைப்பற்றித் திரு. C. நடராஜன் B. A. அவர்கள் தலைமையின் கீழ் திருவாளர்கள் S. குமாரசாமி, C. பக்கிரிசாமி முதலியோர்கள் பேசினர். கூட்டம் 6-30 மணிக்கு வந்தனோபசாரத்துடன் இனிது நிறைவேறியது.

2-3-30வ மாலை 4 மணிக்கு நடந்த கூட்டத்தில் திருவாளர் S. குமாரசாமி அவர்கள் தலைமையின் கீழ் ஆங்கிலத்தில் திரு. P. V. இராஜகோபாலன் 'தீண்டாமை' என்பதைப் பற்றியும் திரு. N. P. தணிகராயன் 'உண்மை' என்பதைப் பற்றியும் பேசினார்கள். தவிரவும் K. C. துரைசாமி, M. S. சண்முகம், M. M. கந்தசாமி, P. பரசுராமன் முதலிய பல சிறு மாணவர்களும் இவ்விஷயங்களை ஆதரித்துப் பேசியது மிகப் போற்றத் தக்கதாகும். வந்தனோபசாரத்துடன் கூட்டம் மாலை 6-30 மணிக்கு முடிவடைந்தது.

இச்சங்கத்தின் சார்பாகக் கூடிய சீக்கிரத்தில் ஒரு வாசகசாலையை ஏற்படுத்தவேண்டிய முயற்சி தீவிரமாக நடந்து வருகின்றது மல்லாமல் அடுத்த தென்னிந்திய செங்குந்தர் 2-வது மகாநாட்டின் பந்தலில் ஓர் இனிய தமிழ் நாடகத்தை நடிக்க வேண்டுமென்ற விருப்பம் இக்கழகத்தார் தீர்மானித்துள்ளனர்.

*

### வடதிருநாகேஸ்வரம்
### செங்குந்த வாலிபர் சங்கம்

சுக்கில பங்குனி 11வ மாலை $6\frac{1}{2}$-மணிக்குத் திரு. ஆ. தக்ஷிணாமூர்த்தி முதலியார் அவர்கள் தலைமையில் சங்க ஆபீசில் ஒரு கூட்டம் கூடிற்று.

தலைவர் அவர்களும் திரு. இ. மடவ. பொன்னுசாமி முதலியார் அவர்களும் இச்சங்க முன்னேற்ற விஷயமாக சொற்பெருக் காற்றினார்கள். பின்னர் சங்கப் பாடசாலையை போர்டு பாடசாலையில் நடத்துவதைப் பற்றியும் உபாத்தியாயர்கள் சம்பளம் முதலிய விஷயங்கள் யோசிக்கப்பெற்றன.

தற்போதுள்ள சங்கவருமானம், சங்கப் பாடசாலைச் செலவிற்குப் போதாதபடியால் சித்திரை முதல் ஆனி வரையில் கீழ்க்கண்டவாறு கனவான்கள் மாதாமாதம் பொருளுதவி செய்வதாக வாக்களித்தனர்.

| | | |
|---|---|---|
| மடவ. பொன்னுசாமி முதலியார் | அவர்கள் | 1—8—0 |
| இ. ஆ. தக்ஷிணாமூர்த்தி முதலியார் | ,, | 1—0—0 |
| தொ. மு. முருகேச முதலியார் | ,, | 1—0—0 |
| வை. தி. சுந்தர முதலியார் | ,, | 1—0—0 |
| மடவ. மாணிக்க முதலியார் | ,, | 1—0—0 |
| ம. மு. ருத்ரகோடி முதலியார் | ,, | 1—0—0 |

| | | |
|---|---|---|
| தி. ஆ. பொ. தேவராஜ முதலியார் | ,, | 1—0—0 |
| மயிலை. சண்முக முதலியார் | ,, | 0-12—0 |
| T. M. துரைசாமி முதலியார் | ,, | 0-12—0 |
| ச. நடேச முதலியார் | ,, | 0-12—0 |
| மயிலை. நடேச முதலியார் | ,, | 0-10—8 |
| மயிலை. தியாகராய முதலியார் | ,, | 0—8—0 |
| புதுப்பே. கன்னியப்ப முதலியார் | ,, | 0—8—0 |
| திருவூர். ராஜு முதலியார் | ,, | 0—8—0 |
| தி. மே. த. சுந்தர முதலியார் | ,, | 0—8—0 |
| பட். மாணிக்க முதலியார் | ,, | 0—8—0 |
| மடவ. சோமு முதலியார் | ,, | 0—8—0 |
| பேரம். ரத்தின முதலியார் | ,, | 0—8—0 |
| பணப். சாரங்கபாணி முதலியார் | ,, | 0—8—0 |
| பேரம். குருசாமி முதலியார் | ,, | 0—8—0 |
| மலை. துரைசாமி முதலியார் | ,, | 0—8—0 |
| வேளச். சுப்ரமண்ய முதலியார் | ,, | 0—8—0 |
| குட்டி. மாணிக்க முதலியார் | ,, | 0—8—0 |
| ஆரணி. முருகேச முதலியார் | ,, | 0—8—0 |
| மேநாட். வடிவேலு முதலியார் | ,, | 0—8—0 |
| தி. சு. சம்பந்த முதலியார் | ,, | 0—8—0 |
| சைதா. தங்கவேலு முதலியார் | ,, | 0—4—0 |
| நட. சோமசுந்தர முதலியார் | ,, | 0—4—0 |
| தி. ஆ. மாசிலாமணி முதலியார் | ,, | 0—4—0 |
| மே. நடேச முதலியார் | ,, | 0—4—0 |
| வைதி. பொன்னப்ப முதலியார் | ,, | 0—4—0 |
| கஞ். துரைசாமி முதலியார் | ,, | 0—4—0 |

4-4-30 தேதியில் மாலை 4-மணிக்குக் குண்ணத்தூர் யூனியன் ஆபீசுக்கு அருகாமையில் நடக்கும் திரௌபதா கல்யாணத்துக்குச் சங்கத்தார் தாலிகூரை செலுத்த ரூபா 5—0—0 உத்திரவு செய்தார்கள். கூட்டம் $8\frac{1}{2}$-மணிக்கு இனிது நிறைவேறிற்று.

தோ. மு. முருகேச முதலியார்,
காரிய தரிசி.

*

### மாணும்பதிகிராமப் பஞ்சாயத்து குகாநந்த வாசகசாலை.

இவ்வூரில் 11-4-30 காலை 10 மணிக்கு போர்டு, ஆண், பெண் பாடசாலைகளின் சிறுவர், சிறுமிகளால் ஷை திறப்பு விழாவுக்கு உள்ளூர், வெளியூர்களிலிருந்து ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். கடவுள் வாழ்த்துக் கூறப்பட்டபின் கனம். உத்திரன் மேரூர் பிர்க்கா ரெவின்யூ இன்ஸ்பெக்டர் தலைமை வகிக்க, செய்யாறு தாலூக்கா போர்டு மாஜி பிரசிடென்டு ராவ்சாகிப் வடஆங்கூர் அருணாசலமுதலியார் அவர்களால் ஷை வாசகசாலை திறந்து வைக்கப்பட்டது.

அப்போது வாசகசாலையும், அதன் அவசியமும், மாணவர் கடமை, பத்திரிகையும் அதன் பயனும் என்பவைபற்றி முறையே, திருவாளர்கள், சு. அருணாசல முதலியார், உத்திரன்மேரூர், ப. க. தங்கவேலு முதலியார், சு. ஆறுமுகமுதலியார், உபந்யாசித்தனர்.

ஷை லைப்ரேரிக்கு, காருண்ய கவர்ன்மெண்டார் அவர்கள் கொடுத்த நன்கொடைக்கு ஐந்து பங்கு அதிகமாக புஸ்தகம் வகையராக்கள், பஞ்சாயத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதற்கு, மதிப்புள்ள புஸ்தகங்கள் தந்த திரு. தண்டரை வைத்தியலிங்க பத்தருக்கும், அழகிய கண்ணாடி பீரோ, புத்தகம், முதலியவைகள் தந்த திரு. கு. முருகப்ப முதலியாருக்கும் என்றும் நன்றியுள்ளவர்களா யிருக்கிறோம். மற்றும் சில புத்தகங்கள் தந்த ஏனைய அன்பர்களுக்கும், என்றும் நன்றியுள்ளவர்களா யிருக்கிறோம். இக் கிராமத்தார்கள் ஷை லைப்ரேரிக்கு மிகுந்த உதவி செய்வார்களென்றும், மென் மேலும் முன்னுக்குக் கொண்டுவருவார்களென்றும், எதிர்பார்க்கிறோம். இந்த லைப்ரெரிக்கு நன்கொடையாகவாவது, அரைசார்ஜுக்காக வாவது, பத்திரிகைகள் கொடுத்துதவவேணுமாய், எல்லா பத்திராதிபர்களையும், தயவுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இதற்கு மிகவும் மாகூடிமையோடு தலைமைவகித்த ம. ா. ா. ஸ்ரீ உத்திரன்மேரூர் பிர்க்காரெவினியூ இன்ஸ்பெக்டர் அவர்களுக்கும், திறந்துவைத்த, திரு. ராவ்சாகிப் வடஆங்கூர் அருணாசல முதலியார் அவர்களுக்கும், எல்லா நலன்களும் தந்தருளுமாறு எல்லாம்வல்ல இறைவனை வழிபடுவோமாக.

இ. சம்பந்தமூர்த்தி முதலியார்.

---

## மதுரை ஜில்லா

### ஆய்க்குடி முதலியார் பழநி தண்ணீர்பந்தல் பொதுக் கூட்டம்

31-3-30 இரவு 9 மணிக்குச் சின்னபாவடியில் திருவாளர்கள் பொ. அமிர்தமுதலியார் கொசவப்பட்டி நா. சுந்தரமுதலியார் இவர்கள் தலைமையில் ஷை கூட்டம் கூடிற்று. தண்ணீர்ப்பந்தல் செலவுக்காக வழக்கம்போல் வரி நியமிக்கப்பட்டது. பங்குனி உத்திர விழாக்கடைசி தினத்தின் செலவையும், சமாராதனைச் செலவையும் நாட்டாண்மை திரு. ம. சிவகுருநாத முதலியார் ஒப்புக்கொண்டார். இவர் தர்மசிந்தை பாராட்டத்தக்கது. வரி வசூல் செய்யப் பெரியதனம். திரு. சங்கர முதலியாரையும் திரு. வி. கணபதி முதலியாரையும் நியமித்தார்கள்.

#### தீர்மானங்கள்.

நமது முதல் மகாநாடு கூடியதிலிருந்து செங்குந்த மக்களனைவரும் புத்துணர்ச்சி பெற்று வேற்றுமையின்றி அளவளாவி ஒற்றுமைத் திருமணம் நடத்திவரும் இக்காலத்தில் பொதுவாய்ப் பழநியைச் சூழ்ந்த கிராமச் சகோதரர்களுக்கும் சிறப்பாக ஆய்க்குடியிலுள்ள செங்குந்தர்களுக்கும் நாளுக்குநாள் விருத்தியாகிவரும் வேற்றுமைக் குணத்தைமாற்றி, ஒற்றுமை யுண்டாக்கும் முன்னேற்ற எண்ணத்தை பாலித்தருளுமாறு ஆறுமுகநாதனை இக்கூட்டம் வேண்டிக்கொள்ளுகிறது.



நமது சமூக முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டுவரும் நமது கண்போன்ற தலைச் சங்கத்திற்கு நன்றி யறிகுறியாக நன்கொடை வழங்கவேண்டுமெனத் தீர்மானிக்கிறது. கூட்டம் 11. மணிக்கு இனிது கலைந்தது.

வி. க. நாச்சிமுத்து முதலியார்.

*

### சேங்குந்தர் சங்கம், வண்டியூர், மதுரை.

28-4-30௳ காலை 9-மணிக்குச் சங்கக் காரியாலயத்தில் உபதலைவர் திரு. எஸ். மாயாண்டி முதலியார் அவர்கள் அவைத்தலைமையின் கீழ் மாதாந்தரக் கூட்டம் நடைபெற்றது. கடவுள் வாழ்த்து முடிந்த பின்னர், நாளது வைகாசித் திங்களில் காஞ்சியில் நடைபெறும் இரண்டாவது மகா நாட்டிற்கு நாம் திரளாகச் செல்ல வேண்டு மென்று திரு. கே. எம். முத்துவைரவ முதலியார் அவர்கள் பிரரேபிக்க, அப்பிரரேபணை ஏகமனதாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. காரியதரிசி வி. எஸ். சௌந்தரபாண்டியன் வந்தனோபசாரம் முடிந்தவுடன் கூட்டம் இனிது கலைந்தது.

V. S. சௌந்தரபாண்டியன்.

---

## இராமநாதபுரம் ஜில்லா

### மண்டல மாணிக்கம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

28-3-30௳ இரவு 9 மணிக்குத் திரு. மு. ஆ. பாதம்பிரியா முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் இச்சங்கத்தில் 19-வது கூட்டம் கூடிற்று. திரு. சு. வெ. குருசாமி முதலியார் அவர்களால் கடவுள் வணக்கம் பாடப்பட்டது. திருவாளர்கள் ப. சி. மு. மூக்க முதலியார், இ. மு. சித்திரவேல் முதலியார், வாழவந்த பண்டாரம், இ. முனியப்ப முதலியார் ஆகியவர்கள் முறையே சந்தா வசூல், வாலிப இயக்கம், சங்கத்தின் நோக்கம், வருஷாந்தரக் கொண்டாட்டம் என்பனபற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியபிறகு வந்தனோபசாரத்துடன் கூட்டம் 11 மணிக்கு இனிது கலைந்தது.

#### தீர்மானங்கள்.

1. பங்குனிமீ சந்தா வசூல் செய்யத் திருவாளர்கள். மு. பாதம்பிரியா முதலியார் இ. முனியப்ப முதலியாரவர்களை நியமிக்கப்பட்டது.
2. அடுத்த கூட்டத்தில் திருவாளர்கள். ஆ. இ. மு. சித்திரவேல் முதலியார் பு. க. அ. ராமசாமி முதலியார் - சொ. குருசாமி முதலியார்- சு. வெ. குருசாமி முதலியாரவர்கள் முறையே மதுபானம், கல்வியின் பயன், வாலிப முன்னேற்றம்' ஒற்றுமை என்பனபற்றிப் பேசும் படிக்கும்;
3. சங்கத்திற்கு அடிக்கடி அநேக உத்தியோகஸ்தர்களும், பிரபல கனவான்களும் வருவதால், அன்னவர்கள் சங்கத்தைக் குறித்துத் தங்கள் அபிப்பிராயங்களை எழுதும்படிக்கு ஒரு விசிட்டர் பஸ்தகம் போடும்படிக்கும்;
4. நமது சங்கத்தின் வருஷாந்தரக் கொண்டாட்டத்தை அடுத்த சித்திரைமீ இவ்வூர்ப் பிரபல வியாபாரிகளான. நா. ப. க. நாகலிங்க முதலியார் நா. சு. கு. நாகசுந்தர முதலியாரவர்கள், இரங்கூனிலிருந்து வந்தபிறகு நடத்தலாமென்றும்;
5. ஷை வருஷ விழாவின்போது நமது குலத்தலைவர் படத்தைத் திறந்து வைக்கவும், அவ்வமயம் மதுவிலக்கு நாடகம் ஒன்று நடத்தும் படிக்கும்;
6. சங்கக் கட்டடத்தில் காற்றுவசதிக்காக 2-பெரிய ஜன்னல்கள் வைக்கவும், தாகசாந்தி தீர்த்துக் கொள்வதற்கு, ஒரு தண்ணீர் குடம் ஒன்று வைக்கும்படிக்கும் தீர்மானிக்கலாயிற்று

இ. முனியப்ப முதலியார், காரியதரிசி.

*

### ஸ்ரீவில்லிபுத்தூர் செங்குந்த வாலிபர் சங்கம்

7-3-30௳ இரவு $7\frac{1}{2}$-மணிக்குக் கீழப்பெருமாள் பட்டித்தெரு ஸ்ரீ ஆனந்த விநாயகர் கோயிலில் ஷைசங்கத்தின் கூட்டம் திரு. ச. சோமசுந்தர முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிற்று. கடவுள் வணக்கம் ஆன பிறகு திரு. நி. கு. சிவசுப்பிரமணிய முதலியார் 'இளைஞர்கள் கடமை' பற்றிப் பேசுகையில் இராப்பள்ளிக்கூடம், வாசக சாலைகளால் உண்டாகும் நன்மைகளைப் பற்றியும், பெற்றோர்க்குப் பணிந்து நடக்கவேண்டு மென்பதைப் பற்றியும் வற்புறுத்தினார்கள். திரு. ரா. சுப்பையா முதலியார் அவர்கள் அதை ஆதரித்துப்பேசினார்கள். திரு. ஆ. ராமசாமி முதலியார் அவர்கள் 'ஆஸ்திகம் நாஸ்திகம்' என்பதுபற்றிப் பேசினார்கள். தலைவர் முடிவுரையில் சங்கத்தின் அவசியம், குழந்தைகளைக் குறைந்தது 14-வயது வரையிலாவது படிக்க வைத்தல் முதலியவை வற்புறுத்தப்பட்டன. வந்தனோபசாரத்துடன் இரவு $10\frac{1}{2}$-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

T. சுப்பையா முதலியார், காரியதரிசி.

---

## தஞ்சை ஜில்லா

### அம்மாப் பேட்டை செங்குந்த வாலிபர் சன்மார்க்க சங்கம்.

29-3-30௳ மாலை 4-மணிக்கு ஷை சங்கத்தின் முதலாவது கூட்டம் ஸ்ரீராமர் பஜனை மடத்தில் கூடிற்று. மெம்பர்களும் இதர செங்குந்தர்களும் வெளியூர்ப் பிரமுகர்களுமாக 300 பேர் வரையில் வந்திருந்தார்கள். செங்குந்தத் தேவார கோஷ்டி மாணவர்கள் கடவுள் வணக்கம் ஓதினார்கள். ஸ்ரீ குமரகிரி சுவாமிகள் தலைமை வகிக்க, ஞானியார் சுவாமிகள் மாணவர் திரு. கந்தசுவாமி வர்மா அவர்கள் 'நமது பூர்வீக சரித்திரமும் தற்கால நிலைமையும்' என்பதுபற்றி சொற்பொழி வாற்றினார்கள். திரு. உபாத்தியாயர் சண்முக முதல்யார் அவர்கள் 'கண்ணப்பர் அன்பு, கல்வி, ஒழுக்கம்' என்பன பற்றிப் பேசினார்கள். தலைவரவர்கள் முடிபுரையில் அமாவாசைதோறும் கூட்டம் கூடவேண்டுமென்

றும், நமது மித்திரனுக்குச் செங்குந்தரனைவரும் சந்தாதாரராகச் சேரவேண்டுமென்றும் வற்புறுத்திப் பேசினார்கள். திரு. ம. வீ. கனகசபை முதலியார் அவர்களால் தலைவருக்கு மாலை சூட்டப்பெற்று வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

சங்க உத்தியோகஸ்தர்கள்

தலைவர் திரு. சிவ. த. சம்பந்தமூர்த்தி முதலியார் உபதலைவர், திரு. த. சிங்காரவேலு முதலியார் உபந்யாஸகர் திரு. ராகவ உபாத்தியாயர். திரு. சிக்கில் ரெங்கசாமி சுவாமிகள், காரியதரிசிகள், திருவாளர்கள் ம. சி. சுப்பிரமணிய முதலியார், தி. சோமசுந்தர முதலியார், ம. வீ. அருணகிரி முதலியார், கி. மு. கோ. கிருஷ்ணசாமி முதலியார், ம. சி. வை. சோமசுந்தர முதலியார், பொக்கிஷதார் ம. வீ. கனகசபை முதலியார், கா. சி. ரத்தினசாமி முதலியார்.

கா. சி. இரத்தினசாமி முதலியார்.

## திருநெல்வேலி ஜில்லா

### சங்கர நயினர் கோவில் செங்குந்தர் அபிவிர்த்தி சங்கம்

6-4-30உ செங்குந்தர் தேனப்புரம் 1-நெ. தெருவில் திரு. S. பழனியாண்டி முதலியார் அவர்கள் அக்ராசனத்தின் கீழ்க்கூடிய கூட்டத்தில் திரு. அருணகிரி முதலியார் அவர்கள் தேவாரம் ஓதிய பிறகு திரு. S. பழனியாண்டி முதலியாரும் திரு. தி. மு. ச. மு. திருவுடையா முதலியாரும் முறையே 'சண்டீச்சுர நாயனர்' சரித்திரத்தையும், 'ஒற்றுமை' 'பெண் கல்வி' 'கட்டாயப்படிப்பு' என்பன பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

தீர்மானம்.

பங்குனி 18உ சிவநேசன் வாயிலாக திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்களால் வெளியிடப்பட்ட 'செங்குந்த குலகுரு ஸ்ரீலஸ்ரீ சிவசாமி தேசிகர் அவர்கள் சைவப்பிரசாரம்' என்ற விஷயத்தை வாசித்தறிந்து இக்கூட்டம் சந்தோஷிக்கிறது.

இரவு 12 மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

10-4-30 உ செங்குந்தர் முதல் தெருவில் திரு. முப்புடாதி முதலியார் அவர்கள் முயற்சியால் சங்கத்தலைவர் திரு. A. முத்தைய முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்ச் சங்கக்கூட்டம் கூடிற்று. திரு. தி. ப. சு. அருணகிரி முதலியார் அவர்கள் தேவாரம் ஓதினார்கள். சென்ற கூட்ட நடவடிக்கை வாசிக்கப்பட்ட பிறகு திரு. A. முத்தைய முதலியாரும், திரு. தி. ப. சு. அருணகிரி முதலியாரும் முறையே. 'கற்பு' 'தண்டலையார் சதகம்' பற்றியும் 'கோமளவல்லி' சரித்திரமும் உபந்யசித்தார்கள். தலைவர் முடிவுரை யானதும் வந்தனோப சாரத்துடன் கூட்டம் இனிது நிறைவேறிற்று.

திரு. மு. ச. தி. சங்கரபாண்டிய முதலியார்.
காரியதரிசி.

### செங்குந்தர் அபிவிர்த்தி சங்கம் வீரவநல்லூர்

2-4-30உ இச்சங்கத்தின் 13 வது ஆண்டு 8 வது கூட்டம் ஸ்ரீமான் ந ஆ. சிதம்பர முதலியார் அவர்கள் தலைமையில் சங்கக்கட்டடத்தில் கூடிற்று. ஸ்ரீமான் பிச்சாண்டி முதலியார் அவர்கள் 'சமயப் பகுதி' என்பது பற்றித் தெளிவாய் பேசினார்கள். வந்தனோபசாரத்துடன் சபை இனிது கலைந்தது.

சி. வ. ஆறுமுகமுதலியார் | காரியதரிசி.

## சேலம் ஜில்லா

### சின்னப்ப நாய்க்கன் பாளையம் செங்குந்த இளைஞர் சைவ சித்தாந்த சங்கம்

21-3-30 உ இரவு 8-30 மணிக்குக் குகானந்த நிலைய இராப்பாடசாலையில் திரு. S. K. செங்கோட முதலியார் அவர்கள் தலைமையில் மேற்படி சங்கக்கூட்டம் கூடிற்று. திரு. S. A. நாகப்ப முதலியார் அவர்கள் கடவுள் வணக்கம் பாடினார்கள். தலைவர் முன்னுரையானதும் சிரஞ்சீவி S. A. சுப்பிரமணியன் மாணிக்க வாசக சுவாமிகளின் சரித்திரத்தையும் திரு. T. S. சுப்ரமண்ய முதலியார் அவர்கள் 'ஈஸ்வரபக்தி' என்பது பற்றியும், உபந்யசித்தார்கள்.

தலைவர்கள் பிரேரேபணையின்பேரில் சபையார் யோசனை செய்து கீழ்க்கண்ட சங்க உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். தலைவர் திரு. S. K. செங்கோட முதலியார். காரியதரிசி திரு. T. R. மாரிமுத்து முதலியார் பொருட்காப்பாளர். திரு. S. A. நாகப்ப முதலியார். நிர்வாக மெம்பர்கள்: திருவாளர்கள் R. P. கந்தசாமி முதலியார், R. காளியப்ப முதலியார், I. V. சென்னியப்ப முதலியார், T. S. சுப்ரமண்யமுதலியார், R. கோவிந்தசாமி முதலியார் S. M. சங்கரன், M. சங்கமுத்து முதலியார், E. மாரி முத்து முதலியார், M. செல்லப்பர், R. ஆறுமுக முதலியார் S. A. சுப்ரமண்ய முதலியார், ஜ. அ. ராமசாமி முதலியார், ப. ராஜு, ஜ. செ. செ. பழனியப்ப முதலியார். வந்தனோப சாரத்துடன் இரவு, 11-30 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

T. R. மாரிமுத்து முதலியார்,
காரியதரிசி.

*

### சன்மார்க்க செங்குந்த வாலிபர் சங்கம் பள்ளி பாளையம்

பிரமோதூத சித்திரை 1உ இச்சங்கத்தின் பொதுக் கூட்டம் இரவு 9-30 மணிக்குப் பிரசிடெண்டு திரு. ப. கொழந்தையப்ப முதலியார் அவர்கள் தலைமையில் கூடிற்று. மேற்படி சங்கத்தின் க்ஷேமநிதி அதிஷ்டப்ரைஸ் சீட்டு வரவு செலவு கணக்குப் பிரசிடெண்டு அவர்களால் ஆஜர் செய்யப்பட்டு அங்கீகரிக்கப் பெற்றது.

பின்னர் திரு. உ. ம. ராமசாமி முதலியார் அவர்கள் தலைமையில் இச்சங்கத்திற்குப் புது வருஷத்திய உத்தியோகஸ்தர்கள் தேர்தல் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப் பெற்றவர்கள் பெயர் கீழ்வருமாறு



தலைவர் திரு. பூ. அ. பால முதலியார், காரியதரிசி திரு. வ. கு. வீ. அர்த்தநாரி முதலியார், உபகாரியதரிசி திரு. ப. ராமசாமி முதலியார், பொருட்காப்பாளர் திரு. வெ. கன்னியப்ப முதலியார்.

## கோயமுத்தூர் ஜில்லா

### பவானி செங்குந்த வாலிபர் சங்கத்தின் நடவடிக்கை

இச்சங்கம், 26-3-28 தேதியில் ஆரம்பிக்கப்பட்டு நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் கிளைச்சங்கமாகச் சேர்ந்து பவானி வாலிபருக்கு வாரந்தோறும் நல்ல உற்சாகத்தை ஊட்டிப் பெரிதும் நல்லறிவை யீந்து வந்திருக்கிறது. அதன் பயனாக வாலிபர் முயற்சியால் இதுபோது சங்கமானது ரூபாய் இருநூறைத் தகுந்த ஆதாரமாகப் பெற்றுக்கொண்டு இருவரிடம் வட்டிக்குக் கொடுத்திருக்கிறது. இது மிகவும் போற்றத்தக்கதே ஆனால் சுமார் 3, 4, மாதங்களாக நமது சங்க வாலிபர்கள் சிறிது உற்சாகக் குறைவைக் கைக்கொண்டவர்களா யிருப்பது பெரிதும் விசனிக்கத் தக்கதாகும். இனியாவது நமது வாலிபர்கள் உற்சாகத்துடன் சங்கத்தில் உழைப்பார்களாக.

இங்ஙனம்

ஜ. க. பெருமாள்சாமி முதலியார்,
செங்குந்த வாலிப சங்கக் காரியதரிசி, பவானி.

*

### பவானி செங்குந்த சங்க நேயர்களுக்கு உதவிக் காரியதரிசியின் வேண்டுகோள்

நமது சங்கம் குலமுன்னேற்றத்தைக் கருதி ஏற்படுத்தப்பட்ட தல்லவா? அவ்வாறிருக்க, சுமார் 1 வருஷ காலமாகப் பெருந்தூக்கங் கொண்டிருப்பதன் காரணம் யாதோ? அச்சங்கத்தின் பிரமுகர்களாகிய பெரியோர்களின் முயற்சி யின்மையே யாகும். இக்காலத்தில் ஒவ்வொரு சமூகத்தார்க்குள்ளும் சங்கங்கள் பல ஏற்பட்டு அவை காரணமாகப் பல நன்மை யடைந்து வருகின்றனரன்றோ? நாமோ சங்கமொன்றை ஏற்படுத்தியும் அது எவ்விடத்திலிருக்கிறது, அதை எப்படி நடத்தி வருவது, என்ற ஆலோசனை யற்றவர்களாகவே பல ஊர்களில் சங்கங்களை ஏற்படுத்தித் தீவிர முயற்சி காட்டி முன்னேறி வருவதைத் தங்கும் புகழுடைச் செங்குந்த மித்திரன் மூலம் அறிந்து வருகிறோம். ஒருவேளை பெரியோர்களுக்கு அவைகளைப் பார்ப்பதற்குக்கூட அவகாசமில்லை போலும். ஆகவே நம்மைப் போல் நமது சமூகத்தார்கள் இருப்பார்களே யானல் இதுவரை செங்குந்தர் என்னும் பதம் இல்லாமலே போய்விடுமென்பதைத் திட்டமாய் உரைப்பேன். ஆனல் இந்த நிலைமையிலும் நமக்கு இழிவை யுண்டாக்கத் துணிந்த போலியரைச் சென்ற மாசி மாதம் வென்று வெற்றிக் கொடி நாட்டியது நமது சமூகமே புகழத் தக்க தொன்றும். ஆகவே இனியேனும் தூக்கத்தினின்று விழித்து நமது தலைச் சங்கத்திற்கு வட்டம், மகமை, வரி முதலியவற்றின் மூலம் நன்கொடையனுப்பிக் கல்வி யபிவிருத்தியை நம்மவர்க்குள் பரப்பி, முன்னேற்ற வழிகளில் முயற்சி செய்யுமாறு அடிக்கடி பிரசாரகர்களை வரவழைத்து ஊக்க மூட்டு விப்பீர்களாக.

ஜ. க. பெருமாள்சாமி.

*

### விளாங்குறிச்சி செங்குந்த வாலிப சங்கத் திறப்பு விழா

29-4-30-ல் ஸ்ரீகாமாக்ஷியம்மன் ஆலயத்தில் பொதுக் கூட்டம்கூடியது. அவ்வமயம் சென்னைத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தாரால் அனுப்பப்பட்ட நிரூபத்தையே தலைமையாகவைத்து ஸர்வஜன ஐஸ்கூல் மாணவர் V.M. ராமசாமியார் அவர்களால் மேற்படி சங்கத்தைத் திறந்து வைக்கப்பட்டது. சங்க உத்தியோகஸ்தர்கள் தலைவர் திரு. V. A. பழனிசாமி முதலியார், உபதலைவர் திரு. குழந்தைவேல் முதலியார், காரியதரிசி திரு. V. S. முத்துசாமி முதலியார், பொருட்காப்பாளர், திரு. தே. கு. அங்கப்ப முதலியார், நிருவாக மெம்பர்கள் திருவாளர்கள் மே. குமாரசாமி முதலியார், வை. பழனியாண்டி முதலியார், சே. சுப்பிரமணிய முதலியார், சா. பழனியப்ப முதலியார், கு. பழனியப்ப முதலியார், வாலண்டியர்கள். திருவாளர்கள் ம. பழனியப்ப முதலியார், அ. ரங்கசாமி முதலியார், மு. நாச்சிமுத்து முதலியார், கி. த. ராமசாமி முதலியார்.

தீர்மானங்கள்.

(1) இந்த வாலிப சங்கம் பிரதி அமாவாசை தோறும் கூட்டும்படி தீர்மானிக்கிறது.

(2) இச்சங்கத்தில் சேர்ந்த மெம்பர்கள் பிரதி மாதம் 1-அணு சந்தா கொடுக்கத் தீர்மானிக்கின்றது.

(3) தலைச்சங்கத்திற்கு வருடப் பிரதி வருஷம் செலுத்த வேண்டிய கட்டணத் தொகையை அடுத்த கூட்டத்தில் ஏற்படுத்த வேண்டுமெனத் தீர்மானிக்கின்றது. கடவுள் வாழ்த்துடன் சபை இனிது நிறைவேறியது.

V. A. பழனிச்சாமி முதலியார், தலைவர்.
V. S. முத்துச்சாமி முதலியார், காரியதரிசி.

---

சைதாப்பேட்டை பெஸ்டு பளையக் காட்டுக் கமபெனி கூட்டாளிகளில் ஒருவராகிய திருவாளர் M. V. செரக்கலிங்க முதலியார் அவர்கள் வட ஆற்காடுஜில்லா திருவத்திபுரம் A. தம்பிரான் என்னும் கல்லூரி மாணவனுக்கு 1930ஆு சம்பளம் கொடுத்து உதவியுள்ளார்.

# ‘செங்குந்த மித்திரன்’ பஞ்சாங்கம்

பிரமோதூத௵ வைகாசி௴ (1930௵ மே௴—ஜூன்௴)

உத்தராயணம், வஸந்த ருது.

| இங்கிலீஷ் | தமிழ் | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | நேத்திரம் | ஜீவன் | [illegible] | யோகினி | விசேட நாட்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | 1 | புத | துதி 44-25 | அசு 7-28 | சி 60 | 2 | 1 | சூன் | வடமே | |
| 15 | 2 | வியா | திரி 47-3 | கே 10-55 | பி 10-55 சி | 2 | 1 | சூன் | வடகிழ | |
| 16 | 3 | வெ | சது 50-30 | மூ 15-38 | அ 15-38 பி | 2 | 1 | சது | ஆகாசம் | |
| 17 | 4 | சனி | பஞ் 55-48 | பூர 21-30 | சி 60 | 2 | 1 | பஞ் | பூமி | |
| 18 | 5 | ஞா | சஷ் 60... | உத் 28-18 | அமி 60 | 2 | 0 | சஷ் | கிழக்கு | |
| 19 | 6 | திங் | சஷ் 1-25 | தி 35-33 | அ 35-33 சி | 2 | ½ | சப் | கிழக்கு | |
| 20 | 7 | செ | சப் 7-18 | அ 42-50 | சி 42-50 ம | 1 | ½ | அஷ் | வடக்கு | |
| 21 | 8 | புத | அஷ் 12-53 | ச 49-28 | சி 49-28 அ | 1 | ½ | நவ | தென்கி | |
| மே௴ 22 | 9 | வியா | நவ 17-40 | பூர 55-5 | சி 60 | 1 | ½ | தச | தெமே | |
| 23 | 10 | வெ | தச 21-18 | உ 59-20 | சி 59-20 அ | 1 | ½ | ஏகா | தெற்கு | |
| 24 | 11 | சனி | ஏகா 23-13 | ரே 60... | ம 60 | 0 | ½ | துவா | மேற்கு | |
| 25 | 12 | ஞா | துவா 23-18 | ரே 1 45 | அ 1-45 சி | 1 | ½ | திர | வடமே | |
| 26 | 13 | திங் | திர 21-28 | அ 2-25 | சி 60 | 0 | ½ | சது | வடகிழ | |
| 27 | பிரமோதூத௵ வைகாசி௴ 14 | செ | ச● 18-5 | பர 1-25<br>கி ※58-53 | சி 60 | 0 | ½ | அமா | ஆகாசம் | சர்வ அமாவாசை<br>கிருத்திகை |
| 28 | 15 | புத | அமா 13-18 | ரோ 55-8 | சி 60 | 0 | 0 | பிர | பூமி | |
| 29 | 16 | வியா | பிர 7-18 | மி 50-33 | ம 60 | 0 | 0 | துதி | கிழக்கு | சந்திர தெரிசனம் |
| 30 | 17 | வெ | துதி 0-35<br>திரி 53-28 | தி 45-20 | சி 60 | 0 | ½ | திரி | தென்கி | |
| 31 | 18 | சனி | சது 46-15 | பு 40-8 | சி 60 | 0 | ½ | சது | தெமே | |
| 1 | 19 | ஞா | பஞ் 39-15 | பூ 35-5 | சி 60 | 1 | ½ | பஞ் | தெற்கு | |
| 2 | 20 | திங் | சஷ் 32-43 | ஆ 30-28 | சி 30-28 ம | 1 | ½ | சஷ் | மேற்கு | |
| ஜூன்௴ 3 | 21 | செ | சப் 26-50 | ம 26-38 | சி 60 | 1 | ½ | சப் | வடமே | |
| 4 | 22 | புத | அஷ் 21-48 | பூ 23-38 | அமி 60 | 1 | ½ | அஷ் | வடகிழ | |
| 5 | 23 | வியா | நவ 17-53 | உத் 21-35 | ம 21-35 சி | 2 | ½ | நவ | ஆகாசம் | |
| 6 | 24 | வெ | தச 14-55 | அ 20-30 | அ 20-30 சி | 2 | 0 | தச<br>ஏகா | பூமி | |
| 7 | 25 | சனி | ஏகா 18-0 | சி 20-30 | ம 20-30 அ | 2 | 1 | துவா | கிழக்கு | |
| 8 | 26 | ஞா | துவா 12-5 | சு 21-28 | சி 21-28 ம | 2 | 1 | திர | வடக்கு | |
| 9 | 27 | திங் | திர 12-0 | வி 23-20 | ம 23-20 சி | 2 | 1 | சது | தென்கி | |
| 10 | 28 | செ | ச○ 12-58 | அ 26-13 | சி 26-13 ம | 2 | 1 | பௌ | தெமே | பௌர்ணமி |
| 11 | 29 | புத | பௌ 14-53 | கே 30-3 | சி 30-3 ம | 2 | 1 | பிர | தெற்கு | |
| 12 | 30 | வியா | பிர 17-55 | மூ 34-53 | சி 60 | 2 | 1 | துதி | மேற்கு | |
| 13 | 31 | வெ | துதி 21-45 | பூர 40-40 | பி 40-40 சி | 2 | 1 | ... | வடமே | |
| 14 | 32 | சனி | திரி 26-43 | உ 47-15 | சி 60 | 2 | 1 | திரி | வடகிழ | |

ஒவ்வொரு குடும்பத்திற்கும் டாக்டரைப்போல உதவக்கூடியது

# மின்சார ரசம்

ஒன்றேயாகும்.

---

டி. பி. சுந்தரேசன், B.A., மார்த்தாண்டம்:—

**மின்சார ரசத்தினல் இரும்பல், ஜலதோஷம், ஜுரம் உடனே நிவர்த்தியாயிற்று பல்லின்ஈரின்மேலிருந்த வீக்கம் மிகவும் ஆச்சர்யகாமாக உடனே குணமடைந்தது.

சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகப்பிரசித்தி பெற்றது.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றது

ஒரே முறை பரீக்ஷியுங்கள். கேட்லாக் இனம்.

புட்டி 1-க்கு ரூ 2. தபாற் செலவு வேறு.

எல்லா இடங்களிலும்கிடைக்தும்.

விலாசம்:—மின்சார ரசம் கம்பெனி, லிமிடெட், சேலம்.

(4)

## கற்பகத் தைலம்

குழந்தை வியாதிகட்கு அமிர்தம் போன்றது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதது.

பாக்கிங் தபால் செலவு உள்பட ஒரு புட்டியின் விலை ரூபா 1—4—0.

3 புட்டி வாங்கினல் செலவின்றி அனுப்பப்படும். உபயோகிக்கும் முறை புட்டியின்மேல் காண்க.

முன்பணமில்லாத ஆர்டர்கள் கவனிக்கபடமாட்டா.

எல்லா வியாதிகட்கும் எற்ற மருந்துகள் கிடைக்கும்.

ப. அங்கமுத்து முதலியார்,
சிகிச்சாஞான பண்டிதர்,
கற்பக மெடிகல்ஹால், சத்தியமங்கலம்.
(1) கோயம்புத்தூர்.

## நமது தலைவர்களின் அழகிய போட்டோ படங்க

தபாற்செலவு உள்பட விலை ரூ.

ஒட்டக்கூத்தர் ... 1

தலைச்சங்க நிர்வாக சபை அங்கத்தினர் (22-பேர் கொண்ட படம்)

ம. சண்முக சுந்தர மு யார், எம். ஏ., எ (செங்குந்த மி ஆசிரியர்)

தலைச்சங்கப் பி

---

மானேஜர்
ப

கலியுகத்தின் பேராச்சரியம்

குமார கவசம்




கைகண்ட பலனுள்ளது.

சூர ஸம்ஹார வெற்றிக்காக ஸ்ரீ பார்வதி தேவியால் குமரனுக்கு அருளப்பெற்ற உண்மையான சக்தி கவசம்

பேய், பிசாசு, சூன்யம், வியாதி, வறுமை, கவலை, கஷ்டம் முதலிய எல்லா துன்பங்களையும் நீக்கும் ரக்ஷாபந்தனம்.

ஸந்தானம், சம்பத்து, சந்தோஷம் முதலிய ஸகல இஷ்டத்தையும் கொடுக்கும் கைவல்யம்.

ஓர் பெரிய மஹானால் மிகுந்த சாஸ்திர ஆராய்ச்சியின்பேரில் விதிப்படி தயாரிக்கப்படுவது.

ஆயிரக்கணக்கான பேர்கள் அணிந்து பலனடைந்திருக்கிறார்கள். நற்சாக்ஷிப் பத்திரங்கள் குவிந்து கொண்டிருக்கின்றன.

கவசம் வேண்டிய காரணத்தை எழுதினால் அதற்கு வேண்டியது தயாரித்து அனுப்பப்படும். கடிதங்கள் ரகசியமாய் வைத்துக்கொள்ளப் படுவதால் வேண்டியதின் உண்மையை எழுதும்படி கோறப்படுகிறது.

ஒவ்வொரு கவசத்துடனும் பூஜைக்குகந்த குமரக் கடவுளின் போட்டோப் படம் இனமாய் அனுப்பப்படும்,

இன்றே ஒரு கவசம் வாங்கி அனுபவத்தில் ..ார்த்தால் அதன் உண்மை சக்தி தெரியவரும்.

ரூ. 1—8—0
„ 7—8—0

எல்லாவற்றிற்கும் பொதுவான கவசம் தங்கத்தில் மட்டும்: ரூ. 25—0—0,

"குமார பீடம்"

..தாஸ் தெரு, சென்னை (Madras)

..OS, Sole Agents & Distributors.

..athi Mudaliar for the South Indian Sengunthe Mahajana ..s, and is printed by A. Rangaswamy, at the Progressive .. Coral Merchant St., Madras.

129816